





இதழ் 04 ஜுலை 28 2004

சொற்கோட்டம் இல்லது செப்பம் ஒருதலையா
உட்கோட்டம் இன்மைபெறின்

July 28 2004 www.vaikarai.com



**கனடா**

இரக்கமற்ற கொடூரமான கிரிமினல?

பக்கம் 03



**தமிழ்நாடு**

மீண்டும் தொடரும் வீம்பு

பக்கம் 09



**வாழ்வியல்**

நாற்பதைக் கடக்கும் பெண்களுக்கு

பக்கம் 23



**தொடர் நாவல்கள்**

லங்காராணி
வாடைக்காற்று

பக்கம் 16 18

# ஐக்கிய இலங்கைக்குள் பேசுவதற்கு அரசாங்கம் தயார்

## - நோர்வே அமைச்சரிடம் ஜனாதிபதி தெரிவிப்பு

ஐக்கிய இலங்கைக்குள் இடைக்கால நிர்வாக சபை குறித்து பேச்சுகளை மீண்டும் ஆரம்பிக்கவும், இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வொன்றைக் காண்பதற்கும் அரசு தயாராயிருப்பதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நோர்வே அனுசரணையாளர்களிடம் தெரிவித்துள்ளார். இலங்கைக்கு நான்கு நாள் விஜயமொன்றை மேற்கொண்டு கடந்த ஞாயிற்றுக்கிழமை கொழும்பு வந்த நோர்வேயின் பிரதி வெளிவிகார அமைச்சர் விதார் ஹெல்கீசன் நேற்று மாலை ஜனாதிபதியைச் சந்தித்தார்.நேற்று முன்தினம் திங்கட்கிழமை கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வனைச் சந்தித்திருந்த அமைச்சர் ஹெல்கீசன், மேற்படி சந்திப்பு குறித்து ஜனாதிபதிக்கு சுருக்கமாக விளக்கமளித்தார்.இதன் போது, அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையே மீண்டும் நேரடி சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்கும் விதத்தில் பேச்சுக்கான உத்தேச நிகழ்ச்சி நிரல் குறித்து எதுவித



உடன்பாடும் எட்டப்படவில்லையெனத் தெரிவித்த ஹெல்கீசன், ஆனாலும் போர் நிறுத்த உடன்பாடு தொடர்பில் தங்களது உறுதிப்பாட்டை புலிகள் தெரிவித்ததாகவும் குறிப்பிட்டார்.இதனைச் செவிமடுத்த ஜனாதிபதி, ஐக்கிய இலங்கைக்குள் இடைக்கால நிர்வாக சபை குறித்து, மீண்டும் பேச்சுகளை ஆரம்பிக்கவும், இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வோன்றைக் காண்பதற்கும் அரசு தயாராயிருப்பதாக ஹெல்கீசனிடம் சுட்டிக்காட்டினார்.அத்துடன், இதன் அடிப்படையில் பேச்சுகளை மீண்டும், ஆரம்பிக்க புலிகள் உடன்படுவார்களென அரசு கருதுவதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.இதே நேரம் போர் நிறுத்த உடன்படிக்கை, தொடர்பில் அரசின் உறுதிப்பாட்டை மீண்டும், தெரிவித்த ஜனாதிபதி அண்மைக் கால வன்முறைச் சம்பவங்களையும் வன்மையாகக் கண்டித்தார்.இந்தச் சந்திப்பில் விதார் ஹெல்கீசனுடன், இலங்கைக்கான நோர்வே தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கார், தூதரக சிரேர்ட அதிகாரியான கஜெஸ்ரி ரொம்ஸ்டால் ஆகியோர் கலந்து கொண்டனர்.ஜனாதிபதியுடன், அரச சமாதானச் செயலகப் பணிப்பாளர் ஜயந்த தானபால, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் எச். எம். ஜி. எஸ். பல்லிககார ஆகியோரும் கலந்து கொண்டனர்.சுமார் ஒரு மணிநேரத்திற்கும் மேலாக இந்தச் சந்திப்பு நடைபெற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# ஈராக்கில் பாரிய குண்டுத்தாக்குதல்

## - 68 பேர் உயிர் இழந்தனர்

பாக்தாத்தில் இருந்து 53 கி.மீ தொலைவிலுள்ள பக்கூபா என்னும் நகரில், போலீஸ் படைக்கு ஆள்திரட்டும் மையம் ஒன்றிற்கு முன்னால் இடம் பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் 68





பேர் கொல்லப்பட்டும் பலர் காயம் அடைந்தும் உள்ளனர். அமெரிக்கா ஈராக்கியர்களிடம் கடந்த ஜுன் 28ம் திகதி அதிகாரத்தை கையளித்தபின் நடைபெற்ற மோசமான குண்டுத் தாக்கதல் இது. ஆள் திரட்டும் மையத்தைக் கடந்து சென்று கொண்டிருந்த பஸ் வண்டியிலேயே தற்கொலைக் குண்டுதாரி குண்டை வெடிக்க வைத்துள்ளார். பஸ்ஸில் பயணம் செய்த 21 பயணிகளும் இறந்துள்ளனர் .இறந்தவர்கள் அனைவரும் பொதுமக்களே. குண்டு வெடித்த இடத்தில் கருகியநிலையில் வாகனங்களும் மனித உடல்களும் சிதறி இருந்தன.நகரின வைத்திய சாலை காயப்பட்டோரினால் நிரம்பியிருந்தது இதேவேளை பாக்தாத்துக்கு அருகே இடம்பெற்ற இன்னமொரு குண்டுத் தாக்குதலில் 35 பேர் பலியாகியுள்ளனர். ஒரு அமெரிக்க படை வீரரும் 7 ஈராக்கிய போலீசாரும் இதில் அடங்குவர். இத்துடன் ஈராக்கில கொல்லப்பட்ட அமெரிக்க படைவீரர்களின் எண்ணிக்கை 905 ஆக உயர்ந்துள்ளது.

" நாம் ஜனநாயகத்தை நோக்கி முன்னேறிச் செல்கிறோம். எமது முயற்சிகளைக் குழப்புவதற்காக அப்பாவிப் பொதுமக்களைக் கொல்கிறார்கள். ஆனால் நாம் இவற்றை எல்லாம் கண்டு அஞ்சி பின்வாங்கப் போவதில்லை." என்றார் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஹமீட் அல் பெயட்டி. கடந்த 3 தினங்களுள் 200 க்கும் அதிகமானோர் கொல்லப் பட்டமை தீவிரவாதிகள் பலமடைந்து வருகிறார்கள் என்பதையே காட்டுகிறது.

# அகதிக் கோரிக்கை மீதான விசாரணைக் காலம் குறைக்கப்படும்

அகதிக் கோரிக்கைகள் மீது, இறுதித் தீர்ப்பு வழங்குவதற்கு எடுக்கப்படும், நீண்ட காலத்தை சுருக்குவதற்காக, புதிய நடவடிக்கைகளை மேற்கொள்ள இருக்கிறார் கனடாவின் புதிய குடிவரவு அமைச்சர். ஜுடி. ஸ்கரோ(Judy Sgro). அரசியல் தஞ்சம் கோரும், முதலாவது விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டபின், மேன்முறையீடு, மீளாய்வு, என நீண்ட காலம் எடுக்கின்றது. இக்காலத்தை சுருக்குவன் மூலம், ஒரு விண்ணப்பத்தை குறைந்த பட்சம் 2 வருடங்களில் தீர்மானிப்பதற்கான வழிமுறைகளை அறிமுகப்படுத்தப்போவதாக புதிய அமைச்சர் கூறினார். தற்பொழுது நடைமுறையில் கடைப்பிடிக்கப்படும் முறையில் அகதிக் கோரிக்கை நிராகரிக்கப்பட்ட விண்ணப்பதாரிக்கு, இம்முடிவை எதிர்த்து முறையீடு செய்ய பல வழிகள் உள்ளன. உதாரணமாக, நீதிமன்றம் தவறு செய்துவிட்டது என வாதிடலாம். மனிதாபிமான அடிப்படையில் தங்குவதற்கு அனுமதியளிக்கக் கோரலாம். தாய் நாட்டிற்குத் திருப்பி அனுப்பப் பட்டால் அங்கு தன் உயிருக்கு ஆபத்து ஏற்படும் என வாதிடலாம். இப்படியாக 6ல் இருந்து 20 வழிகள் உள்ளன மேன்முறையீடு செய்ய. இவற்றைக் பெருமளவில் குறைப்பதன் மூலம் மேன்முறையீட்டுக் காலத்தை சுருக்கலாம் என்கின்றார் அமைச்சர். ஆனால் தற்பொழுது கடைப்பிடிக்கப்படும் வழிமுறைகளில் பல குறைபாடுகள் உள்ளன. இவற்றை நிவர்த்தி செய்ய வேண்டுமாயின், முதலாவது விண்ணப்பத்தை விசாரிக்கும் I.R.B எனப்படும் குடிவரவு மற்றும் அகதிகளுக்கான சபையிடம் (Immigration and Refugee Board) மேன்முறையீடுகளை விசாரிப்பதற்கான அதிகாரங்களைக் கொண்ட இன்னுமொரு பிரிவு உருவாக்கப்பட வேண்டும் என்கிறார்கள் சில விமர்சகர்கள். இரண்டு வருடங்களுக்கு முன்னர், இவ்விடயம் ஆராயப்பட்ட போது, பெருமளவு எண்ணிக்கையான அகதிக் கோரிக்கை இன்னமும் தீர்மானிக்கப்படாமல் இருக்கையில், புதிதாக ஒரு பிரிவை ஏற்படுத்த முடியாது என்பதால் விடயத்தைப் பின்போட்டது. 2002ம் ஆண்டின் முடிவில் 53,000 கோரிக்கைகள் இருந்த இடத்தில் தற்சமயம் 30,000 கோரிக்கைகளே உள்ளன. ஆகவே, புதிய மேன்முறையீட்டுப் பிரிவொன்றை அமைப்பதற்கு மிகவும் உகந்த தருணம் எனக் கருதுகிறார் அமைச்சர். ஆனால் அதற்கு முன், மேன்முறையீடு செய்வதற்கான வழிமுறைகள் குறைக்கப்பட வேண்டுமெனக்

4 ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

VAIKARAI
வைகறை
1252 Lawrence Ave East, Unit 207, Tel: 416 385 2999
Fax 416 385 9862 Email: editor@vaikarai.com

## எதுவும் மறக்கப்படவுமில்லை யாரும் மன்னிக்கப்படவுமில்லை.

எதுவும் மறக்கப்படவுமில்லை யாரும் மன்னிக்கப்படவுமில்லை. (Nothing is Forgotten, Nobody is Forgiven). இது ஜேர்மனியில் ஹிட்லரின் கொடூர ஆட்சிக் காலத்தில் கொல்லப்பட்ட இனந் தெரியாத ஜேர்மனியரை நினைவு கூர்ந்து பேர்லின் நகரத்தில் கட்டப்பட்ட நினைவுக் கல் ஒன்றில் பொறிக்கப்பட்டுள்ள வாசகங்கள். 1983 ஜூலை மாதத்தில் தமிழர்களுக் கெதிராக கட்டவிழ்த்து வீடப்பட்ட கொடூரங்களுக்காக, இலங்கை அரசும், அரசியல் வாதிகளும் மன்னிப்பு கோரவேண்டும் என ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்கா வேண்டுகோள் விடுத்துள்ளார் என்ற செய்தியை வாசித்த போது ஞாபகத்திற்கு வந்தது மேற் கூறிய வாசகங்களே. ஒரு தனிமனிதன் இன்னுமொரு மனிதனுக்கு இழைக்கும் தவறிற்காக மன்னிப்புக் கோரலாம். பாதிக்கப்பட்டவனும், அதை மன்னித்து மறக்கலாம். ஆனால் 83 ஜூலையில் அநீதி இழைத்தவர்கள் தனிமனிதர்கள் அல்ல. பாதிக்கப்பட்டவர்களும், அவமானப்பட்டவர்களும் தனிமனிதர்கள் அல்ல. மானுடம் வெட்கித் தலைகுனியும், இக் கொடூரச் செயல்களைச் செய்தது ஓர் அரச இயந்திரம். இவ்வியந்திரத்தின் பின்னணியில் செயற்பட்டது சிங்கள மேலாதிக்கத்தை குறிக்கோளாகக் கொண்ட சிங்கள பௌத்த பேரின வாதம். ஜூலைப் படுகொலைகள் நடந்து முடிந்து 21 வருடங்கள் சென்ற பின்னரும் கூட இச் சிங்கள பௌத்த பேரினவாதம் வீரியம் குன்றாமல், இன்னும் அதிக பலத்துடன் தென் இலங்கை அரசியலிலும், சமூகத்தின் பல மட்டங்களிலும் வியாபித்து நிற்பதை யாரும் மறுக்க முடியாது. சில சமயங்களில் கொழும்பில் வீசும் காற்றில் கூட சிங்கள பேரிவாதம் கலந்து கிடப்பதை உணர முடியும்

இச் சிங்கள பௌத்த பேரின வாதத்திற்கு நீரூற்றி உரமிட்டு வளர்த்தவர்களில் ஒருவர் தான், இன்றய ஜனாதிபதி சந்திரிக்காவின், பாசமிகு தந்தையார் எஸ். டபிள்யூ.ஆர்.டி பண்டாரநாயக்கா. தனது அரசியல் சுயலாபத்திற்காக, ஒக்ஸ்போட் பல்கலைக்கழகத்துப் பட்டதாரியால் மூட்டப்பட்ட இனவாதத் தீயில் இன்றுவரை சிங்கள அரசியல் தலைவர்கள் குளிர் காய்ந்து கொண்டுதான் இருக்கின்றனர். திருமதி. சந்திரிக்கா. குமாரதுங்க இதற்கொன்றும் விதிவிலக்கானவர் அல்லர்.

1958 இல் முதலாவது இனக் கலவரத்தைத் தூண்டிவிட்டு, இனப் படுகொலைக் கலாச்சாரத்தை சிங்கள அரசியலுக்கு அறிமுகப் படுத்திய பெருமையும் இவருக்குண்டு.

கடந்த நாற்பத்தைந்து வருட வரலாற்றில் இச்சிங்கள பௌத்த பேரினவாதத்தை எதிர்த்து வெற்றி கொள்ளக் கூடிய அரசியல் சக்தி எதனையும், சிங்கள சமூகமும் அதன் அரசியலும் தோற்றுவிக்க முடியவில்லை என்பதும், எதிர் காலத்தில் கூட அவ்வாறான ஆற்றல் மிக்க கட்சி ஒன்று தோன்றுவதற்கு சாத்தியங்களும் இல்லை என்பதும், ஓர் கசப்பான உண்மை. மாறாக, சர்வதேசியத்தை, தனது அடிப்படையாக வரித்துக் கொண்ட ட்ரொட்ஸ்கிய கட்சியான சமசமாசக் கட்சியும் சரி, ஸ்ராலினிசக் கட்சியான கம்யூனிஸ்ட் கட்சியும் சரி, சிங்கள பௌத்த பேரினவாதத்துடன் சமரசம் செய்து கொண்டு ஈற்றில் அதனுடன் சங்கமித்து தமது அடையாளத்தையும் இழந்து நிற்கின்றனர். ''இரண்டு மொழிகள் என்றால் ஒரு நாடு, ஒரே மொழி என்றால் இருநாடு'' என் தனிச் சிங்களச் சட்டம் கொண்டுவரப்பட்டபோது, கர்ஜித்த கலாநிதி. கொல்வின் ஆர். டி. சில்வா, இறுதியில் பௌத்த மதத்திற்கும், சிங்கள மொழிக்கும் முன்னுரிமை கொடுக்கும் அரசியல் யாப்பினை, 1972 இல் அறிமுகப்படுத்தினார்.

சர்வ வல்லமையும் பொருந்திய நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்ட ஜனாதிபதியும், தனது தாய் தந்தையரில் இருந்தோ, ஜே.ஆர்., பிரேமதாச போன்றவர்களிடம் இருந்தோ பெரிதாக வித்தியாசமானவர் என்று கூறமுடியாது. இவரது ஆட்சிக் காலத்தில் கொல்லப்பட்ட தமிழர்களின் எண்ணிக்கை, அழிக்கப்பட்ட தமிழரின் சொத்துக்களின் மதிப்பு, இவருக்கு முன்னிருந்தவர்களின் காலத்தில் ஏற்பட்டதைவிட பலமடங்கு அதிகம். 'சமாதானத்திற்கான யுத்தம்' என்ற அர்த்தமற்ற சொற்பதத்தை உருவாக்கியவர் இவர். கோவில்கள், தேவாலயங்கள் மீது குண்டு வீசப்பட்டதும் இவர் ஆட்சியில்தான். பள்ளி மாணவிகள் மிலேச்சத்தனமாக கொல்லப்பட்டதும் இவர் காலத்தில் தான். பிந்துனவேலா முகாமில் படுகொலை நடந்ததும் இவர் காலத்தில் தான். யாழ்குடா நாடே ஓர் திறந்த வெளிச் சிறைச்சாலை யாக்கப்பட்டதும் இவரது ஆட்சியில் தான். ஆகவே 83 ஜூலை வன்செயல்களுக்கு மன்னிப்பு கோருவதற்கு முன்னர் இவரது ஆட்சிக் காலத்தில் தமிழ் மக்கள் கட்டவிழ்த்து விடப்பட்ட அராஜகங்களுக்கு முதலில் மன்னிப்பு கோர வேண்டும்.

83 ஜூலையில் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறை இன்று வரை தொடர்கின்றது. இவற்றிற்கெல்லாம் மூல காரணமாகிய சிங்கள பௌத்த பேரினவாதம், இன்னும் வீரியத்துடன், வியாபித்து நிற்கின்றது. சுதந்திரக் கட்சியும் சரி ஜே.வி.பி.யும் சரி, ஐக்கிய தேசியக் கட்சியும் சரி. இப் பேரிவாதத்தின் வெவ்வேறு முகங்களே. ஆகவேதான் பேரினவாதம் தோற்கடிக்கப்படாமல், அரசியலில் இருந்து அகற்றப்பாமல், பேரிவாதத்தின் பிரதிநிதிகளால், 21 வருடங்களுக்கு முன்னர் பேரினவாதம் செய்த ஒரு செயலுக்காக மன்னிப்புக் கோருவது அர்த்தமற்றது.

இனவெறி தென் ஆபிரிக்காவில் இருந்து அகற்றப்பட்டபின் தான் நெல்சன் மண்டேலா மன்னிப்புப் பற்றிப் பேசினார் பாசிசம் ஜேர்மனியில் தோற்கடிக்கப்பட்ட பின்னர்தான், மன்னிப்புப் பற்றி பேசப்பட்டது. அதே போல் சிங்களப் பேரினவாதம் அகற்றப்படாமல் மன்னிப்பு பற்றி பேச முடியாது. 40,000 துருப்புக்கள் எமது மக்களின் குடியிருப்புகளை, தோட்டங்களை, கோவில்களை, பாடசாலைகளை, ஆக்கிரமித்துக் கொண்டிருக்கையில் அவர்களது துப்பாக்கிகளும், பீரங்கிளும் எம்மீது குறிவைத்துக் கொண்டிருக்கையில் மன்னித்தல் மறத்தல் பற்றி எந்தத் தமிழ் குடிமகனும் பேச மாட்டான். அப்படி யாராவது பேச வந்தால் வரலாறு அவர்களை மன்னிக்காது.

தொடர்புகளுக்கு
தொ.பே 416-385 2999
தொ.ந 416-385 9862
email editor@vaikarai.com
1252 Lawrence Avenue East
Unit 207
Toronto. ON. M3A 1C3

## என்றெமதின்னல்கள் தீர்ந்து பொய் ஆகும்!

## 'அபாயகரமான நிலையில் அகதிகள்'-

ஈழ விடுதலைப் போராட்டம் உரிமை வேண்டி ஆயுதப் போராட்டமாக முனைப்படைந்ததன் பிற்பாடு, தங்களது உயிர்களை மட்டும் காக்க வேண்டி எம்முடைய மக்கள் பல இன்னல்களையும் தாண்டி அகப்பட்ட தேசங்களில் அகதிகளாகத் தஞ்சம் புகுந்தார்கள். மேலை நாடுகளில் உள்ள சில சட்ட வரன்முறைகள் மனிதத்துவம் பற்றிய அடிப்படை நாகரிகத்தைப் பேண முனைந்ததால் அங்கு போய்க் குடியேறிய மக்களின் வாழ்க்கை அர்த்தமற்றதாக இருந்தாலும் அவலமற்றதாக இருக்கிறது. ஆனால் மரபுரிமை வழியாகத் தொடர்பென்றும், மண்ணாங்கட்டி வழியாகத் தொடர்பென்றும், அடிக்கடி பேசுகின்ற அண்டை நாடான இந்தியாவின் அகதிமுகாம்களில் எம்முடைய மக்கள் படும் துயரம் மிகவும் கொடூரமானதும், சகிக்கக் கூடியதும் அன்று.

உத்தியோகப்பூர்வ தரவுகளின்படி கடந்த மூன்று ஆண்டுகளிற்குள் மட்டும் சென்ற யூன் 30 ஆம் திகதி வரை, இந்தியாவில் இருந்து 822 குடும்பங்களைச் சார்ந்த 2449 பேர் குடாநாட்டிற்குள் வந்திருக்கிறார்கள். இவர்களில் பெரும்பாலானோர் சட்டத்திற்கு முரணான வகையிலேயே உயிரைப் பணயம் வைத்து கடல்வழி ஊடாக நாட்டிற்குள் வந்திருக்கிறார்கள். இவ்வாறு பெரும் எண்ணிக்கையில் குறுகிய காலப்பகுதிக்குள் உயிரிற்காக ஓடிய மக்கள் உயிர் பற்றிக் கூட எண்ணாது நாடு திரும்ப முயற்சிப்பதற்கான அவசியத்தை வெளி உலகிற்கு தெரியப்படுத்தவேண்டியது அவசரமானதும், தேவையானதுமொன்றாகும்.

இது குறித்து, இந்தியாவில் வாழமுடியாமல் இடர்ப்பட்டு பல சோதனைப்பாதைகளூடாக இங்கு வந்து, இங்கும் அதே போன்றதான ஓர் வாழ்வை நடாத்திக்கொண்டிருக்கும் மக்கள் செறிந்து வாழும் இடமான யாழ்ப்பாணத்தின் கரையோரக் கிராமமான குருநகர் 'றெக்லமேஷன்' பகுதியில் உள்ள மக்களை அணுகி வினவினோம். அமைப்பியல் ரீதியிலேயே நோய்க்கிருமிகளைத் தெளிக்கும் அவர்களது வாழ்விடங்கள் போர்ப்புயலின் அதிவேகப் பகுதியைப் பிரதிபலித்தன.

''எங்களுக்கு நிவாரணம் தருவதாக எத்தனையோ பேர் வந்தார்கள். தரவுகள் எடுத்ததோடு சரி, நீங்களும் நிவாரணத்துக்கா''?, என்ற ஏமாற்றமும், கேலியும் கலந்த வரவேற்புடன் ஆரம்பித்த அவர்களது உரையாடல் இவர்கள் தொடர்பான செயற்பாடுகளில் அரசும், சர்வதேச நிறுவனங்களும் நடந்து கொள்ளும் மனிதாபிமான மற்ற, அசிரத்தையான போக்கை தெரிவிப்பதாக இருந்தது. ஏறத்தாள 14 வருடங்கள் நாட்டை விட்டு இந்தியாவிற்கு அஞ்ஞாதவாசம் போய், மீண்டு, கேள்விக்குறியாக வந்திருக்கும் அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில்,

90களில் இடம் பெற்ற இனக்கலவரத்தின் போது எமது கிராமம் விமானத்தாலும், கடல்வழியாலும் பெரிதும் அழிக்கப்பட்டது. இங்கிருந்து நாச்சிக்குடாவிற்கு கால்நடையாகவே சென்றோம். செல்லும் வழியே நாம் அனுபவித்த துன்பங்களும் நடைமுறைப்பிரச்சினைகளும் என்றும் மறந்து விடக் கூடியதொன்றல்ல.

அந்தக் காலத்தில் அதாவது 90களில் 550 ரூபா பணம் கொடுத்து தனுஸ்கோடியை அடைந்தோம். இலங்கையில் இருந்து வரும் அகதிகளுக்கென்றோ என்னவோ.., இந்திய அரசு புறம்போக்கு நிலங்களில் அகதி முகாம்களை அமைத்திருந்தது. தற்போதும் ஒரு பெரிய மாற்றம் என்றில்லை, மண்டபம் முகாம், பாண்டிச்சேரி என்று எமது முகாம் மாற்றப்பட்டுக் கொண்டிருக்கும்.

இந்தியாவில் வாழும் [illegible]ில் நாம் பெரும்பாலும் நாட்கூலிகளாகவே தொழில்புரிந்தோம். வேலை தேடும் படலம் என்பது மிகக்கடினமான வேலை. தினக்கூலி வேலையும் கிழமைக்கு 2 தினங்கள் தான் கிடைக்கும். அதற்கே பலரின் சிபாரிசை வேண்டத் தவங்கிடந்தோம். நாளொன்றிற்கு 100 ரூபா கூலிதான் கொடுப்பார்கள். மேசன் வேலை, கல் உடைக்கும் வேலை என்பனவே எம்முடைய பிரதான தொழிலாக இருந்தன. அதனைவிட முகாமில் உள்ளவர்களில் பெரியவர்களிற்கு 12kg மும் சிறுவர்களுக்கு 6 Kgமும் மாதந்த உணவிற்காக அரிசி என்ற ஓர் வடிவத்தில் வழங்கப்பட்டது. எமக்குக் கொடுக்கும் அரிசியைத்தான் இந்தியாவின் நடுத்தர வர்க்கக் குடும்பங்கள் மாட்டிற்கு போடுவதாக அறிந்தோம்.

உண்மையில் எம்மைக் கவனிப்பதற்கென்று உரிய பணமும், தரமான பொருட்களும் எமக்கு கொடுப்போருக்கு வழங்கப்படுகின்றது. ஆனால் நல்ல அரிசியைத் கடைக்கு விற்றுவிட்டு. எமக்கு மிகவும் பாவிக்க முடியாத நிலையில் உள்ள அரிசியையே கொடுப்பார்கள். இதுபற்றி யாரும் கேள்வி கேட்க முனைந்தால் முகாமை விட்டு உடனடியாக வெளியேற்றப்படுவார்கள். அல்லது மிரட்டப்படுவார்கள்.

இவ்வாறு நடப்பது தெரிந்திருந்தும் இந்திய அரச அதிகாரிகள் பாராமுகமாகவே நடந்து கொள்வார்கள். இவற்றை வாங்குவதற்கு குடும்பத் தலைவனுக்கு கிழமை ஒன்றுக்கு 100 ரூபாவும், 12 வயதிற்குட்பட்டவர்களிற்கு 72 ரூபாவும் வழங்கப்படும். இந்தப் பணத்திற்குள்தான் நாம் எம்முடைய வாழ்க்கையைச் சமாளிக்க வேண்டும்.

கிழமைக்கு 2 நாட்கள் மட்டுமே கிடைக்கின்ற கூலிவேலையும் அகதி முகாமை பொலிசார் சோதனை இடுங் காலங்களில் அங்கே நிற்க வேண்டும் என்பதால் தடைப்படும். அத்துடன் எவ்வளவு கஸ்ரப்பட்டு கூலி வேலை செய்தாலும் சில முதலாளிமார் கூலிதர மறுத்துவிடுவார்கள். அவர்களிற்கென்று குப்பத்தைச் சேர்ந்த அடி ஆட்கள் உண்டென்பதால் நாம் கொடுத்ததை மட்டுமே வாங்குவோம். எதனையும் திருப்பிக் கேட்பதில்லை.

எம்முடைய முகாம் அரசால் பாவிக்க முடியாது என்று கைவிடப்பட்ட புறம்போக்கு நிலத்திலேயே அமைந்துள்ளது. முகாமின் ஒரு புறத்தில் எரிக்கும் சுடலை, மறுபுறத்தில் தாக்கும் சுடலை, இந்த சுடுகாட்டிற்கும், இடுகாட்டிற்கும் நடுவில் அமைந்துள்ள எம்முடைய முகாமில் அனேகமான நேரங்களில் பிணவாடையே அடிக்கும். இந்தப் பகுதிகளில் சுடுவதற்கோ புதைப்பதற்கோ பணம் கொடுப்பது குறைவென்பதால் அனேகமான குப்பத்து மக்கள் இந்த இடங்களிலேயே தம்முடையவர்களின் இறுதிக்கடன்களை நிறைவேற்றுவார்கள். காலைக் கடனையையும் கூட.

மேற்குறிப்பிட்ட சுடலைகளில் தற்சமயம் காவலாளி வரும் சந்தர்ப்பத்தில் எம்முடைய முகாமிற்கருகில் புதைத்துவிடுவார்கள். அரையும் குறையுமாக புதைக்கப்பட்ட பிணவாடையினாலேயே எம்முடைய பல மக்கள் நோய்களிற்குள்ளாகி இருக்கிறார்கள். இந்தக் குப்பத்து மக்களையே இந்திய அரசியல்வாதிகள் அரசியற்கொலைகளைச் செய்வதற்குரிய ஆட்களாகப் பயன்படுத்துவதால் எந்தப் பொலிஸ்ம் அதிகாரியும் எதுவும் பேசுவதில்லை.

இந்த நெருக்கடிக்குள்ளும் எங்கள் பிள்ளைகளைப் படிப்பிப்பதிலேயே நாம் அதிக அக்கறை செலுத்தினோம். எம்முடைய தாங்குதிறனுக்கு அப்பாற்பட்ட இந்தப் போராட்டத்தில் வெற்றி பெறுவதற்காகவே எம்முடைய காலம் முடிந்தாலும் பிள்ளைகளாவது படிக்கவேண்டும் என்ற எண்ணத்தில்

8ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெருக்கடிக்குள் பாலஸ்தீனிய விடுதலை இயக்கம்

10 ஆண்டுகளுக்கு முன்னர் பாலஸ்தீனியத் தலைவர் யாசீர் அரபாத் மொறொக்கோவில் இருந்து தாயகம் திரும்பியது, நீண்ட பாலஸ்தீனிய விடுதலைப் போராட்டத்தின் இறுதிக் கட்டமாகவே கணிக்கப்பட்டது. ஓர் சுதந்திரமான பாலஸ்தீனிய தேசத்தின் உருவாக்கம் பற்றி பலத்த எதிர்பார்ப்புக்கள் வெளிப்பட்டன. இஸ்ரேல் எனும் நாடு உருவாக்கப்பட்டதன் விளைவாக, ஏற்பட்ட பாலஸ்தீனியப் பிரச்சனைக்கு ஓர் இறுதித் தீர்வு ஏற்பட்டுவிடும் நம்பிக்கை தோன்றியது. நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் இரு தரப்பினருக்குமிடையே ஏற்பட்ட வரலாறு முக்கியத்துவம் வாய்ந்த இணக்கப்பாடு, நோர்வேயின் சமாதான முயற்சிகளுக்குக் கிடைத்த பெரு வெற்றியாகக் கருதப்பட்டது. இருதரப்புத் தலைவர்களும் சமாதானத்திற்காக நோபல் பரிசு வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர். ஆனால் இவ் எதிர்பார்ப்புகள், நம்பிக்கைகள்





யாவும் தவிடு பொடியாகி இன்று மீண்டும் ஓர் உள்நாட்டு யுத்தத்தின் விளிம்பில் நிற்கின்றது பாலஸ்தீனம். சமாதான முன்னெடுப்புக்கள் கைவிடப்பட்டு கடந்த நான்கு வருடங்களில் மூவாயிரத்திற்கும் அதிகமான பாலஸ்தீனியர்கள் கொல்லப் பட்டுள்ளனர். ஓர் சுதந்திரப் பாலஸ்தீனியத்தைக் கட்டியெழுப் புவதற்காக அமைக்கப்பட்ட பாலஸ்தீனிய அதிகார சபை இன்று பலமிழந்து, அதன் தலைவர் மேற்குக் கரையில், தலைமைச் செயலகத்திற்குள் முடக்கப்பட்டுள்ளார். இதனால் ஏற்பட்ட வெற்றிடத்தில் பல்வேறு ஆயுதக் குழுக்கள் தோன்றியுள்ளன. சட்டம் ஒழுங்கின்மை, வன்முறை பரவலாக உள்ளது. மூன்றில் இரண்டு பகுதி மக்கள் வறுமைக் கோட்டிற்கு கீழேயே வாழ்கின்றனர். தமது தலைவர் களிடையேயும், அதிகாரிகளிடையேயும் காணப்படும் ஊழல்களைச் சகிக்க முடியாத மக்கள் தமது கோபத்தையும், விரக்தியையும் வெளிப்படையாகவே, காட்டத் தொடங்கியுள்ளனர். வெவ்வேறு பாலஸ்தீனியக் குழுக்களுக்குள் ஓர் முறுகல் நிலை தோன்றியிருக்கும் இந் நிலையில் தான் இஸ்ரேல் அரசாங்கமும் காசாவில் நிலைகொண்டிருக்கும் தனது படையணிகளையும் வாபஸ் பெறப் போவதாக அறிவித்துள்ளது. இவ்வாறு உருவாகும் வெற்றிடத்தை நிரப்புவதற்கு பாலஸ்தீனிய போராளிக் குழுக்கள் தமக்குள் மோதிக் கொள்வர் என இஸ்ரேல் எதிர்பார்க்கின்றது.

இந்தப் பின்னணியில் தான் காசாப் பகுதியில் தோன்றியுள்ள குழப்பகரமான நிலைமைக்கு விளக்கங்களைத் தேடவேண்டியுள்ளது. யாசீர் அரபாத்தின் தலைமையிலான பாலஸ்தீனிய அதிகாரசபைக்குள் செல்வாக்குச் செலுத்தும் மூத்த தலைவர்களும் அவர்களது விசுவாசிகளும் ஒரு பக்கமும், தலைவர் அரபாத்திற்கு மட்டும் விசுவாசமான அல்.அக்சா அணியினரும், பாதுகாப்புப் படையினுள் உள்ள இளைய தலைமுறையினரும் மறுபக்கத்திலும் பல்வேறுபட்ட விடயங்களில் கருத்து முரண்பட்டு நிற்கின்றனர். இவ்விரு தரப்பினருக்கும் இடையில் நடக்கும் பலப் பரீட்சை இதுவென்பது தான் அவதானிகள் கருத்தாக உள்ளது. பாலஸ்தீனிய



அதிகார சபையின் மூத்த தலைவர்கள் ஊழல் மிகுந்தவர்கள் என்பது பரவலாக மக்கள் மத்தியில் நிலவி வரும் கருத்து. ஓர் உறுதியான, பலமான, பாலஸ்தீனய தேசத்தை கட்டி எழுப்ப, ஊழலற்ற நீதியான ஓர் நிர்வாகத்தை கட்டி அமைக்க, பாலஸ்தீனிய மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த, அவர்களின் சமூக பொருளாதார வாழ்க்கையை இவர்கள் மேம்படுத்தத் தவறிவிட்டார்கள் என்பது மறுக்க முடியாத உண்மை. பெரும்பான்மையான மக்கள் வறுமைக் கோட்டிற்கு கீழே வாழும் போது தீவிரவாத இயக்கங்கள் அங்கு தலைதூக்குவதும் செல்வாக்குச் செலுத்துவதும் தவிர்க்க முடியாமல் போய்விடுகிறது. ஒரு காலத்தில் மதச்சார்பற்ற விடுதலை இயக்கங்களான, அல்.ஃபற்றா, பி.எ.ஃப்.எல்.பி போன்றவற்றின் கோட்டைகளாக விளங்கிய, காசாப் பகுதி அகதி முகாம்கள், இன்று ஹமாஸ், அல்.அக்சா அணி போன்ற இஸ்லாமிய இயக்கங்களின் ஆதிக்கத்துக்குள் படிப்படியாக வந்து கொண்டிருக்கின்றன. இந்த அபாயபரமான, நிலை மாற்றத்தை புரிந்து கொண்டதால் அமெரிக்காவும் ஏனைய ஐரோப்பிய நாடுகளும், பாலஸ்தீனிய அதிகாரசபையை மறு சீரமைத்து, ஜனநாயக மயமாக்கும்படி யாசீர் அரபாத்தை நிர்ப்பந்தித்து வருகின்றது. மேற்கு நாடுகளால் ஓரளவுக்கு ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. பிரதமர் அஹ்மட் குரெயிடம் அதிகாரங்களை கையளிக்கும்படி நெருக்குதல் கொடுக்கப்பட்டு வருகின்றது. இஸ்ரேலும் தன்னுடைய பங்குக்கு யாசீர் அரபாத் மீது, தனது பாணியிலான, இராணுவ நெருக்கடியைத் தளர்த்தவே இல்லை.

இப்படியாக உள்நாட்டிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் கொடுக்கப்பட்ட நெருக்குவாரத்தை சமாளிப்பதற்காகத்தான் பாலஸ்தீனிய அதிகாரசபையை மறுசீரமைக்கப் போவதாக யாசீர் அரபாத் அறிவித்தார். கடந்த 40 ஆண்டுகளாக, மத்தியகிழக்கில் வீசிய அரசியற் சூறாவளிகளுக் கெல்லாம் முகம் கொடுத்து அனுபவப்பட்டவர் திரு. அரபாத். ஒருவருக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடியான நிலைமையைக் கூட தமக்கு எவ்வாறு சாதகமாக்கிக் கொள்ளலாம் என்பதை திரு. அரபாத்திடம்தான் கற்றுக்கொள்ள வேண்டும். பாலஸ்தீனிய அதிகார சபையின், பாதுகாப்புப் பிரிவின் மூன்று பகுதிகளையும் அதாவது போலீஸ், புலனாய்வுத்துறை, மற்றும் மக்கள் பாதுகாப்பு ஆகியவற்றில் பாரிய மாற்ற ங்களை அறிவித்தார். இதற்கு முன்னர் காசாப் பகுதியின் பிரதம பாதுகாப்பு அதிகாரியாக இருந்த, இன்னுமொரு அரபாத் விசுவாசியான ராசிக் அல் மஜிடாவை பதவி நீக்கம் செய்துவிட்டு தனது நெருங்கிய உறவினரும், புலனாய்வு த்துறைக்கு பொறுப்பாக இருந்தவருமான, மூசா அரபாத்தை காசாப்பகுதியின் பாதுகாப்புக்கு பொறுப்பானவராக பதவி உயர்வு கொடுத்தார். தன்னுடை விசுவாசி ஒருவரை பதவியிலிருந்து நீக்கி இன்னுமொரு விசுவாசியை பதவியில் அமர்த்துவதன் மூலம் அதிகாரங்கள் கைநழுவிப் போகாமல் பார்த்துக்




கொண்டார். ஆனால் இம்முறை அது எதுவுமே மக்கள் மத்தியில் எடுபடவில்லை. மாறாக ஆங்காங்கே அரபாத் விசுவாசிகளுக்கும், ஏனையவர்களுக்கும் இடையில் மோதல்கள் வெடித்தன. தனது நடவடிக்கைகள் ஓர் உள்நாட்டு யுத்தத்தை தோற்றுவித்துவிடும் அபாயகரமான நிலைமை தோன்றிய போது, அரபாத் தனது நகர்வுகளில் இருந்து பின்வாங்கி முசா அரபாத்தை பதவியிறக்கி ராசீக் அல் மஜிடாவை மீண்டும் காசாப் பகுதியின் பிரதம பாதுகர்பபு அதிகாரியாக நியமித்தார். ஆக மொத்தத்தில் யாசீர் அரபாத்தின் மறுசீரமைப்பு என்பது தனது விசுவாசிகளின் பதவிகளை ஏற்றியதும் இறக்கியது அல்லாமல் அடிப்படையில், பரந்துபட்ட மக்கள் வாழ்வில் ஓர் மாற்றத்தை உருவாக்கும் நோக்கத்தை கொண்டிருக்கவில்லை.

70 வயதான யாசீர் அரபாத் ஒரு புற்றுநோயாளி, தனது வாழ்க்கை முழுவதையும் பாலஸ்தீனத்தின் விடுதலைக்காக அர்ப்பணித்தவர். ஓர் பாலஸ்தின தேசத்தின் பிதாவாக கணிக் கப்படவேண்டியவர். இவாது அல் ஃபற்றா இயக்கம் உலகின் பலபாகங்கில் விடுதலை இயக்கங்களுக்கு உந்து சக்தியாகவும் முன்மாதிரியாகவும் இருந்தது. தனது வாழ்க்கையின் இறுதிக் கட்டத்தில் இவ்வாறான நெருக்கடிக்குள்ளாயிருப்பது கவலை அளிப்பதாக இருந்தாலும் வரலாறு ஒரு பொழுதும் தன்மனிதர்களுக்காக வளைந்து கொடுப்பதில்லை. இதற்க யாசீர் அரபாத் ஒள்றும் விதிவிலக்கல்ல.



8ம் பக்கத் தொடர்ச்சி (அபாய...)

சட்டபூர்வமாக அவர்களது பெயர்கள் அகதிகள் பெயர்ப்பட்டியலில் இருந்து நீக்கப்படாததால் அவர்களிற்குரிய கொடுப்பனவுகள் இன்னமும் முகாமிற்கு வழங்கப்படுகிறது. அந்தப் பணத்தை எல்லாம் யார் சுருட்டிக் கொள்கிறார்கள்? அகதிகளுக்கென்று தனியாக ஒரு கப்பலை ஒழுங்கு செய்து ஏன் இங்கு பாதுகாப்பாகக் கொண்டு வர முடியாது? அதனைவிட மக்களின் நலனிற்கென்று அரச சார்பற்ற நிறுவனங்களிற்கு வழங்கப்பட்ட பணத்தில் அரைவாசிக்கும் மேற்பட்ட தொகை சென்ற ஆண்டில் பயன்படுத்தப்படாமல் திருப்பி அனுப்பப்பட்டுள்ளது.

உண்ண உணவில்லாமல் இருக்கும் அகதிகளிற்கான உடனடித்தேவை வெறுங்குடமோ, பாயோ, அல்ல. இவற்றால் வயிற்றை நிரப்ப முடியாது. வேண்டுமெனில் இவற்றிற்காக செலவழிக்கப்பட்ட தொகை உங்களுடைய Individual progress report ற்கு பலமாக இருக்குமே தவிர மக்களிற்கு பலன் தருவதாக இருக்காது. வந்துள்ள அகதிகளிற்கென்று சுயதொழில் ஊக்குவிப்பிற்கான பணத்தொகை வழங்கப்படவேண்டும். அல்லது தொழில் மேற்கொள்வதற்குரிய உபகரணங்கள் வழங்கப்பட வேண்டும். இப்படித்தான் முன்னேற வேண்டுமென்று காற்றிலே விளக்கினாற் போதாது. கைகளிலும் உரியவற்றைக் கொடுக்கவேண்டும்.

தம்முடைய பிரதேசத்தில் அடிப்படை வசதிகளுடன் வாழ்வதற்கு மக்களிற்கு உரிமை இருக்கிறது. இதனை "வாழ்வதற்கான உரிமை" என்பார்கள். மனித உரிமை சார்ந்த அமைப்புகள் முதலிற் செய்ய வேண்டியது இதனைத்தான்.

உலகளாவிய ரீதியில் மிகப்பலம் வாய்ந்த அமைப்பாக உள்ள மனித உரிமைகள் ஆணைக்குழு இலங்கை இந்திய அரசுகளுடன் பேசி சொந்த நாட்டில் வாழ்வதற்கான உரிமையைப் பெற்றுக் கொடுப்பதற்காக அரசுகள் மீது அழுத்தத்தைப் பிரயோகிக்கமுடியும். ஆசிரிய இடமாற்றங்களிலும், அலுவலகப் பிரச்சினைகளிலும் அதிகமாக மூழ்கிப் போவதிலும் இது மனித நேயம் மிக்கதாக இருக்கும்.

வந்திறங்கிய அகதிகளில் சராசரியாக சிறுவர்கள் இருக்கிறார்கள். போஷாக்குக் குறைந்த நிலையில் நோய் எதிர்ப்பு சக்தி அற்று வாடுகின்ற இச்சிறுவர்கள் மீது பால்மா கொடுத்துத் தம்மைப் பிரசித்திப்படுத்துகின்ற சிறுவர் காப்பக நிறுவனங்கள் கருணைக் கண்ணைத் திருப்புதல் காருண்யமானதாகும். வெளிநாடுகளில் இருந்து இங்கே சேவை செய்ய வந்த உங்களை நாம் 'Working holiday makers' ஆக இனம் காண விரும்பவில்லை. ஆகையால் நீங்கள் வந்திருக்கின்ற தேசத்தின் மக்களிற்கு தற்போது எது உடனடித்தேவை என்பதை நீங்களும், உங்களது மேய்ப்பரும், அரசுகளும் அறிந்து திட்டங்களைச் செயற்படுத்தல் நாட்டின் நிலையான சமநிலைக்கு வித்திடும் என்று நம்புகிறோம்.

A2Z
A2Z Financial & Taxation Solutions.
Accounting, Bookkeeping & Tax Returns
உங்கள் வியாபார நிறுவனத்திற்கான வரவு செலவு கணக்குகள்
மற்றும் வியாபார, தனிநபர் வருமான வரி சேவைகளுக்கு....
அழையுங்கள்: Madhu (416)997-3114 Kenga (416)695-3973

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காசேமி கொலை வழக்கில் சந்தேக நபர் விடுதலை

கனேடிய புகைப்படப் பிடிப்பாளர் சஹ்ரா காசேமி ஈரானிய போலீஸ் விசாரணைகளின் போது கொல்லப்பட்டது தொடர்பாக, நடாத்தப்பட்ட வழக்கை திடீரென நீதிபதி முடிவுக்குக் கொண்டு வந்ததை அடுத்து, குற்றஞ் சாட்டப்பட்ட புலனாய்வுத்துறை அதிகாரி முகமத் ரேசா, அஹ்மடி என்பவரை நீதிமன்றம் விடுதலை செய்தது. இவ் வழக்கு தொடர்பாக ஈரானிய அரசும், நீதித்துறையும் செயற்பட்ட முறைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக, கனடா அரசு தனது ஈரானுக்கான தூதுவரை திருப்பி அழைத்திருந்தது. இருப்பினும் பலரும் எதிர்பார்த்தபடியே, குற்றம்






சாட்டப்பட்டவர் ஆதாரங்கள் போதாது என்ற அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டார். கொல்லப்பட்ட சஹ்ரா காசேமியின் சார்பில் வாதாடிய சட்டத்தரணிகளில் ஒருவரான, சமாதானத்திற்கான நோபல் பரிசு பெற்ற ஷிரின் எபடி "இதை நாம் இப்படியே விடப்போவதில்லை. கடைசி மூச்சு உள்ளவரை போராடுவோம்'' என பத்திரிகையாளரிடம் தெரிவித்தார். இதேவேளை நேற்றிரவு சி.பி.சி. (C.B.C) தொலைக்காட்சிக்கு பேட்டி அளித்த காசேமியின் மகன் ஸ்ரெ.ஃபான், இவ்வழக்குத் தொடர்பாக கனேடிய அரசு நடந்து கொண்ட விதம் வெட்கத்துக்குரியது எனக் குறிப்பிட்டுள்ளார். "நான் ஒரு கனேடியன் என்பதையிட்டு மிகவும் பெருமைப்படுபவன். ஆனால் இவ் விடயத்தில் கனேடிய அரசு எடுத்துக்கொண்ட நிலைப்பாடு வெட்கத்துக்குரியது. இதில் சம்பந்தப்பட்ட கனேடிய அதிகாரிகள் யாவரும் முட்டாள்கள் ஆக்கப்பட்டுள்ளார்கள்" என மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக கனேடிய வெளிவிவகார அமைச்சர் பியர் பெற்றக்றூ (Pierre Pettigrew) கருத்து வெளிடுகையில், '' உண்மையான குற்றவாளிகளைக் கண்டு பிடித்து நீதியை நிலைநாட்டுவதற்கு இவ்வழக்கு விசாரணை தவறிவிட்டது. நீதியான ஓர் விசாரணையை ஈரானிய அரசு மேற்கொள்ள வேண்டும் என நாம் கோரியுள்ளோம்.'' என ராஜதந்திர மொழியில் தெரிவித்திருந்தார். கனேடிய வெளிவிவகார அமைச்சின் நிலைப்பாடு தொடர்பாக, ஸ்ரெ.ஃபான் கசேமி "ஓர் கனேடியப் பிரஜை கைது செய்யப்பட்டு 72 மணித்தியாலங்கள் விசாரணை செய்யப்பட்டு சித்திரவதைக் குள்ளாகி, கொல்லப்பட்டுள்ளார். அனைத்தையுமே மூடி மறைக்கும் விதத்தில் ஈரானிய நீதித்துறை செயற்பட்டுள்ளது. கனேடிய அதிகாரிகள் அவமதிக்கப்பட்டு முட்டாளாக்கப்பட்டுள்ளனர். எமது அரசோ இன்னமும் கோரிக்கைகளை விடுவித்துக்கொண்டே இருக்கிறது. இதையிட்டு நான் கோபப்படாமல் வேறு என்ன செய்ய முடியும் '' என வருத்தத்துடன் தெரிவித்தார்.

இது இப்படியிருக்க, ஈரானிய அரசு இறந்தவரின் குடும்பத்தாருக்கு நஷ்ட ஈடாக பணம் கொடுக்க முன்வந்திருப்பது மேலும் சர்ச்சையை கிளப்பியுள்ளது. இஸ்லாமிச் சட்டப்படி இறந்தவரின் குடும்பத்திற்கு "இரத்தப் பணம்'' (Blood money) என அழைக்கப்படும் நஷ்ட ஈட்டினைச் செலுத்தி வழக்குகளில் இருந்து விடுபடலாம். கொல்லப்பட்டவர் முஸ்லீமாக இருந்தால் இத்தொகை 24.000 அமெரிக்க டொலர்களாகவும், கிறிஸ்தவ, பார்சி, மற்றும் பெண்களாக இருந்தால் 12,000 டொலராகவும் நிர்ணயிக்கப் பட்டுள்ளது. நஷ்ட ஈடாகப் பணம் கொடுக்க முன்வந்திருப்பது நீதியான தீர்ப்பினை, நீதிமன்றம் வழங்கவில்லை என்பதை ஈரானிய அரசு ஏற்றுக் கொண்டுள்ளமையே காட்டுகிறது என்கிறார்கள் காசேமியின் குடும்பத்தவர். ஈரானில் இஸ்லாமிய அடிப்படைவாதிகளின் ஆதிக்கத்தின் கீழ் செயற்படும் நீதித்துறைக்கும், ஏனைய அரச துறைகளில் செல்வாக்குச் செலுத்தும் சீர்திருத்தவாதிகளுக்கும் இடையில் ஓர் பலப் பரீட்சை கடந்த வருடங்களாக நடந்து வருகிறது. இப் பலப் பரீட்சையின், இன்னுமொரு வெளிப்பாடே, காசேமியின் மரணத்தால் ஏற்பட்ட சர்ச்சைகள் என்கிறார்கள் அவதானிகள்.

1ம் பக்கத் தொடர்ச்சி(அகதிக் கோரிக்கை)

கருதுகிறார். ஓர் அகதிக் கோரிக்கை, நியாயமானதும், சட்டபூர்வமானதும் எனில் இரண்டு வருடங்களுக்குள் முடிவு செய்யப்பட்டு விட வேண்டும். ஆறு, ஏழு வருடங்கள் எடுப்பது என்பது ஏற்றுக்கொள்ள முடியாததொன்று. அகதிக் கோரிக்கை, ஏற்றுக் கொள்ளப்படாவிட்டால், மேன்முறையீட்டுக் காலத்தை குறைப்பது தான் இவ்விண்ணப்பதாரர்களுக்கு நாம் செய்யும் உதவியாக இருக்கும் என்றார் அமைச்சர். டிசம்பர் மாதம் 1995ம் ஆண்டு அகதிக் ரோகரிக்கை நிராகரிக்கப்பட்டு நீண்ட காலமாக மேன்முறையீடுகள் செய்து கொண்டிருந்த அல்ஜீரியாவைச் சேர்ந்த அஹ்மட் ரேசாம் என்பவர், வெடிமருந்துகள் நிரம்பிய வாகனம் ஒன்றை அமெரிக்காவுக்குள் கொண்டு செல்ல எத்தனிக்கையில் கைது செய்யப்பட்டார். கனடாவில், அகதிக் கோரிக்கை தொடர்பான, கொள்கைகள், நடைமுறைகள் அமெரிக்காவின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக உள்ளது என அமெரிக்க அதிகாரிகள் பல தடவைகளில் விசனம் தெரிவித்துள்ளார்கள். புதிய அமைச்சரின் நடவடிக்கைகள் எந்த அளவிற்கு மாற்றங்களைக் கொண்டு வரும் என பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

# “ஓர் இரக்கமற்ற கொடூரமான கிரிமினல்.”

ரொரன்ரோ நகரை பெரும் பரபரப்புக்குள்ளாக்கிய விடயங்களுள், ஒன்பது வயதுச் சிறுமி சிசிலியா சாங் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டமையும் ஒன்று. கடந்த ஒக்டோபர் மாதம், இச் சிறுமி, தனது படுக்கை அறையில் இருந்து காணமற் போயிருந்தார். நகரம் முழுவதும் சல்லடை போட்டுத் தேடியும், தகவல் தருபவர்களுக்கு 50,000 டொலர் சன்மானம் அளிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டும் கூட குற்றவாளியைக் கண்டுபிடிக்க முடியாமல் இருந்தது. மார்ச் மாதம் 27ம் திகதி, மிசிசாக்காவில் ஓர் ஆற்றுக்கு அருகாமையில்


சிசிலியா


சென்

சிசிலியாவின் உருக்குலைந்த சடலம் கண்டு பிடிக்கப்பட்டது. இறுதியில், காணாமல் போய் 9 மாதங்களுக்குப் பின்னர், 21 வயதான, சென் என்பவரைக் கைது செய்கதுடன், நீண்டதொரு புலன் விசாரணை முடிவுக்கு வந்துள்ளது. ஏறத்தாள 50.000 பேர்களிடம் கேள்விகள் கேட்கப்பட்டுள்ளது. 100.000 மணித்தியாலங்களை, பொலீஸ் அதிகாரிகள் இதற்காக செலவிட்டுள்ளனர்.

சந்தேக நபர் கைது செய்யப்பட்டதை தெரிவிப்பதற்காக கூட்டப்பட்ட செய்தியாளர் மகாநாட்டில், விசாரணைகளுக்குத் தலைமை வகித்த பீல் பிராந்திய பொலீஸ் அதிகாரிஈ நோயல் காற்நே (Noel Catney) மிகவும் உணர்ச்சி வசப்பட்டுப் பேசினார். சந்தேக நபரின் பெரிதாக்கப்பட்ட புகைப்படம் ஒன்றைக் காட்டி " இவர் ஒரு சாதாரண கொலைகாரன் அல்ல. ஓர் இரக்கமற்ற கொடூரமான கிரிமினல். ஓர் குழந்தையைக் கொன்றிருக்கிறான்" என்று கூறியபோது கூடியிருந்த ஊடகவியலாளர்கள் மத்தியில் சலசலப்பு ஏற்பட்டது. பொதுவாக கைது செய்யப்பட்டவர்களைக் குற்றவாளி, கொலைகாரன் எனக் குறிப்பிடப்படுவதில்லை. சந்தேக நபர் என்றே குறிப்பிட வேண்டும். ஒரு நபர் மீது சாட்டப்படும் குற்றம் நீதி மன்றத்தில் ஊர்ஜிதப்படுத்தும் வரை அந் நபர் நிரபராதியாகக் கணிக்கப்பட வேண்டும் என்பது தான், கனேடிய நீதித்துறையின் அடிப்படை விதி, எடுகோள். ஆனால் இந்த நீதித்துறையின் அடிப்படை விதியை நோயல் காற்நே மீறிவிட்டார் எனப் பல சட்டத்தரணிகள் தெரிவித்துள்ளனர். வழக்கு நீதிமன்றத்தில் விசாரணைக்கு வரும் பொழுது இவ்விவகாரம் மீண்டும் சர்ச்சைக்குள்ளாக்கப்படும்.

கைது செய்யப்பட்டுள்ள சென், சீனாவின் ஷங்காய் மாநிலத்திலிருந்து தனது படிப்பை மேற்கொள்வதற்காக விசாப் பெற்று கனடா வந்தவர். சிசிலியாவின் பெற்றோர், சீனாவில் இருந்து மாணவர்களைக் கனடா வந்து படிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொடுக்கும் முகவர்களாக செயற பட்டுள்ளனர். சிசிலியாவிற்கும், பெற்றோருக்கும் அவர் நன்றாகத் தெரிந்தவர். 4 அல்லது 5 தடவை, சிசிலியாவின் வீட்டிற்குச் சென்று வந்துள்ளார். சிசிலியாவுடன் மிகவும் நட்பாகப் பழகிய அவர், சிசிலியாவை அருகிலிருந்த நீரோடைக்கு மீன் பிடிப்பதற்காகவும்




அழைத்துச் சென்றுள்ளார். சம்பவம் நடந்த தினம், அதிகாலை 4 மணியளவில் திறந்திருந்த யன்னல் ஊடாக நுழைந்து சிறுமியைக் கடத்திக் கொண்டு பின் வாசல் வழியாக வெளியேறியுள்ளார். தாத்தாவிற்காக தனது படுக்கை அறையைக் கொடுத்துவிட்டு வேறு அறையில் சிசிலியா படுத்திருந்த போதிலும், அவர் கடத்தப்பட்டது, வீட்டிற்கு நன்கு பரிச்சயமானவர் ஒருவரால் தான் முடியும் என பொலீஸ் கருதியது. சந்தேக நபரைப் போலீஸார் பல தடவை விசாரித்திருந்தாலும், ஆதாரங்கள் ஏதும் இல்லாமையால் கைது செய்ய முடியவில்லை. ஆனால் இன்னும் 2 கிழமைகளில் அவரது விசா காலாவதியாவதால், அவர் மீண்டும் சீனாவுக்குத் திரும்பக் கூடும் என்ற அச்சத்தில் பொலீஸார் அவரைக் கைது செய்துள்ளனர்.

சிறுமி சிசிலியாவைக் கடத்திக் கொலை செய்வதற்கான நோக்கம் இன்னும் தெளிவாக்கப்படவில்லை. கடத்தப்பட்டு எவ்வளவு நாட்கள் உயிருடன் இருந்தார் எனவும் கூற முடியாமல் உள்ளது. கைது செய்யப்பட்டுள்ள சென், தினமும் தனது சீனாவில் உள்ள தாயாருடன் தொலைபேசியில் பேசுவது வழக்கம். கடந்த வாரம் பேசும் பொழுது கூட, பொலீஸ் விசாரித்தது பற்றியும், தன்னை பொலீஸ் பின் தொடர்வது பற்றியும் கூறி, " அம்மா பயப்பட வேண்டாம் நான் ஒன்றும் செய்யவில்லை" எனக் கூறியுள்ளார்.





High Speed Internet
1St Month Free - Next 3 Months $24.99 Only

Bell ExpressVu
Satellite Tv
Starting From $7.00
( TVI, ATN and Over 500 Channels )

TVI, ATN தமிழ் தொலைக்காட்சி
சேவையும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்



Call Sunthar: 416.473.0058 or 416.289.2082
www.Speednetcanada.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடத்தப்பட்ட எகிப்திய ராஜதந்திரி விடுதலை





ஈராக்கிய தீவிர வாதிகளால் கடத்தப் பட்டிருந்த எகிப்திய ராஜதந்திரி விடுதலை செய்யப்பட்டார். ''அல்லாவின் சிங்கப் படைப் பிரிவு||(The Lion of Good Brigades) என அழைக்கப்படும் ஒரு தீவிரவாதக் குழு பள்ளிவாசலுக்கு சென்று கொண்டிருந்த மொம்டோ. கோத்ப் (Momtoh Kotb) எனும் எகிப்திய ராஜதந்திரியைக் கடத்திச் சென்றது. ஈராக்கிய விவகாரத்தில் எகிப்து எடுத்திருக்கும் நிலைப்பாட்டை எதிர்க்கும் முகமாகவே தாம் இவரைக் கடத்தியிருப்பதாக அறிவித்த தீவிரவாதிகள் குறிப்பான கோரிக்கை எதனையும் விடுக்கவில்லை. திங்கட்கிழமை கடத்தப்பட்ட இவர் வியாழக்கிழமை எதுவித கெடுதலும் இல்லாமல் விடுவிக்கப்பட்டார். கடத்தப்பட்டவர், ஓர் ஆன்மீகவாதியாகவும் நல்ல மனிதராகவும் இருப்பதால் அவரை விடுதலை செய்வதாக கடத்தல்காரர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த சில வாரங்களாக, ஈராக்கில் கடத்தல் சம்பவங்கள் அதிகரித்த வண்ணம் உள்ளன. பல்வேறு குழுக்கள் இதில் ஈடுபட்டுள்ளன. தாம் இரு பாகிஸ்தானியரை கடத்தி வைத்தருப்பதாக பெயர் குறிப்பிடாத குழு ஒன்று அல்.ஜசீரா தொலைக்காட்சிக்கு ஓர் ஒளி நாடாவை அனுப்பிவைத்துள்ளது. முஜைடீன் அணி என அழைக்கப்படும் இன்னொரு குழு தான் யோர்தானியர்களை கடத்தி வைத்திருப் பதாகவும், அவர்கள் பணிபுரியும் நிறுவனம் அமெரிக்க இராணுவத்துடன் செயல்படுவதை நிறுத்தா விட்டால் பணயக் கைதிகள் இருவரும் கொல்லப்படுவர் என எச்சரித்துள்ளது. இவர்களின் படங்கள் A.F.Pஇன் தொலைக்காட்சியில் ஒளிபரப்பட்டது. ''இஸ்லாமிய ரகசிய இராணுவம், கறுப்புப்பட்டி படையணி'' (Islamic Secret Army- Black Banners Brigades) என்றழைக்கப்படும் இன்னுமொரு குழு தான் 3 இந்தியர்கள் 3 கென்னியர்கள் உட்பட 7பேரூந்து ஓட்டுனர்களை கடத்தி வைத்திருப்பதாக அல்.ஜசீரா தொலைக்காட்சிக்கு அனுப்பியுள்ள ஒளி நாடா மூலம் தெரிவித்துள்ளார். இவர்கள் பணிபுரியும் K.G.L. நிறுவனம், பணயக்கைதிகளின் விடுதலை தொர்பாக பேச்சு வார்த்தைகள் நடாத்தி வருகின்றன. சென்றவாரம், பிலிப்பினைச் சேர்ந்த சாரதி ஒருவர் கடத்தப்பட்டு பின்னர், பிலிப்பைன்ஸ் அரசு, ஈராக்கில் நிலைகொண்டிருந்த படைகளை விலக்கிய பின்னர் விடுவிக்கப்பட்டார். இச்சம்பவத்தைத் தொடர்ந்து கடத்தல்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவது குறிப்பிடத்தக்கது.

# புஷ் இன் இராணுவ சேவை ஆவணங்கள் கண்டுபிடிக்கப்பட்டது


காணாமல் போனதாக அறிவிக்கப்பட்ட, ஜனாதிபதி புஷ்ஷின், வியட்நாம் யுத்தகால, இராணுவசேவை தொடர்பான ஆவணங்கள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளதாக வெள்ளை மாளிகை அறிவித்துள்ளது. 1970 களில் வியட்நாம் யுத்தம் தீவிரமாக நடந்து கொண்டிருக்கையில், இன்றைய ஜனாதி பதி வியட்நாம் யுத்தமுனைக்குச் செல்லவில்லை. மறாக 'டலாஸ்' இல் உள்ள விமானிகள் பயிற்சி நிலையத்தில் தனது இராணுவ சேவையை ஆற்றினார் எனக் கூறப்பட்டுள்ளது. ஆயினும், அங்கும் கூட ஒழுங்காக, கிரமமாக பணியாற்றியதற்கான ஆதாரங்கள் எதுவுமில்லை. எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் திரு. புஷ்ஷை எதிர்த்துப் போட்டியிடும் ஜனநாயகக் கட்சி வேட்பாளர், ஜோன். கெரி, வியட்நாம் யுத்தத்தில் நேரடியாகப் பங்கு பெற்று, ஆற்றிய சேவைகளுக்காகப் பதக்கங்களையும் வென்றவர். ஜனாதிபதி புஷ் வியட்நாம் யுத்தத்தில் பங்கு பெறாதது மட்டுமல்ல, டலாஸ், விமானப்படைத் தளத்தில் கூட தனது சேவையை ஒழுங்காக ஆற்றவில்லை என்பது ஜோன் கெரியின் வாதமாக உள்ளது. திரு.ஜோர்ஜ் புஷ்ஷின் இராணுவ சேவைக்கான ஆதாரங்களை பகிரங்கமாக்கும்படி கெரி முன்னர் சவால் விடுத்திருந்தார். மூன்று மாதங்களுக்கு முன்னர், ஜனாதிபதியின் இராணுவச் சேவை தொடர்பான 200 பக்க ஆவணம் ஒன்றினை வெள்ளை மாளிகை வெளியிட்டிருந்தது. ஆனாலும் 1972ம் ஆண்டிற்கான பகுதி, "மைக்ரோ பிலிம்" செய்யப்பட்ட போது தொலைந்து போய்விட்டது என அடிக் குறிப்பிட்டிருந்தது. இப்பொழுது நீண்ட தேடுதலுக்குப் பின் டென்வர் நகரத்திலுள்ள .ஆவணக் காப்பகம் ஒன்றில் இருந்து இவை கிடைத்துள்ளதாக அறிவிக் கப்பட்டுள்ளது. வெள்ளிக்கிழமை, 'பென்டகொன்' ஆல் வெளியிடப்பட்ட ஆவணங்களுள், புஷ்ஷின் 1972ம் ஆண்டுக்கான சம்பளப் பற்றுச் சீட்டுகளும் (Payroll Sheets) உள்ளன. ஆனால் அவற்றில் 1972ம் ஆண்டு பிற் பகுதியில் அவர் சம்பளம் பெற்றுக் கொண்டதற்கான ஆதாரம் ஏதுவும் இல்லை. தனது கடமையை நேர்மையாக, ஒழுக்காகச் செய்யவில்லை என்ற ஜனநாயகக் கட்சியினரின் குற்றச் சாட்டுக்களை, இவை, மழுங்கடிப்பதற்குப் பதிலாக ஊர்ஜிதப்படுத்தியுள்ளதாகவே உள்ளது.



இன்றய ஜனாதிபதியின் தந்தையாகிய முன்னாள் ஜனாதிபதி புஷ் 1972 இல் அமெரிக்க 'காங்கிரஸ்' சபையில் அங்கத்தவராக இருந்தவர். சாதாரணமாக அமெரிக்கக் குடிமக்களின், பிள்ளைகள் யுத்தமுனைக்கு அனுப்பப்பட்ட போது, செல்வந்தர்களும், அரசியல் செல்வாக்குள்ளவர்களும் தமது பிள்ளைகளை, அமெரிக்காவிலேயே ஏதாவது ஒரு தளத்திற்கு இராணுவ சேவைக்காக அனுப்புவது வழக்கமாக இருந்தது. இன்னும் ஆழமாகத் தோண்டிப் பார்த்தால், திரு. புஷ், இன் இராணுவ சேவை தொடர்பான, மர்மங்களுக்கு விளக்கம் கிடைக்கலாம் என சிறிது கேலியாகக் கூறியுள்ளார் ஜனநாயகக் கட்சிப் பேச்சாளர் ஒருவர். எது எப்படி இருப்பினும், ஜனாதிபதி புஷ்ஷின் இராணுவ சேவை, என்பது நவம்பர் தேர்தலில் ஓர் சூடான விவகாரமாகவே இருக்கும் என நம்பலாம்.



# ஆதாரங்கள் போதாது ஆகவே விடுதலை



சிரியாவில் இரண்டு வருடங்களுக்கு மேலாக சிறை வைக்கப்பட்டு, பலத்த சித்திரவதைகளுக்கு உட்படுத்தப்பட்ட கனேடிய பொறியியலாளர் அப்துல்லா அல் மால்கி குற்றவாளி இல்லை என நீதிமன்றம் தீர்ப்பளித்து விடுதலை செய்துள்ளது. ஆனால் அவர் மீண்டும் கனடாவிற்கு திரும்புவதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. "ஆதாரங்கள் போதாது" என அறிவித்த நீதிமன்றம், 33வயதான அப்துல்லா, 30 மாதங்களுக்கு சிரியாவில் இராணுவ சேவை ஆற்றவேண்டும் எனவும் பணித்துள்ளது. உடனடியாக அவர் இராணுவத்தில் இணையாவிட்டால் மீண்டும் கைது செய்யப்படலாம் என்ற அச்சம் நிலவுகின்றது. கனேடிய அரசாங்கம் இவ்விடயத்தில் பெரிதாக அக்கறை காட்டவில்லை என அவரது குடும்பத்தினர் கூறுகின்றனர். இதேபோன்ற ஓர் விடயத்தில் கைது செய்யப்பட்டு பின்னர் விடுதலையாகி கனடா திரும்பிய மகேர் அறர் கனடாவில் கிளப்பிய சர்ச்சை கனேடிய அரசுக்கு பெரும் தலையிடியாக உள்ளது. அப்துல்லாவும் கனடா திரும்பினால், புதிய சர்ச்சைகள் உருவாகும் என கருதி, கனேடிய அரசு செயற்படுகிறது என அப்துல்லாவின் சகோதரர் குற்றம் சாட்டியுள்ளார். இத் தீர்ப்பு வழங்கப் படுகை யில், கனேடியத் தூதுவர் பிரயான் டேவிஸ் (Brian Davis) நீதிமன்றத்தில் பிரசன்னமாகியிருந்தார். அத்துடன் நீதிபதியுடன் தனியாக 45 நிமிடங்கள் பேசியும் உள்ளார் என அப்துல்லாவின் சகோதரர் தெரிவித்திருந்தார்.




விடுதலையாகிய பின்னர் டமாஸ்கஸில் உள்ள கனேடிய தூதரகத்திற்குச் சென்ற அப்துல்லாவிடம், கனடா திரும்பினால், கனேடிய அரசுக்கெதிராக நீங்களும் வழக்குத் தாக்கல் செய்வீர்களா எனக் கேட்கப்பட்டுள்ளது. அப்துல்லாவுடன், மகேர் அறருக்கு ஏற்பட்ட தொடர்புகளாலேயே மகேர் கைது செய்யப்பட்டார். இவர்களுக்கிடையிலான தொடர்புகளை ஆர்.சி.எம்.பி. விசாரித்து வந்தது. மகேர் அறர் இடமும், அப்துல்லாவிடமும், கனேடிய அதிகாரிகள் கொடுத்த தகவல்களின் அடிப்படையிலேயே விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டது. அப்துல்லா சிரியாவிற்குச் செல்லுமுன், கட்டாய இராணுவ சேவை செய்ய வேண்டியதில்லை என்பதற்கான அனுமதியைப் பெற்றுக் கொண்டுதான் சென்றார். ஆனாலும், அவ் அனுமதி மார்ச் மாதத்தில் அவர் சிறையில் இருக்கும் பொழுதே காலவாதி ஆகிவிட்டது. கடும் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்ட அப்துல்லாவின் உடல் நிலை மிகவும் மோசமாக உள்ளது. அவரால் கட்டாய இராணுவ சேவை செய்ய முடியாது. கனேடிய அரசு இவ்விடயத்தில் தீவிரமாகத் தலையிட வேண்டும் என அவரது குடும்பத்தினர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

# ஜனநாயகக் கட்சி மகாநாட்டில் கிளின்டன்



நவம்பரில் நடக்கவிருக்கும் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில், ஜனநாயகக் கட்சியின் ஜனாதிபதி, உப ஜனாதிபதி வேட்பாளர்களாக, ஜோன் கெரியையும், ஜோன் எட்வேட்ஸ் ஐயும், உறுதி செய்யும், கட்சி மகாநாடு பொஸ்ரன் நகரில் திங்கட்கிழமை ஆரம்பமாகியது. முதல் நாளன்று முன்னாள் ஜனாதிபதி பில் கிலிங்டன் முக்கிய பேச்சாளராக உரையாற்றினார். அவரது மனைவியும், நியூயோர்க் செனட் சபை உறுப்பினருமாகிய ஹில்லரி கிளின்டன் அவரை மேடைக்கு அழைத்து வந்து அறிமுகம் செய்தார். கிளின்டன் தனது உரையில் ஜனாதிபதி புஷ் இன் அமெரிக்காவிற்கும், ஜனநாயகக் கட்சி கட்டி எழுப்பவிருக்கும் அமெரிக்காவிற்கும் இடையிலுள்ள வேறுபாடுகளை மிகவும் தெளிவாக விளக்கினார். நாட்டின் செல்வம் சமூகத்தின் மேல் தட்டில் உள்ள ஒரு சிலரின் கைகளில்இருக்கும்அமெரிக்காதான், புஷ் விரும்பும் அமெரிக்கா. எல்லோருக்கும் தமது கனவுகளை நனவாக்க சமவாய்ப்புகளை கொடுக்கும் அமெரிக்காதான், ஜனநாயகக் கட்சியினர் விரும்பும் அமெரிக்கா என்றார் முன்னாள் ஜனாதிபதி. மேலும் பேசுகையில் ஜனாதிபதி புஷ் இன் குடியரசுக் கட்சி அரசாங்கத்தின் நடவடிக்கைகளால் நாம் இன்று நண்பர்களை இழந்து தனியாக நிற்கின்றோம். பயங்கரவாதத்திற்கெதிரான யுத்தத்தில் நாம், தனிமைப் படுத்தப்பட்டுள்ளோம். குடியரசுக் கட்சியினர், அமெரிக்காவையும், மேற்குலகத்தையும் பிரித்துள்ளார்கள். நாம் அதை மீண்டும் ஒன்றிணைப்போம். அறிவும் பலமும் ஓரிடத்தில் இருக்க முடியாது என புஷ் கருதுகிறார். ஆனால் அறிவும் பலமும் ஓரிடத்தில் ஒரே நபரிடம் இருக்க முடியும் என்பதற்கு ஜோன் கெரி ஓர் நல்ல உதாரணம் என்றார் கிளின்டன்.

நான்கு நாட்கள் நடைபெறும் இம் மகாநாடு வியாழக்கிழமை திரு.ஜோன் கெரியை ஜனாதிபதி வேட்பாளராக அங்கீகரிப்பதுடன் நிறைவு பெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருணாவின் சகாக்கள் 7பேரும் இராணுவப் புலனாய்வுப்பிரிவு அதிகாரியும் சுட்டுக்கொலை

## மறைவிடம் மீது அதிகாலையில் தாக்குதல்





கொட்டாவ - அத்துருகிரிய வீதியிலுள்ள ஆடம்பர வீடொன்றில் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை, கருணாவின் வலதுகரமாக செயற்பட்ட குகநேசன் எந்பவர் உட்பட ஏழுபேரும் இராணுவ புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தவரெனக் கருதப்படும் ஒருவரும் இனந்தெரியாத ஆயுதபாணிகளால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர் பிரதான வீதியிலிருந்து சுமார் நூறு யார் தூரத்தில் ஒதுக்குப்புறமாயிருந்த மாடி வீடொன்றில் எண்மரும் ஆழ்ந்த உறக்கத்திலிருந்த போது, அவர்களுடன் இருந்த ஒரு சிலரே இந்த எண்மரையும் சுட்டுக் கொன்றுவிட்டு தப்பிச் சென்றிருக்கலாமென பொலிஸார் கருதுகின்றனர். கருணாவின் மிக நெருங்கிய சகாவான சச்சி மாஸ்டர், அண்மையில் மட்டக்களப்பு சிறைச்சாலையில் சுட்டுக்கொல்லப்பட்ட நிலையில், கருணாவின் வலதுகரமான குகநேசனும் நேற்று கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது:

கொட்டாவ - அத்துருகிரிய வீதியிலுள்ள வித்தியாலய மாவத்தையில் பாம் லேன் உள்ளது. இந்த ஒழுங்கையிலிருக்கும் அடர்ந்த றப்பர் தோட்டமொன்றினுள் "கிறிஸ்டல் ரெரஸ்" வீட்டுத் திட்டமுள்ளது. இந்த வீட்டுத் திட்டத்திலுள்ள ஆடம்பர மாடி வீட்டிலேயே நேற்று அதிகாலை 3.40 மணிக்கும் 4 மணிக்குமிடையில் இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது. வீட்டின் மேல் மாடியிலுள்ள இரண்டு அறைகளிலும் பல்கனியிலும், இறந்தவர்களின் சடலங்கள் கிடந்துள்ளன. சடலங்களுக்கு அருகே ரி.56 ரக சிறிய ரகத் துப்பாக்கியின் வெற்றுத் தோட்டாக்களும் கிடந்துள்ளன. அத்துடன் சடலங்களுக்கு அருகே கையடக்கத் தொலைபேசிகள், பயணப் பொதிகள், சிறிய ரக வானொலிகள், சீட்டுக் கட்டுகள், இருந்துள்ளன. கொல்லப்பட்டவர்களில் நால்வர் முழுக்காற் சட்டையுடன் மேலாடையின்றியும் ஏனையோர் சாரம் அணிந்தவாறும் கிடந்தனர்.

மேல் மாடியின் ஒரு அறையில் நால்வரின் சடலங்கள் அருகருகே பாய்களிலும் இன்னொரு அறையில் இருவரின் சடலங்கள் பாயொன்றிலும் இரத்த வெள்ளத்தில் கிடந்தன. ஏனைய இருவரது சடலங்கள் அரைகுறையாக சாரம் அணிந்த நிலையில் பல்கனி போட்டிக்கோவில் கிடந்தன. இவர்கள் இருவரும் துப்பாக்கிச் சூடுபட்டுத் தப்பியோடிய போது துரத்திச் சுடப்பட்ட போதே இவ்விடத்தில் வந்து வீழ்ந்து இறந்திருக்கலாமெனக் கருதப்படுகிறது.

நேற்று அதிகாலை நடைபெற்ற இந்தச் சம்பவம் குறித்து, இணையத் தளமொன்று வெளியிட்ட செய்தியை அடுத்து, செய்தியாளர்கள் அதிகாலையிலேயே கொட்டாவ பொலிஸாருடன் தொடர்பு கொண்ட போதும், இதுபற்றி எதுவுமே தங்களுக்குத் தெரியாதென பொலிஸார் கூறிவிட்டனர். தொடர்ந்தும் செய்தியாளர்களின் தொந்தரவையடுத்து கொட்டாவ பகுதியில் தேடுதல் நடத்திய பொலிஸார், இராணுவத்தினர் வழங்கிய தகவலின் அடிப்படையில் நீண்ட நேரத்தின் பின் முற்பகல் 11 மணியளவில் மேற்படி வீட்டைக் கண்டு பிடித்துள்ளனர். பொலிஸார், இராணுவத்தினர் மற்றும் பெருமளவு ஊடகவியலாளர்கள் இந்த வீட்டை முற்றுகையிட்ட போதே, அப்பகுதி மக்கள் நிலைமையை உணர்ந்து கொண்டனர். இப்பகுதியில் பழத்தோட்டங்கள் இருப்பதால் அங்கு வரும் குரங்குகளை விரட்ட வெடிகள் கொளுத்திப் போட்டிருக்கலாமெனத் தாங்கள் கருதியதாக ஒரு சிலர் கூறினர்.ஆனாலும், அப்பகுதியைச் சேர்ந்த பெரும்பாலானோருக்கு எதுவுமே தெரியவில்லை. பொலிஸாரும், இராணுவத்தினரும் அங்கு வந்த பின்பே இதுபற்றித் தெரிந்தது.

வீட்டின் உட்புறம் மிகவும் ஆடம்பரமாயிருந்ததுடன், தேவையான அனைத்துத் தளபாடங்களும் பொருட்களும் இருந்துள்ளன. வீட்டின் உரிமையாளர் அண்மையில் குடும்பத்துடன் இந்தியா சென்றுள்ளார். அங்கு செல்வதற்கு முன் வீட்டைப் பத்திரிகை விளம்பரம் மூலம் ஒருவருக்கு, மாதம் 11 000 ரூபாவுக்கு வாடகைக்கு கொடுத்துள்ளார். இரண்டு வாரங்களுக்கு முன் கடந்த 2 ஆம் திகதி அவர் இந்த வீட்டைப் பொறுப்பேற்றுள்ளார். எனினும், வீட்டை வாடகைக்குப் பெற்றது யார் என்ற விபரம் உடனடியாகத் தெரியவரவில்லை. இது குறித்துப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.கடந்த ஏழாம் திகதி இந்தக் குழு இந்த வீட்டிற்கு வந்துள்ளது. இரு நாட்களுக்கு முன் வீட்டில் திருத்த வேலையும் நடைபெற்றுள்ளது. அதேநேரம், இந்த வீட்டிற்கு வந்து செல்லும் இளைஞர்கள் குறித்து கடந்த மூன்று நாட்களுக்கு முன்னர் பொலிஸாருக்கு அநாமதேயத் தகவல் ஒன்றும் கிடைத்திருந்தது.

இந்த நிலையிலேயே நேற்று அதிகாலை இந்தக் கொலைகள் நடைபெற்றுள்ளன. வெடிச் சத்தம் கேட்ட பின்னர் இருளினூடாக இருவர் நடந்து சென்றதை அயலவர்கள் சிலர் அவதானித்துள்ள போதிலும் அவர்கள் இதனைப் பொருட்படுத்தவில்லை. எனினும் பொலிஸ் விசாரணையின் போது, அவர்கள் இதுபற்றிக் கூறியுள்ளனர்.

இதேநேரம், அதிகாலை 4.30 மணியளவில் கொழும்பிலிருந்து சிலர், மட்டக்களப்பிலுள்ள புலிகளின் முக்கியஸ்தர்களுடன் தொலைத் தொடர்பு பரிமாற்றம் செய்ததை இராணுவத்தினர் தங்கள் வானொலிக் கருவி மூலம் ஒட்டுக் கேட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதேபோன்றதொரு தகவல் பரிமாற்றம் மட்டக்களப்பு - அம்பாறையிலுள்ள புலிகளுக்கிடையில் நடைபெற்றதையும் கிழக்கு மாகாண இராணுவ புலனாய்வுப் பிரிவினர் ஒட்டுக் கேட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. முற்பகல் 11 மணியளவில் மேற்படி வீட்டை பொலிஸாரும் படையினரும் கண்டுபிடித்த போதும், மாலை 4 மணிக்குப் பின்பே வீட்டுக்குள் செல்ல, பல்வேறு நிபந்தனைகளுடனும் ஊடகவியலாளர்கள் அனுமதிக்கப்பட்டனர். தங்களை உடனடியாக உள்ளே செல்ல அனுமதிக்குமாறு ஊடகவியலாளர்கள் பல தடவை வற்புறுத்திய போதிலும் அவர்களை அனுமதிக்க படையினர் மறுத்தமை அங்கு கூடிய ஊடகவியலாளர்கள் மத்தியில் பல்வேறு ஊகங்களையும் எழுப்பியது.



சம்பவம் நடந்த வீடு

### கொட்டாவ படுகொலைகள்

## சமாதானப் பேச்சை ஆரம்பிக்கும் அறிகுறியல்ல

கொட்டாவ படுகொலைகளை வன்மையாகக் கண்டித்திருக்கும் அரசாங்கம், இந்தச் சம்பவம் புலிகளுடன் நேரடிப் பேச்சுவார்த்தையை சுலபமாக ஆரம்பிப்பதற்கான நல்ல அறிகுறியாகத் தென்படவில்லை என்று சுட்டிக்காட்டியுள்ளது ஞாயிறு அதிகாலை கொட்டாவவில் இனங்காணப்படாத 8 பேர் படுகொலை செய்யப்பட்டமை அப்பட்டமான பயங்கரவாத நடவடிக்கையென அறிவித்திருக்கும் அரசாங்கம் சட்டம், ஒழுங்கை நிலைநாட்டத் தேவையான நடவடி க்கைகளை எடுக்கப் போவதாகவும் உறுதியாகத் தெரிவித்திருக்கிறது.இது தொடர்பாக அரசாங்கத் தகவல் திணைக்களம் நேற்று பிற்பகல் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்திருப்ப தாவது:

வெளிப்படையான இந்தப் பயங்கரவாத நடவடிக்கையை 'தமிழ் நெற்' இணையத் தளமே முதலாவதாக வெளியிட்டது. கொலைகள் பற்றி பொலிஸாருக்கு அறிவிக்கப்பட முன்னரே தமிழ் நெற்றில் இச் செய்தி வெளியாகியுள்ளது.இதேவேளை, கொலை செய்யப்பட்டோர், கொலை செய்தோர் பற்றி பொலிஸ் விசாரணையாளர்கள் அடையாளம் காண்பார்கள். இது பயங்கரவாத வன்முறையாகும் என்பது தெளிவானது.அத்துடன், இது யுத்த நிறுத்த உடன்படி க்கையின் நோக்கத்திற்கு ஏற்புடையதல்ல. அதேசமயம், அரசாங்கத்திற்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையில் நேரடிப் பேச்சுவார்த்தைகள் எளிதாக ஆரம்பிக்கப்படுவதற்கு ஏற்புடைய நல்ல சகுனமாகவும் தோன்றவில்லை. பயங்கரவாத நடவடி க்கைகள் இலங்கையையும், ஏனைய நாடுகளையும் தொடர்ந்தும் பாதித்து வருகின்றன. அதனை இல்லாதொழிப்பதற்கு சர்வதேச விதிமுறைகளுக்கு அமைய தேவையான நடவடிக்கைகளை எடுப்பதிலும் சட்டம், ஒழுங்கை நிலை நாட்டுவதிலும் அரசாங்கம் உறுதியாக இருக்கின்றது. இதே வேளை பின்னர் கூட்டிய பத்திரிகையாளர் சந்திப்பில் இச்சம்பவங்கள் சமாதானப் பேச்சு வார்த்தைகளை மீள ஆரம்பிக்கும் நடவடிக்கைகளை எந்த விதத்திலும் பாதிக்கப் போவதில்லை என ஜனாதிபதி தெரிவித்துள்ளதாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத் மற்றும் சட்டம் ஒழுங்கு அமைச்சின் செயலாளர் திலக் ரணவிராஜா ஆகியோர் கூட்டாகத் தெரிவித்துள்ளனர். இப்படுகொலைகளுடன் விடுதலைப்புலிகள் நேரடியாகச் சம்பத்தப் பட்டுள்ளார்கள் என்பது குறித்து அரசாங்கம் இன்னும் செய்யவில்லை எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

## திருகோணமலையில் விடுதலைப்புலிகளின் புதிய நிலைகள் இல்லை

திருகோணமலை நகரத்தினதும், துறைமுகத்தினதும் பாதுகாப் புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தக்கூடிய வகையில் புதிய இரா ணுவ நிலைகளையும், தொடர்முகாம்களையும் அப்பகுதியைச் சூழவுள்ள பிரதேசங்களில் புலிகள் அமைத்து வருகின்றார்கள் என்ற அரசின் குற்றச்சாட்டை அடியோடு மறுத்துரைத்திருக்கின்றார்கள் தமிழீழ விடுதலைப் புலிகள்.திருகோணமலையைச் சூழவுள்ள பிரதேசங்களில் புதிய நிலைகளைப் புலிகள் அமைத்து வருகின்றார்கள் என்ற குற்றச்சாட்டு தென்பகுதி ஊடகங்களினால் அண்மைக்காலத்தில் பரவலாக வெளியிடப்பட்டு வந்தது.யுத்தநிறுத்த உடன்படிக்கையின் பின்னர் அமைக்கப்பட்டுவரும் இந்த நிலைகளால் திருகோணமலைத் துறைமுகத்துக்கும், நகருக்கும் பேராபத்து ஏற்படும் அபாயம் உருவாகியிருப்ப தாகவும் அவை எச்சரித்தன. கடந்த ஞாயிறன்று கொழும்பு வந்த நோர்வே வெளிவிவகார அமைச்சர் விடர் ஹெல்கிஸன், இலங்கை சமாதானச் செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபாலவை அன்றைய தினமே சந்தித்துப் பேசினார்.அப்போது திருகோணமலைப் பிரதேசத்தில் புதிதாகத் தொடர்முகாம்கள், காவலரண்கள், இராணுவநிலைகள் போன்றவற்றை விடுதலைப் புலிகள் அமைத்துவருகின்றனர் என்றும், அதன் மூலம் யுத்தநிறுத்த உடன்பாட்டை அவர்கள் மீறியுள்ளனர் என்றும் அரசுத்தரப்பின் குற்றச்சாட்டை ஜயந்த தனபால நோர்வே பிரதி அமைச்சரிடம் தெரிவித்தார். நோர்வேப் பிரதி அமைச்சர் நேற்றுமுன்தினம் கிளிநொச்சியில் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வனைச் சந்தித்த போது இது குறித்து பிரஸ்தாபித்தார்.ஆனால், அக் குற்றச்சாட்டை தமிழ்ச்செல்வன் அடியோடு மறுத்துரைத்தார். அவ்வாறு புதிய முகாம்களையோ, காவலரண்களையோ, இராணுவநிலைகளையோ தாங்கள் அமைக்க வில்லை என்று விடர் ஹெல்கிஸனுக்கு எடுத்துரைத்தார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேச்சுவார்த்தைக்கு சாதகமான நிலைமைகள் இல்லை
## ஹக்கீமிடம் ஹெல்கிசன் தெரிவிப்பு

அரசாங்கம், விடுதலைப் புலிகள் ஆகிய இருதரப்புக்குள்ளும் ஏற்பட்டுள்ள முரண்பாடு காரணமாக பேச்சுவார் த்தைக்கான நிகழ்ச்சி நிரலை தயாரிக்க முடியாதநிலை ஏற்பட்டுள்ளதாகவும், சமாதானப் பேச்சுவார்த்தையினை மீள ஆரம்பிப்பதற்கான சாதகமான நிலையினை உருவாக்க முடியாதுள்ள தாகவும் நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் தெரிவித்துள்ளார்

சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் தலைமையிலான முஸ்லிம் காங்கிரஸ் தூதுக் குழுவினரை நேற்று சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்திய நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் இதனை தெரிவித்திரு க்கின்றார்.இச்சந்திப்பு கொழும்பிலுள்ள முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமின் இல்லத்தில் நடைபெற்றது.

இந்தச் சந்திப்பில் நோர்வே தூதுவர் ஹென்ஸ் பிராஸ்கரும் கலந்துகொண்டார்.சமாதான முயற்சியினை மீள ஆரம்பிப்பதிலுள்ள சிக்கல்கள், புரிந்துணர்வு ஒப்பந்தத்தினை நடைமுறைப்படுத்துவதில் ஏற்பட்டுள்ள சிக்கல்கள் குறித்தும் முஸ்லிம்களின் நிலைப்பாடு தொடர்பாகவும் இச்சந்திப்பில் ஆராயப்பட்டுள்ளது.



பேச்சுவார்த்தையினை மீள ஆரம்பிப்பதற்கான முயற்சிகளை நோர்வே மேற்கொண்டுள்ள போதிலும் பேச்சை ஆரம்பிப்பதற்கான சாதகமான சூழ்நிலையை இதுவரை ஏற்படுத்த முடியாதுள்ளதை விதார் ஹெல்கிசன் தன்னு டனான சந்திப்பில் ஏற்றுக்கொண்டதாக முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

ஹக்கீம் மேலும் கூறியதாவது:

இருதரப்புக்குள்ளும் உள்ளக முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளமையினால் பேச்சுக்கான நிகழ்ச்சி நிரலைத் தயாரிப்பதில் சிக்கல்நிலை ஏற்பட்டுள்ளதாக ஹெல்கிசன் தெரிவித்தார். கிழக்கில் புலிகள் அமைப்புக்குள் ஏற்பட்டுள்ள பிரச்சனைக்கு அரசாங்கமும், இராணுவமும் ஆதரவு வழங்குகின்றமை புலிகள் மத்தியில் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. அதேபோல் அரசாங்கத்துக்குள் உள்ள கட்சிகள் மத்தியில் ஏற்பட்டுள்ள முரண்பாடுகளும் கருத்திணக்கம் ஏற்படாமையும், நிகழ்ச்சி நிரலை தயாரிப்பதில் சிக்கல் நிலையினை ஏற்படுத்தியுள்ளது.

யுத்தம் ஒன்று மூளுமானால் முஸ்லிம்களின் பாதுகாப்புக் குறித்து சர்வதேச சமூகம் கவனம் செலுத்த வேண்டும் என்பதையும் நாம் எடுத்துக்கூறியுள்ளோம். சமாதான பேச்சுக்கான நிகழ்ச்சி நிரல் தயாரிப்பதில் போதியளவு முன்னேற்றம் ஏற்படவில்லை. ஆனாலும் நிகழ்ச்சி நிரலில் இடைக்கால நிர்வாக சபை குறித்து ஆராயப்படும் பொழுது முஸ்லிம் காங்கிரஸ் பிரத்தியேகமான திட்டவரைவினை சமர்ப்பிக்கவேண்டும். இதனை நோர்வே உறுதிப்படுத்த வேண்டும் என்றும் நாம் இச்சந்திப்பில் கோரியுள்ளோம்.

அரசாங்கம் சமாதான முயற்சியினை நேர்மையாக இதய சுத்தியுடன் மேற்கொள்ளவேண்டும். அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் தலைவர்கள் முன்பின் முரணாக கருத்துக்களை தெரிவிப்பதனை நிறுத்தவேண்டும்.

அரசாங்கத்தின் மீது விடுதலைப் புலிகளுக்கு ஏற்பட்டுள்ள. சந்தேகத்தினை களையவேண்டிய பொறுப்பு அரசாங்கத்திடம் உள்ளது. அதேபோல் விடுதலைப் புலிகளும் பரஸ்பர புரிந்துணர்வினை ஏற்படுத்தவேண்டும்.

ஹக்கீமுடனான சந்திப்பினை யடுத்து சமாதான முயற்சியின் நிலை குறித்து நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசனிடம் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பியபோது தற்போதைய நிலையில் கருத்தெதனையும் கூறவிரும்பவில்லை என தெரிவித்து விட்டு சென்றுவிட்டார்.

## செய்தியாளர் சுடப்பட்டார்!

மட்டக்களப்பு மாவட்டத்தின், ஆரையம்பதியில் செய்தியாளர் ஒருவர் நேற்றுமுன்தினம் இரவு இனந்தெரியாத நபர்களினால் சுடப்பட்டார்.ஆரையம்பதி, அமரசிங்கம் வீதியில் அமைந்துள்ள மேற்படி செய்தியாளரின் வீட்டிற்கு இரவு 8.15 மணியளவில் மோட்டார் சைக்கிளில் சென்ற இருவரே, அவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டுத் தப்பிச்சென்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. இச்சம்பவத்தில் காயமடைந்த செய்தியாளர் சதாஜலிங்கம் கமலதாசன், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப் பட்டார்.இத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பா கக் காத்தான்குடிப் பொலீஸார் தீவிர விசாரணை களை மேற்கொண்டு வருகின்றனர் எனப் பொலீஸ் பொறுப்பதிகாரி எல்.கே.ஹேரத் தெரிவித்தார்.மட்டக்களப்பு மாவட்டத்தின் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இவ்வருட ஆரம்பம் முதல் 33 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளதுடன் 34 பேர் உயிரிழந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது

# இலங்கை பா.உ ஈழவேந்தன் சென்னையில் வைத்துத் திருப்பி அனுப்பப்பட்டார்



தென்னிந்திய நகரான பெங்களூரில் நடைபெற்ற உலகத் தமிழ் பேரமைப்பின் மாநாட்டில் கலந்து கொள்வதற்காகவும், இலங்கை இன நெருக்கடி தொடர்பாக தமிழ் மக்களின் சார்பில் இந்தியத் தலைவர்களுக்கு விளக்கமளிப்பதற்காகவும் சனிக்கிழமை இந்தியா புறப்பட்ட மூன்று தமிழ் எம்.பி.க்களில் ஒருவரான எம்.கே.ஈழவேந்தன் சென்னை விமான நிலையத்தில் வைத்து நேற்றிரவு திருப்பி அனுப்பப்பட்டுள்ளார். இந்திய மத்திய அரசின் உத்தரவின் படியே அவர் திருப்பி அனுப்பப்படுவதாக சென்னை விமான நிலைய அதிகாரிகள் ஈழவேந்தனிடம் தெரிவித்தார்கள்.

சென்னை சென்ற பின்னர் அங்கிருந்து தரை மார்க்கமாக பெங்களூருக்குச் செல்லவும் இவர்கள் திட்டமிட்டிருந்தார்கள்.

நேற்று நண்பகல் 3.05 க்கு கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து புறப்பட்ட இந்தியன் எயர் லைன்ஸ் விமானத்தில் பயணமான ஈழவேந்தனுடன், மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெ.சந்திரசேகரனும் சென்றிருந்தார். இவர்களை வரவேற்க விமான நிலையத்தில் தமிழர் தேசிய இயக்கத் தலைவர் ப.நெடுமாறன் மற்றும் ஈழவேந்தனின் மகள் ஆகியோர் விமான நிலையம் சென்றிருந்தனர்.

பிற்பகல் நான்கு மணியளவில் சென்னை விமான நிலையமூடாக வெளியே செல்வதற்கு இவர்கள் முற்பட்ட போது, குடிவரவு அதிகாரிகள் சந்திரசேகரனை செல்ல அனுமதித்த அதேவேளையில், ஈழவேந்தனை தடுத்து நிறுத்தினார்கள். அவரை தடுத்து நிறுத்தி, நாடு கடத்துமாறு மத்திய அரசின் உத்தரவு கிடைத்திருப்பதாகவும் அதிகாரிகள் கூறினார்கள். இதற்கான காரணம் எதுவும் அவருக்குத் தெரிவிக்கப்படவில்லை. விமான நிலையத்துக்கு வெளியே செல்ல அனுமதிக்க வேண்டாமென தமக்கு மத்திய அரசிடமிருந்து உத்தரவு கிடைத்துள்ளதாக மட்டுமே விமான நிலைய குடிவரவு அதிகாரிகள் தெரிவித்தார்கள்.

சார்க் நாடுகளிடையேயான உடன்படிக்கையின்படி எந்தவொரு நாட்டின் பாராளுமன்ற உறுப்பினரும் மற்றொரு நாட்டுக்கு விசா அனுமதியைப் பெறாமலே சுயாதீனமாகச் சென்றுவர முடியுமெனக் கூறப்பட்டிருக்கிறது. அதன் அடிப்படையில் ஈழவேந்தன் ஒரு பாராளுமன்ற உறுப்பினராக இருப்பதால் அவரை இந்தியாவிற்குள் செல்வதற்கு அனுமதிக்க வேண்டுமென மலையக மக்கள் முன்னணியின் தலைவர் சந்திரசேகரன் குடிவரவு அதிகாரிகளிடம் எடுத்து விளக்கியபோதிலும், அதனை ஏற்றுக் கொள்ள மறுத்த குடிவரவு அதிகாரிகள் மத்திய அரசின் கடுமையான உத்தரவுக்கே தாம் செவிசாய்க்க வேண்டியிருப்பதாகவும் தெரிவித்தார்கள்.

இதனைத் தொடர்ந்து மாலை 4.30 மணி முதல் சுமார் ஐந்து மணி நேரத்துக்கு விமான நிலையத்திலேயே தடுத்து வைக்கப்பட்ட ஈழவேந்தன், நேற்றிரவு 9.30 மணிக்கு சென்னையிலிருந்து புறப்பட்ட இந்தியன் எயார் லைன்ஸ் விமானத்தின் மூலம் திருப்பியனுப்பப்பட்டார். விமான நிலையத்தில் இவரைச் சந்திப்பதற்கு எவரும் அனுமதிக்கப்படவில்லை.

தமிழரசுக் கட்சியின் மற்றொரு பாராளுமன்ற உறுப்பினரான மாவை சேனாதிராஜா இவர்களுக்கு முன்னதாக நேற்று முன்தினமே சென்னை சென்றடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை இன நெருக்கடி தீவிரமடைந்திருந்த 1980 களின் நடுப்பகுதியில் தமிழகத்துக்குச் சென்ற ஈழவேந்தன், 1999 ஆம் ஆண்டு இந்தியாவிலிருந்து நாடு கடத்தப்படும் வரையில் சென்னையிலேயே தங்கியிருந்தார். கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்ற பொதுத் தேர்தலில் தமிழரசுக் கட்சியின் தேசியப்பட்டியல் உறுப்பினராக நியமிக்கப்பட்டார்.

விடுதலைப் புலிகளே தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் என்பதை இந்தியத் தலைவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்தி புலிகள் அமைப்பின் மீது இந்தியா விதித்திருக்கும் தடையை நீக்க வேண்டும் என தமிழக மற்றும் இந்திய அரசியல் தலைவர்களிடம் கோருவதும் இவர்களுடைய விஜயத்தின் நோக்கங்களில் ஒன்றாக இருந்துள்ளது. தமிழக அரசியல் தலைவர்களை சந்தித்து பேசிய பின்னர், புதுடில்லி சென்று மத்திய அரசின் முக்கியஸ்தர்களைச் சந்திப்பதற்கும் இக்குழு திட்டமிட்டிருந்தது.

# தப்பியோடிய இராணுவத்தினருக்கு இனிமேல் பொதுமன்னிப்பு கிடையாது

இராணுவத்தை விட்டுத் தப்பியோடிய படையினருக்கு இனிமேல் பொது மன்னிப்பு வழங்கப்படாதென புதிய இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சாந்த கொட்டேகொட தெரிவித்துள்ளார்.

கடந்த நான்கு வருடங்களில் மூன்று கட்டங்களாக பொதுமன்னிப்பு வழங்கப்பட்டு, தப்பிச் சென்றவர்களை மீண்டும் படையில் சேர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதேவேளை, தப்பிச் சென்று தலைமறைவு வாழ்க்கை நடத்தி வருபவர்களுக்குப் படையை விட்டு சட்டபூர்வமாக விலகிச் செல்லும் சந்தர்ப்பமும் வழங்கப்பட்டது.

இவ்வாறான சந்தர்ப்பங்களைப் பயன்படுத்திக் கொண்ட ஒரு சிலர் மீண்டும் படையில் இணைந்து கொண்டதுடன் வேறு சிலர் எமது அழைப்பின் பிரகாரம் சட்டபூர்வமாக விலகிச் சென்றும் உள்ளனர். ஆனால், ஏராளமானோர் இராணுவ தலைமைப்பீடம் வழங்கியிருந்த பொது மன்னிப்பு கால அவகாசத்தைத் தவறவிட்டுள்ளதுடன் உத்தியோகபூர்வமாக விடுக்கப்பட்டிருந்த கோரிக்கைகளையும் உதாசீனம் செய்துள்ளனர்.

இதேநேரம், மீண்டும் இணைத்துக் கொள்ளப்பட்ட சிலர் இரண்டாவது தடவையாகவும் தப்பிச் சென்று தலைமறைவாகியுள்ளனர்.

இராணுவத்தினர் சிலரின் இவ்வாறான செயற்பாடுகள் ஒழுக்கத்தை முறையாகக் கடைப்பிடித்து வரும் பலருக்கு மத்தியில் விசனத்தையும் வேதனையையும் தந்துள்ளன.

இனிமேல் இவ்வாறான நபர்களுக்கு எக்காரணம் கொண்டும் மன்னிப்பை வழங்கக் கூடாது என்று இராணுவ தலைமைப் பீடத்திற்கு இராணுவத்தினர் மத்தியிலிருந்தே வலியுறுத்தல் விடுக்கப்பட்டது.

மீண்டும் மீண்டும் பொது மனிப்புக்கான கால அவகாசம் பெற்றுக் கொடுப்பது எங்களை நாங்களே குறைவாக எடை போட்டுக் கொள்வதாகும்.

இதனால் இனிமேல் மன்னிப்பு என்ற பேச்சுக்கு இடமளிக்காமல் தவறிழைத்துள்ளவர்களை பொலிஸாருடன் இணைந்து கைது செய்து சட்ட நடவடிக்கை எடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# தமிழ் கூட்டமைப்பின் தலைவர்கள் புதுடில்லி செல்வார்கள்

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களின் தூதுக்குழுவினர் இந்திய அரசியல் தலைவர்களுடன் உத்தியோகபூர்வமான பேச்சுகளில் ஈடுபட எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் நடுப்பகுதியிலேயே செல்லவுள்ளதாக கூட்டமைப்பின் முக்கியஸ்தர் ஒருவர் நேற்று தெரிவித்தார்.

இந்த தூதுக்குழுவில் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களான இரா.சம்பந்தன், ஜோசப் பரராஜசிங்கம், சுரேஷ் பிரேமச்சந்திரன், மாவை சேனாதிராஜா, செல்வம் அடைக்கலநாதன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோரே இடம்பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப் படுகின்றது.

தமிழ்நாடு மற்றும் புதுடில்லிக்கு செல்லும் இவர்கள் தமிழர் தரப்பு நியாயப்பாடு, விடுதலைப் புலிகள் தொடர்பான விடயங்கள், இன நெருக்கடி தீர்வு முயற்சிக்கான இந்தியாவின் பங்களிப்பு என்பன தொடர்பாகவும் இந்தியத் தலைவர்களுடன் கலந்துரையாடுவார்கள்.

கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களான இரா.சம்பந்தன், சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோர் வெளிநாடு சென்றுள்ளமையினாலேயே இந்த விடயம் ஆகஸ்ட் நடுப்பகுதிக்கு பின் போடப்பட்டுள்ளதாகவும் கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

அதேநேரம், கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, ஈழ வேந்தன் ஆகியோர் பழ. நெடுமாறனின் ஏற்பாட்டில் நடைபெறும் உலகத் தமிழ் பேரவையின் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காகவே இந்தியா சென்றதாகவும் கூட்டமைப்பு வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2ம் பக்கத் தொடர்ச்சி (அபாய..)

உயிரைப் பணயம் வைத்து கடல்வழி ஊடாக மன்னாரை வந்தடைந்தோம்.

எம்மை இக்கரைக்கு கொணர்வதற்கென்று படகோட்டிகளும், அவர்களது தரகர்களும் ஆளுக்கு 2500ரூபா வாங்கினார்கள். (எம்மைக் கொண்டு செல்லுமாறு ஓட்டிகளிற்கு சிபாரிசு செய்யும் தரகர்களிற்கு கொடுக்கும் பணம் வேறு) தற்போது இராமேஸ்வரக் கரையில் அதிக பாதுகாப்பென்பதால் முன்பு இறங்குதுறையாக இருந்த "தீடைக் கரையில்" இருந்துதான் நாம் இலங்கைக்கு வருவதற்காக ஏற்றப்பட்டோம்.

சாதாரண மீன்பிடிப்பிளாஸ்ரிக் வள்ளத்தில் 25 பேர்வரையில் ஏற்றப்படுவோம். கடலோரக் காவற்படை வரும் பட்சத்தில் எம்மை நடுக்கடலில் தத்தளிக்க விட்டுவிட்டு ஓடிய சந்தர்ப்பமும் நடந்துள்ளது. 10 மணிநேரக் கடற்பயணத்தில் பாரத்தின் காரணமாக படகு மூழ்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. எம்முடைய உடைமைகள் எல்லாவற்றையும் கடலில் தூக்கிப்போடுமாறும் இல்லாவிடில் எம்மை நடுக்கடலில் வெட்டிக்கொன்று விடுவதாகவும் ஓட்டி பயமுறுத்தினான் வேறுவழி இல்லாமல் எல்லா உடமைகளையும் கடலில்போட்டுவிட்டு வெறுங்கையுடனே இலங்கையை வந்தடைந்தோம்.

இருளில் வைத்துத்தான் நாம் படகில் ஏற்றப்படுவதால் படகோட்டிகள் யார் என்பது எமக்குத் தெரியாது. ஆனால் அவர்கள் மிகவும் கண்டிப்பாகவே கடலில் நடந்து கொள்வார்கள். குழந்தை அழுதால் கூட அழவிட மாட்டார்கள். "மூச்சைக் கூட கடற்பரப்பில் மெதுவாகவே விட்டோம்." என்றுதான் சொல்லவேண்டும்.

எமக்கு இத்தகைய சட்டபூர்வமான ஆபத்தான வழிகளில் வருவது உண்மையில் விருப்பமில்லை. இலங்கைக்கு போவதற்கென்று விண்ணப்பித்து 2,3 ஆண்டுகள்வரை காத்திருந்து எந்தவித பதிலுமற்ற நிலையிற்தான் அங்கு வாழ முடியாமல் இந்த வழியை நாம் தேர்ந்தெடுத்தோம். எமது மண்ணிற்கு வந்த பின்னரும் கூட எமது விட்டில் எம்மால் இருக்கமுடியவில்லை. அரைவாசி வீடுகள் உயர்பாதுகாப்பு வலையத்தினுள்ளேயே அமைந்துள்ளது. நாம் இருப்பதற்கென்று அரசோ, அரசசார்பற்ற ஸ்தாபனங்களோ இதுவரை எந்தவொரு வாழ்விடத்தையும் அமைத்துத் தரவில்லை.

UNHCR நிறுவனம் ஒரு குடமும், பேசினும், பாயும் மன்னாரில் இருந்து இங்கு வந்த பயணச் செலவான 280 ரூபாவும் மட்டும் தந்தார்கள். 10,000 ரூபா தருவதாகச் சொன்ன ஞாபகம். இதுவரையிலும் அதற்கான எந்தக் குணங்குறிகளும் தென்படவில்லை. ஆனால் அடிக்கடி எமக்குக் கூட்டம் வைத்து படிவங்களை நிரப்பச்சொல்லி தங்கள் கொள்கைகளையும் இதுவரைகாலமும் செய்த செயற்திட்டங்களையும் விளக்குவார்கள். இடக்கிடையில் புரிவதுபோலவும் இருக்கும். இருட்டிலே படகுகளில் ஏற்றப்பட்டு விடிந்த பின்னர்தான் இலங்கையில் அல்ல மண்பிட்டிகளில் நிற்கிறோம் என்று தெரிகின்ற எங்களிற்கு வெளிநாட்டுக் கொள்கைகள் இலகுவில் விளங்கி விடுமா என்ன? இந்த விளக்கமின்மைதான் எமக்குச் சேவை செய்வதற்கு தடையாக உள்ளதென்று UNHCR நிறுவனம் கூறுகின்றது.

மேற்குறிப்பிட்ட உரையாடல் மூலம் பெறப்பட்ட அனுபவச் செய்திகளூடு மக்களிற்கு உதவுகிறோம் என்று கூறுகின்ற சர்வதேச ஸ்தாபனங்களின் உண்மைநிலையும், தமிழ் மக்கள் மீதான அரச இயந்திரத்தின் அக்கறையும் புலனாகிறது. அகதிகளுக்கு உதவுவதற்கென்று IOM (International organization for migration) மற்றும் UNHCR போன்ற நிறுவனங்கள் செயலாற்றுகின்றன. IOM நிறுவனம் அண்மையிலேயே தம்முடைய செயற்பாட்டினை ஆரம்பித்துள்ளதால் இந்திய அகதிகள் குறித்த செயலில் தாம் இன்னும் முழுதாக இறங்கவில்லை என IOM நிறுவனத்தின் அலுவலகப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், அகதிகள் தம்முடைய அடிப்படை வசதிகளை முழுமையாகப் பெறுவதற்கான எந்த ஒரு நிவாரணத்திட்டமும் இன்னும் பூரணமாக நடைமுறைப்படுத்தப் படவில்லை. முக்கியமாக அகதிகள் மீளக்குடி அமர்வதற்கான எந்த ஒரு நடவடிக்கையும் அரசால் மேற்கொள்ளப்படவில்லை. அத்துடன் இலங்கைக்கு வந்தால் முறையான கவனிப்பு இருப்பதாக படகோட்டிகளால் அங்குள்ள மக்களிற்கு தவறான பிரச்சாரம் செய்யப்படுவதாலேயே பெருமளவில் மக்கள் சட்ட விரோதமான முறையில் இங்கு வருகிறார்கள். அவர்களைப் பதிவு செய்வதற்கோ, உரிய தகவல்கள் எடுப்பதற்கோ எந்த ஒரு சரியான ஆவணமும் அவர்களிடமில்லை. அதேவேளை அங்கு வளர்ந்த பிள்ளைகள் இங்குள்ள பாடசாலைகளில் தமது கல்வியைத் தொடரும்போது மொழிப்பயன்பாடு காரணமாக உளவியல் ரீதியில் பல பிரச்சினைகளை எதிர்கொள்கின்றார்கள். அவர்களிற்கான கண்ணிவெடி தொடர்பான விழிப்புணர்வுகள் உடன் மேற்கொள்ளப்படவேண்டும். ஆனால் இதனை மேற்கொள்வதற்கு உலகளாவிய ரீதியில் உத்தியோக பூர்வப் பலத்தை கொண்டிருக்கும் அமைப்பும் இது தொடர்பில் அசிரத்தைப் போக்கையே காட்டுகின்றது. எனவும் தெரிவித்தார்.

UNHCR நிறுவன அதிகாரி இது குறித்து தன்னிடம் விரல் நுனியில் தகவல் இருப்பதாகவும், ஆனால் எதனையும் கூறமுடியாதெனவும் தெரிவித்தார். "உண்மையில் இந்தியாவில் இருந்து வரும் அகதிகள் தொடர்பான விடயத்தில் மேற்குறிப்பிட்ட ஸ்தாபனமே நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குரிய உத்தியோகபூர்வ பலத்தைக் கொண்டுள்ளது.

இந்நிறுவன மானது உலகவல்லரசுகளின் பின்னணிப்பலத்தையும், பணத்தையும் போதிய அளவு கொண்டிருந்தும், அகதிகள் தொடர்பில் ஆக்க பூர்வமான எந்தவொரு நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை என்றே தோன்றுகின்றது. இது விடயத்தில் இரு நாட்டு அரசுகளுடனும் பேசி அகதிகளிற்கான தேவைகளை இவர்களால் பெற்றுக்கொடுக்கமுடியும். இதற்கென்றுதான் உயர்ஸ்தானிகர் ஆலயங்கள் எல்லா நாடுகளிலும் அமைந்துள்ளன. ஆனால் இரண்டு நாட்டு அரசுகளுடனும் முரண்படாதிருந்தலையே, அல்லது அவர்களிற்கு பிடிக்காதவற்றைச் செய்யாதிருந்தலையே இந்த ஸ்தாபனம் கடைப்பிடித்து வருகின்றது. அகதிகள் விடயத்தில் பாராமுகமாக இருக்கின்ற அரச மோசடியை உலக அரங்கில் அம்பலப்படுத்துவதற்கு இவர்களால் முடியும். ஆனால் அவ்வாறு முரண்பட்டால் தம்முடைய நடவடிக்கைகளை அரசு ஊன்றிக்கவனிக்க ஆரம்பித்துவிடும் என்பதால் இவர்கள் இழுத்தடிப்புப் போக்கினையே கைக்கொண்டு வருகிறார்கள்.

சட்ட பூர்வமாக மக்கள் இந்தியாவில் இருந்து வருவதற்கான காலப்பகுதியை இவர்கள் இழுத்தடிப்பதாற்தான் மக்கள் சட்ட பூர்வமற்ற முறையில் வருகிறார்கள். ஒருவகையில் சட்ட பூர்வமற்ற வருகைக்கும் இவர்கள்தான் காரணம் என்பதையும் களவாக நடைபெறுகின்ற இந்தப்போக்குவரத்தினூடாகவே தற்போது மக்களைக் கொணரும் சாட்டில் பெருமளவில் கள்ளக் கடத்தல் நடைபெறுகின்றது என்பதையும் இவர்கள் உணர்தல் நன்று. ஏனெனில் கொலையாளிக்கும், உடந்தையாக இருந்தவரிற்கும் சட்டப்பிரகாரம் ஒரே தண்டனையே விதிக்கப்படுகிறது.

அகதிகள் இந்திய முகாமில் இருந்து இங்கு வந்துவிட்ட பின்னரும்

3ம் பக்கம் பார்க்க






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெயலலிதா மீண்டும் தொடங்கும் வீம்பு?

சமீபத்தில் மக்கள் அவை தேர்தல் முடிந்த கையோடு தமிழக முதல்வர் ஜெயலலிதா தன்னுடைய பல பழைய உத்தரவுகளை மீளப் பெற்றார். கட்டாய மதமாற்றத் தடைச் சட்டம், வேலை நிறுத்தத்தில் பங்கு கொண்ட அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் மீதான தண்டனை, கருணாநிதி உள்ளிட்ட தலைவர்கள் மீதான டெஸ்மா வழக்குகள், ஊடகங்கள் மீதான அவதூறு வழக்குகள் என்று அவர் அதிரடியாக அறிவித்த சட்டங்கள் பலவற்றை அதிரடியாகவே ரத்துச் செய்தார். தேர்தல் தோல்விக்கு



பிறகு காவேரி நீரை பெறுவதற்காக தமிழக பாராளுமன்ற அங்கத்துவர்கள் குழுவில் அ.தி.மு.கவினரையும் இடம் பெற செய்தார் இவையெல்லாம் செல்வி ஜெயலலிதா தன்னுடைய பிடிவாத குணத்தையும் ஈகோ மோதலையும் கைவிட்டு மாறிவிட்டார் என்கிற பிம்பத்தை பலரில் ஏற்படுத்தியது.

ஆனால் இந்த கணிப்பைப் பொய்க்கும் படியாக அண்மையில் நடந்த முதல்வர்கள் மாநாட்டை ஜெயலலிதா பகிஸ்கரிப்பு செய்துள்ளார். இந்தப் புறக்கணிப்பு செல்வி ஜெயலலிதா இன்னும் தனது பிடிவாத குணத்திலிருந்து மாறவில்லை என்று உணர்த்துவதாக அரசியல் நோக்கர்கள் கருதுகிறார்கள்.

முதல்வர்கள் மாநாடுகளையோ பிரதமர் கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகளையோ புறக்கணிப்பது என்பது தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவுக்கு ஒன்றும் புதிய விடயம் அல்ல. தேசிய.ஜனநாயக கூட்டணியில் அங்கம் வகித்த போதும் சரி, இல்லாத போதும் சரி அப்போது பிரதமராக இருந்த வாஜ்பாயி சென்னை வந்த போதெல்லாம் மரபுப்படி அவரை பல தடவை சந்திக்காமல் இருந்திருக்கிறார். ஒரு முறை சென்னை விமானநிலையத்தில் பிரதமர் கலந்துகொண்ட ஒரு விழாவில் இருந்து வெளிநடப்பும் செய்திருக்கிறார். அதனால் கடந்த வாரம் மத்திய ஊரக வளர்ச்சித் துறை கூட்டியிருந்த முதல்வர்கள் மாநாட்டை ஜெயலலிதா புறக்கணித்ததில் ஆச்சரியப்படுவதற்கு எதுவும் இல்லை. ஆனால் மத்தியில் புதிதாக பொறுப்பேற்றிருக்கும் காங்கரஸ் தலைமையிலான அரசு கூட்டிய முதல்வர்கள் மாநாட்டை புறக்கணித்து இந்த அரசுடனும் மோதல் போக்கை துவக்கியிருக்கிறார் என்கிற அளவில் முக்கியத்துவம் பெறுகிறது.

இந்த புறக்கணிப்புக்கு முக்கியமான ஒரு காரணம் இருக்கிறது. கடந்த அக்டோபர் மாதத்தில் நாகபட்டினத்தில் நடந்த அரசு விழாவில் ஜெயலலிதாவும் அப்பொழுது வெறும் பாராளுமன்ற உறுப்பினராகவும் இப்பொழுது மத்திய அமைச்சராகவும் இருக்கும் மணிசங்கர் ஐயரும் நேரடியாக மோதி கொண்டார்கள். மயிலாடுதுறை பாராளுமன்ற உறுப்பினரான மணிசங்கர் ஐயரை விமர்சித்து ஜெயலலிதா பேச, அவரை நேரடியாக எதிர்கொண்டு மணிசங்கர் ஐயா விவாதம் செய்தார். . பிரச்சனை அதோடு முடியவில்லை. அந்த விழா முடிந்து சில மணி நேரங்களிலேயே மணிசங்கர் ஐயரின் கார் தாக்குதலுக்கு உள்ளானது. தாக்கியவர்கள் அ.தி.மு.கவினர் என்று சொல்லப்பட்டது. அந்த சம்பவம் கோஷ்டி மோதலுக்கு பெயர்போன காங்கிரஸ்காரர்களை ஒன்றாக இணைத்தது என்றுகூட சொல்லலாம். புகார் கொடுக்க கிட்டத்தட்ட எல்லா காங்கிரஸ் தலைவர்களும் ஒன்றாக ஆளுனர் இல்லம் சென்றார்கள். அதன் பிறகு தி.மு.க தலைவர் கருணாநிதியையும் மணிசங்கர் ஐயா சந்தித்தார். ஒரு விதத்தில் தி.மு.க காங்கிரஸ் கூட்டணியை அந்த சம்பவம் உறுதிப்படுத்தியது என்றுகூட சொல்லலாம். அந்த சம்பவத்தை மனதில் வைத்துதான் ஜெயலலிதா கூட்டத்தை புறக்கணித்திருக்கிறார் என்று சொல்லப்படுகிறது.

இப்போது மத்திய பெட்ரோலியம் மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறை அமைச்சராக இருக்கும் மணிசங்கர் ஐயரின் முன்னிலையில்தான் முதல்வர்கள் மாநாடு நடந்தது என்பது குறிப்பிடத்தக்கது. மாநில நலன்களை முன்னிட்டு பாரதிய ஜனதா கட்சி முதல்வர்களே இந்த மாநாட்டில் கலந்து கொண்டபோது தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா கலந்து கொள்ளாதது சரியான விடயம் அல்ல என்கிறார்கள் அரசியல் நோக்கர்கள். ''தமிழக முதல்வர் இந்த மாநாட்டில் கலந்து கொண்டு தமிழக நலன்கள் குறித்து ஆலோசனை செய்யாதது வருந்தத்தக்கது. இது தமிழக மக்களின் நலன்களுக்கு உகந்ததல்ல'' என்கிறார் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவர் ஜி.கே. வாசன்.

வறுமை ஒழிப்புமற்றும் கிராமப்புற வளர்ச்சி என்கிற தலைப்பில் நடந்த இந்த இரண்டு நாள் முதல்வர்கள் மாநாட்டில் ஆக்கபூர்வமாக பல விடயங்கள் விவாதிக்கப்பட்டதாக டில்லி வட்டாரங்கள் சொல்கின்றன. ஊரக வேலை வாய்ப்பு, பஞ்சாயத்து ராஜ் சட்டம், வறுமை ஒழிப்பு போன்ற பல பிரச்சினைகள் இந்த



மாநாட்டில் விவாதிக்கப்பட்டன. தமிழக முதல்வர் சார்பில் அமைச்சர்கள் பொன்னையனும் அன்பழகனும் இந்த மாநாட்டில் கலந்து கொண்டார்கள். முதல்வரின் உரையும் மாநாட்டில் வாசிக்கப்பட்டது. பஞ்சாயத்துகளுக்கு மத்திய அரசே நேரடியாக நிதிகளை வழங்கும் யோசனையை கடுமையாக அவரது உரையில் சாடியிருந்தார் ஜெயலலிதா. மக்களுக்கு நெருக்கமாக இருப்பது மாநில அரசுகள்தான் என்றும் மாநில அரசை விட்டுவிட்டு மத்திய அரசு பஞ்சாயத்துகளுக்கு நேரடியாக நிதி தருவது கூட்டாட்சித் தத்துவத்துக்கு எதிரானது என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார். தவிர, காவிரி நீர் பிரச்சினையும் அவர் தனது உரையில் எழுப்பியிருக்கிறார். கர்நாடக அரசு தமிழகத்துக்கு கிடைக்க வேண்டிய காவிரி நீரை விட மறுப்பதால் தமிழகத்தில் கடுமை தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்றும் நதிநீர் இணைப்பின் மூலம் கிராமப்புற பொருளாதார முன்னேறும் என்பதால் பிரதமர் முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்றும் சொல்லியிருக்கிறார். தவிர கிராம சாலைகளை மேம்படுத்த நிதி ஒதுக்கீட்டை அதிகப்படுத்த வேண்டும். இந்திரா வீடு கட்டும் திட்டத்துக்கான நிதி ஒதுக்கீட்டை இரண்டு மடங்காக அதிகரிக்க வேண்டும் என்பது போன்ற பல கோரிக்கைகளையும் முதல்வர் செல்வி ஜெயலலிதா.முன்வைத்திருக்கிறார்.

ஆனால் .இது போன்ற பிரச்சினைகளை முதல்வரே நேரில் போய் விவாதித்திருந்தால் நல்ல பலன் கிடைத்திருக்கும். அரசியல் நோக்கர்கள்.


''அம்மாவுக்கு மணிசங்கர் ஐயர் மீதான கோபம் தீரவில்லை என்று தான் தோன்றுகிறது. தேர்தலில் தோற்கடிக்கப்பட வேண்டியவர்களின் முதன்மைப் பட்டியலில் ஐயரும் இருந்தார். அவர் ஜெயித்தது மட்டுமன்றி இப்போது மத்திய அமைச்சராகவும் ஆகிவிட்டார். அவர் முன்னிலையிலான கூட்டத்தில் அம்மா எப்படி கலந்து கொள்வார்'' என்கிறார் அ.தி.மு.க பிரமுகர் ஒருவர். கூட்டத்தில் கலந்து கொள்ளாததற்கு ஜெயலலிதாவிடமிருந்து எந்த வித விளக்கமும் இல்லை என்றுதான் சொல்லப்படுகிறது.

மணிசங்கர் ஐயருடனான விரோதம் தவிர காங்கிரஸ் தலைமையிலான அரசும் மத்தியில் இருப்பது இன்னொரு காரணமாக இருக்கலாம். தேர்தல் நேரத்தில் சோனியா காந்தியை மிகக் கடுமையாகவும் தரக்குறைவாகவும் முதல்வர் செல்வி ஜெயலலிதா விமர்சித்ததை காங்கிரசாரும் மறந்துவிடவில்லை. அதனால் அவருக்கு டில்லியில் உரிய மரியாதை கிடைக்காதோ என்கிற பயம்கூட முதல்வர் செல்வி ஜெயலலிதாவின் புறக்கணிப்புக்கு காரணமாக இருக்கலாம். ஆனால் அப்படியெல்லாம் நடந்திருக்காது என்கிறார்கள் தமிழகக் காங்கிரஸ்காரர்கள். ''மத்திய அரசைப் பொறுத்தவரை மாநில அரசுகளோடு நாகரிகமாக, நிர்வாக ரீதியான உறவு வைத்துக் கொள்ள வேண்டும் என்றுதான் விரும்புகிறார்கள். அதிலும் மன்மோகன் சிங் போன்ற ஒரு பிரதமர் இருக்கும் போது இப்படியெல்லாம் பயப்பட வேண்டிய அவசியம் இல்லை'' என்கிறார் காங்கிரஸ் தலைவர் ஒருவர்.

ஜெயலலிதா முதல்வர்கள் மாநாட்டில் கலந்து கொண்டிருந்தால் அது மத்தியமாநில உறவுகளை மேம்படுத்த உதவியிருக்கும். ஆனால் அதில் கலந்து கொள்ளாததன் மூலம் தமிழக மக்களின் நலன்கள் மீது அதிக அக்கறை இல்லாதவர் என்கிற பிம்பத்தையே மீண்டும் அவர் பெற்றிருக்கிறார். இதைச் சரிகட்ட இன்னும் சில அறிவிப்புகள் வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகரித்த தொலைபேசிக் கட்டணத்திலிருந்து விடுதலை



உங்கள் அடிப்படை வீட்டுத் தொலைபேசி இணைப்பு மற்றும் வியாபாரத் தொலைபேசி இணைப்பை புதிய Voice Over IP தொழில்நுட்பத்துடன் வழங்குகிறோம். அவை மிகவும் துல்லியமானவை. எமது சேவையைப் பாவிப்பதானால் உங்களிடம் Hi-Speed அல்லது Speed Lite Intenet இருக்கவேண்டும்.

**FREE** Features **WITH ALL PACKAGES** FREE

- Call Waiting
- Caller ID with Name
- Call Forwarding
- Enhanced Voicemail
- Three Way Calling
- Call Return (*69)
- Call Transfer, Caller ID Block (*67)
- Privacy Manager
- International Call Block
- Network Unavailbility Number
- 911-type Emergency Dialing, Repeat Dialing
- Do Not Disturb

- digi Media Creations -

வியாபாரத் தொலைபேசி இணைப்பு

Basic business phone service

$29.99

மாத்திரமே

குறித்த காலத்திற்கு மாத்திரம்

spectraVoice communications

For more information, visit

**www.spectravoice.com**

info@spectravoice.com

or call

**416 848 4333**

Calling plans and rates are subject to change without notice. Additional fees may apply.
© 2004 SpectraVoice Communications Corp.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேர்காணல்

# கவிஞர் பாரதிபுத்திரன்

## சந்திப்பு

பொ. ஐங்கரநேசன்

"பாரதி என்பது 'விடுதலை'. இந்தச் ஒற்றைச் சொல்லால் தான் பாரதியைப் புரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன். தன்னுடைய கட்டுக்களிலிருந்து மட்டுமல்லாமல், சகமனிதர்களும் அவர்களைக் கட்டிக் கொண்டிருக்கின்ற எல்லாவகையான கட்டுக்களிலிருந்தும் விடுதலை பெறவேண்டும் என்று அவாவிய, அதற்காகத் தன்னை அர்ப்பணித்த பாரதியின் வாழ்க்கையும் படைப்புகளும் என்னை மிகவும் பாதித்தவை. ஒரு தமிழன் என்கிற அடிப்படையில் என்னுடைய உணர்வுகளுக்கு, வாழ்க்கை நோக்குகளுக்கு, இலக்கிய நோக்குகளுக்கு அவன் மிகச் சிறந்த பொருத்தப்பாடு உடையவனாக இருக்கிறான். இவற்றின் பின்னணியிலேயே, ஒரு பரம்பரையின் தொடர்ச்சியாகப் பாரதியின் கருத்தாளுமைகளை முன்னெடுத்துச் செல்லவேண்டும் என்ற எனது நோக்கத்தைப் புலப்படுத்தும் விதத்தில் 'புத்திரன்' என அடையாளப்படுத்திக் கொண்டு இயங்கி வருகின்றேன்' '- என்று சொல்லும் கவிஞர் பாரதிபுத்திரனின் இயற்பெயர் பாலுசாமி. எண்ணிக்கையில் குறைவாக எழுதினாலும் தனது 'மாரிக்கால இரவுகள்', 'மிளகுக் கொடிகள்' (மலையாளக் கவிதைகளின் மொழிபெயர்ப்பு) ஆகிய கவிதைத் தொகுப்புகளின் மூலம் இலக்கிய உலகின் கவனத்தை ஈர்த்தவர். சென்னை கிறித்துவக் கல்லூரியின் தமிழ்த்துறைப் பேராசிரியராகப் பணியாற்றும் இவர் பாரதி பற்றிய ஆய்வாளர், நாயக்கர் கால ஓவிய – சிற்ப – கட்டிடக்கலைகள் குறித்து ஆராய்ந்து வருபவர், கலை இலக்கிய விமர்சகர் என்று பல பரிமாணங்களைக் கொண்டவர்.

எது குறித்தும் ஆழமான பார்வையைக் கொண்டிருக்கும் பாரதி புத்திரன் அவர்களிடம் இருந்து பகிர்ந்து கொள்ள வேண்டியவை ஏராளம். ஆனால் எமக்குண்டான ஊடகவெளி, காலம் ஆகியவற்றைக் கருத்திற் கொண்ட நேர்காணல் இது.

➤ **தமிழ்க் கவிதைச் சூழலில் ஈழத்துக் கவிதைகள் ஏற்படுத்தியிருக்கும் தாக்கம் குறித்து முதலில் சொல்லுங்கள்?**

போராட்டத்தைப் பற்றி எழுதுவதற்கும் போராடிக் கொண்டே எழுதுவதற்குமான வேறுபாட்டை, இரத்தம் சிந்துவதைப் பற்றி எழுதுவதற்கும் இரத்தம் சிந்திக் கொண்டே எழுதுவதற்குமான வேறுபாட்டை ஈழப் போராட்டத்தோடு வந்த படைப்புகளின் மூலமாகத் தான் தமிழகம் நன்கு உணர்ந்து கொண்டது. படைப்புக்கான களங்கள் என்பவை போர், போரின் வெற்றி, உயிர் இழப்பு, உறவுகளின் சிதைவு, இழப்புகளுக்கான ஏக்கம், போர் கொள்வதற்கான எழுச்சி, அரசியல் மாச்சரியங்கள் என விரிந்து சென்றதும், இயற்கைக்கும் வாழ்க்கைக்கும் புதிய அர்த்த பரிணாமங்கள் பெற்றதும் கவிதையின் உள்ளடக்கத்தைப் புதியது ஆக்கின. இப்படைப்புக்களின் வெளிப்பாடுகளும் சொல்லாடல்களும் நேரடியானதாகவும் சொற் சிக்கனம் மிக்கதாகவும் புனைவு தவிர்ந்ததாகவும் உள்ளன. இவை தமிழ்க் கவிதையின் போக்கில் மாற்றங்களைக் கொண்டு வந்துள்ளன. குறிப்பாகப் பெண் கவிஞர்களின் கவிதைகளில் ஒலித்த புதிய குரலும், விடுதலை வேட்கையும், புதுமை ஆர்வமும் தமிழின் இக்காலப் பகுதிப் பெண் கவிஞர்களை மிக வெகுவாகப் பாதித்தும் உருவாக்கியும் உள்ளது.

➤ **கவிதை அரசியல் பேசுவதை அல்லது போராட்டம் பற்றிப் பேசுவதை நிராகரிக்கின்ற போக்கும் நிலவுகிறதே?**

போராட்டம் என்பது வாழ்வின் நியதி. கவிதை என்பது வாழ்வின் பிரதிபலிப்பு. இந்நிலையில் போராட்டம் கவிதையில் பிரதிபலிக்காமல் இருப்பது எப்படிச் சாத்தியம்? எந்த ஒரு காலகட்டத்திலும் உள் முரண்பாடுகளும் வெளி முரண்பாடுகளும் இல்லாமல் வாழ்க்கை நிகழ்ந்ததும் இல்லை; நிகழப் போவதுமில்லை. ஆகவே வாழ்வு தரும் உணர்வுகளையும் எண்ணங்களையும் தாங்கிவருகின்ற இலக்கியங்களில் இவை அன்னியமாகிவிட முடியாது. ஒரு படைப்பாளி போராட்டத்தின் ஒரு பார்வையாளனாக, விமர்சகனாக, ஒரு போராளியாக.... இப்படி எந்தப் பகுதியைச் சார்ந்தவனாகவும் இருக்கலாம். எந்த ஒரு தளத்தில் இருந்தும் படைப்பு அவனுக்குள் கருக்கொள்ளும்.

கவிதைக்குப் போராட்டம் அன்னியமானது என்று சொல்லிவிட்டால் நாம் புறத்திணையை எங்கு வைப்பது? புறநானூற்றை என்ன செய்வது? .இன்று வரை தொடரும் மரபுகளைப் புறக்கணித்து இலக்கியம் பற்றிப் பேசுவது யதார்த்தத்தைப் புறக்கணிப்பது போல ஆகும்.

➤ **ஈழத்துக் கவிதைகள் பற்றிக் குறிப்பிடுகையில் 'சிக்கல்**



**காலக் கவிதைகளை நிரந்தரம் அணுகுமா' என்று கேட்பவர்களும் உண்டு. அரசியல், போராட்டக் கவிதைகள் எந்நாளும் நிலைக்காதவை என்னும் இக்கருத்துப் பற்றி...**

சங்ககாலக் கவிதைகள் அடிப்படையான மனித உணர்வுகளையும் வாழ்வியல் அறங்களையும் சார்ந்திருப்பதால் இன்றும் நமக்கு இலக்கியமாகத் தான் இருக்கின்றன. அது போல அரசியல் கவிதைகளும் பெயர்களையும் நிகழ்வுகளையும் கடந்து, தாம் முன்வைக்கும் சமுதாய சித்தாந்தத்தால் காலந்தோறும் தொடர்ந்து வரவே செய்யும். அப்படி ஒன்றிரண்டு மிகக் குறிப்பிட்ட நிகழ்வுகளைச் சுட்டிய கவிதைகளாக இருந்தால் அவை தொடர்ந்து வராமல் போனால் தான் என்ன? கவிஞன் தன்னை உந்துகின்ற உணர்வுக்கும் எண்ணத்துக்கும் முக்கியத்துவம் காட்டவேண்டுமேயல்லாமல் கவிதையின் நிலைபேறு குறித்து ஏன் யோசித்துக் கொண்டிருக்கவேண்டும்? கண்ணெதிரே உள்ள எரியும் பிரச்சினைகளுக்கான எதிர்வினையாக அமைந்தால் அது அவன் கால மக்களுக்கு இலக்கியமாக இருந்து ஒரு கால கட்டத்தின் தேவையை நிறைவு செய்தவை என்பதோடு போகட்டுமே!

'காலத்திற்கேற்ற வகைகள் - அவ்வவ்
காலத்திற்கேற்ற ஒழுக்கமும் நூலும்
ஞாலம் முழுமைக்கும் ஒன்றாய் - எந்த
நாளும் நிலைத்திடும்
நூல் ஒன்றுமில்லை' - என்பது தான் பாரதியும் ஒப்புக் கொண்ட இயங்கியல் சிந்தனை.

➤ **அரசியல் கவிதைகள் உரத்துப் பேசுவதால் கலைநேர்த்தியை இழந்து விடுகின்றன என்று இன்னொரு விமர்சனமும் இருக்கிறது. அழகியல் (Aesthetics) நோக்கில் முன்வைக்கப்படும் இவ்விமர்சனம் குறித்து உங்கள் பதில் என்ன?**

அழகியல் என்பது காலமும் சமுதாயமும் கட்டமைக்கின்ற மனோதிரியான பிரச்சினை எல்லாக் காலத்துக்கும் எல்லா வர்க்கத்துக்கும் பொதுவான அழகியற் கோட்பாடு என்று ஒன்றும் கிடையாது. ஒரு காலத்தின் உடை தலையலங்காரம் இன்னொரு காலத்தில் நகைப்புக்கிடமாகிறது. ஒரு வர்க்கத்தின் இந்த அலங்கார, நாகரிக வெளிப்பாடுகள் இன்னொரு வர்க்கத்தால் அநாகரிகமானதாக கருதப்படலாம். அதே போலவே கவிதையை உணர்த்தும் முறைகளும் காலத்துக் காலம், வாக்கத்கத்துக்கு வர்க்கம் வேறுபட்டே வந்துள்ளன.

மேலும் கவிதையின் கலை நேர்த்தி என்பது யாருக்கு எந்த இடத்தில் என்பவற்றை ஒட்டியும் யோசிக்க வேண்டிய ஒன்று. மன வாசிப்புக் குரிய கவிதைகளுக்கும், மேடையில் உரைக்கப்படும் கவிதைகளுக்கும், போராட்டத்தில் பாடப்படும் - முழங்கப்படும் கவிதைகளுக்கும் அழகியல் தன்மைகள் வேறு படுகின்றன. ஒவ்வொரு உள்ளடக்கத்துக்குமான உணர்த்தும் முறைகளும் கூட மாறுபடுகின்றன. சங்ககாலத்தில் இருந்து – ஏன், உலகின் எல்லாப் பாகத்திலும் கூட கவிதை வாய்மொழி மரபு சார்ந்தே தோற்றம் பெற்று வந்திருக்கிறது. வாழ்வின் அத்தனை நிகழ்வுகளிலும் உணர்சியின் உந்துதல்களைப் பெற்றபோதெல்லாம் மனவாசிப்புக்கு மட்டும் உரியதாக இல்லாமல் அது பேசவும் முழங்கவும் செய்து தன் வரலாற்றுக் கடமையைச் சிறப்பாகவே செய்திருக்கிறது. இந்நிலையில் மனவாசிப்புக்குரிய கவிதைகளை அளவு கோலாக வைத்து உரத்துப்பேசும் கவிதைகளை கலைநேர்த்தியற்றவை என்ற மதிப்பிடுவது கவிதையின் வரலாற்றையே மறுதலிப்பதுடன் கவிதையில் பன்முகத்தன்மையை நிராகரிப்பதும் ஆகும். இந்த விமர்சனங்கள் உள்நோக்கம் கொண்டவை. இவ்வாறு சொல்வதால் 'தரம்' என்ற ஒன்று குறத்து நாம் கவலை கொள்ளவில்லை என்பது பொருளல்ல; 'தரம்' உள்ள ஒன்றே கூட கால, தேச, வர்த்தமானங்களைப் பொறுத்து வேறுபட்டு உணரத்தக்கது என்பதே புரிந்து கொள்ளவேண்டியது ஆகும்.

➤ **கவிதை 'அரசியல் பேசக்கூடாது', 'உரத்துப் பேசக்கூடாது' என்று செல்லுவதன் பின்னணியில் ஓர் அதிகாரம் அல்லது அரசியல் தொழிடற்படுவதாகச் சொல்ல வருகிறீர்களா?**

'இது கூடாது', 'அது இவ்வாறு தான் இருக்கவேண்டும்' என்றெல்லாம் வைக்கப்படும் கருத்துக்கள் அதிகாரம் தான்! இன்று பின் நவீனத்துவ சிந்தினையில் 'இவ்வாறு சொல்வதற்கு நீ யார்?' என்ற கேள்வியை முன்வைத்து இவற்றை எளிதாகத் தட்டிவிட முடியும். ஆனால் இத்தகைய நிலைப்பாட்டைத் திணிப்பவர்களின் உள்நோக்கத்தை விளங்கிக் கொள்ள வேண்டியது அவசியமாகும்.

'எனக்கு அரசியல் இல்லை' என்று சொல்லுவதே பெரிய அரசியல் தான். இவ்வாறு சொல்கின்றவர் கவிஞராகவோ இலக்கியத்தின் பிறபகுதியைச் சேர்ந்த படைப்பாளியாகவோ இருப்பது நமக்கு விளங்கிக் கொள்ளும் வசதியைத் தருகின்றது. அவர்களது படைப்புகளில் நம்முடைய மொழி, பண்பாடு, அரசியல் தொடர்பாக வைக்கப்படும் எதிர்நிலையான கருத்துக்கள் மூலம், அவர்கள் கலையின் அழகியல் பற்றிக் கவலைப்படவில்லை; மாறாக வேறொரு கருத்தியல் நிலைப்பாட்டுக்காக வஞ்சகமாகத் தொழிற்படுகின்றார்கள் என்பதை விளங்கிக் கொள்ள முடிகிறது. வரலாற்றில் எல்லாத் தளங்களிலும் ஒடுக்கப்பட்டு, உரிமைகள் பறிக்கப்பட்ட ஓர் இனம் தன்னை அடையாளம் கண்டு மீட்டுருவாக்கம் செய்து கொள்ள ஓர் அரசியலை முன்னெடுக்கும் போது தனது மொழி, பண்பாட்டுக் கூறுகளை விதந்து போற்றியே உணர்ச்சி கொள்ளும். இதனைத் தமிழினத்தின் பண்பாட்டில், உணர்ச்சியல் உள்ள குறைகளாகச் சுட்டிக்காட்டுவதற்கு மட்டும் இவர்களுக்கு எழுத்து இடமளிக்கிற போது, தமிழர்கள் இந்த நிலையை அடைவதற்குக் காரணமான தமிழினத்தை அடிமை கொண்ட இனம் குறித்தோ, இன்று வரை மேலாண்மை செய்து வருகின்ற அவர்களது மொழி, பண்பாடு குறித்தோ ஏன் எழுத முடியாமற் போகிறது? பிறவற்றை விமர்னம் செய்பவர்களுக்கு ஏன் சுய விமர்சனம் மட்டும் இல்லை? இந்தக் கேள்விகளைக் கேட்டுக் கொள்ளும் போது தான் இவர்களிடம் தொழிற்படும் அரசியலைப் புரிந்து கொள்ள முடிகிறது.

➤ **பாரதிக்கு வழங்கப்பட்ட உயரத்தை விடத், தமிழ் அடையாளங்களைத் தேடித் தமிழ்த் தேசியத்தின் குரலாக ஒலித்த பாரதிதாசனுக்குத் தமிழகம் தந்துள்ள உயரம் குறைவாக இருக்கிறதே?**

பாரதியையும் யார் தான் உடனே அங்கீகரித்தார்கள். "பாரதியார் அண்ணாவி புலவரென்பார் சீரறியார் தளையறியார் கல்வியிலே பழக்கமில்லா" என்று கவிதை பாடி அவனை ஒரு இலக்கணக் கூட்டம் புறக்கணித்தது. "பாரதியார் வளர்த்தது பார்ப்பனீயமே" என்று கூறிப் பகுத்தறிவு வட்டம் அவனைப் பிறப்புக்காகவே ஒதுக்கியது. "பார்ப்பானை ஐயரென்று காலமும் போச்சு" - என்று கூத்தாடினான் என்பதற்காகப் பூணூல் இனமும் அவனைப் பழித்தது. "பராசக்தியை அழைத்தவன் எப்படிப் புரட்சிக்காரனாக முடியும்" என்று சில பொதுவுடமை அரசியல் கட்சிகள் கேள்வி எழுப்பின. இந்தியத் தேசியத்தைப் பாடியதால் சில தமிழ்த் தேசியக் குழுக்களும் புறக்கணித்தன. இத்தனையையும் தாண்டித்தான் அவன் படிப்படியாக உயர்த்தப்பட்டான். படிப்படியாக உயர்த்தப்பட்டதற்கு படிப்படியாகப் புரிந்து கொள்ளப்பட்டது கூடக் காரணமாக இருக்கலாம். ஆனாலும் இந்த எதிர்ப்புகள் இன்னமும் ஓய்ந்து விடவில்லையே! அவன் மகாகவி இல்லை என்று வாதிடுபவர்களும், அவனை இந்துத்துவவாதி என்று எதிர்ப்பவர்களும் கூட இருக்கிறார்கள் தானே!

திராவிட அரசியலும், பொதுவுடமை அரசியலும் நமக்குத் தந்த சிந்தனைக்குச் சிறந்த உணர்ச்சிப் பங்களிப்பாற்றியவர் பாவேந்தர். அவர் வாழும் காலத்திலேயே மதிப்பைப் பெற்றிருந்ததும் உண்மை. அதேசமயம், அவருக்கு உரிய இடத்தை அவரைப் பயன்படுத்திய இந்தக் கட்சிகள் தரத் தவறிவிட்டன என்பதையும் மறுப்பதற்கில்லை. திராவிட இயக்கத்தின் தளகர்த்தராகச் செயல்பட்ட இவரது முழுமையான வாழ்க்கை வரலாற்றைக் கூடத் திராவிட இயக்கங்கள் முன்வைக்கவில்லை. பாரதிதாசன் பார்ப்பனர்களாலோ, அவர்களது ஆளுமைக்குட்பட்ட தொடர்புசாதனங்களாலோ ஒரு போதும் ஆதரிக்கப்படப் போவதில்லை. இவற்றையும் தாண்டி அவன் மேலெழுவதற்கு இந்தத் திராவிட இயக்கங்கள் இன்னமும் முயற்சிக்க வேண்டும். வருங்காலங்களில் தேசிய இன எழுச்சியும் அரசியலும் மேல் வருகின்ற போது இன்னும் பேசப்படுபவராக அவர் தான் இருப்பார்.

( தொடர்ச்சி அடுத்த வாரம் )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# VMS FINANCING INC.

## உங்கள் நிதித் தேவைகளுக்கு நாங்கள் உதவிடக் காத்திருக்கிறோம்

பலவருடகால கனடிய வங்கித்துறை அனுபவம் எமது பக்கம்



- Mortgage
- Line of Credit
- Credit Cards
- Etc...

குறுகிய காலத்தில் உங்கள் நிதித் தேவைகள் பூர்த்தியாகிவிடும்

## மேலதிக விபரங்ளுக்கு: கிருஷ்ணா

**3410 Sheppard Ave. E**
**Suite 1A**
**Scarborough, On**

**416.293.5800**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SABA
AUTO TECH INC.
For Excellent Auto Repair & Body Work
Call: Logan
416.285-7133
90 Hymus Rd,Unit 5
Scarborough, On.
M1L 2C9



# திரைக் கதம்பம்

ADI Computer Repair
Network-Internet-Sharing your Computer
PC Maintenance -Update BIOS
Upgrade Windows & Software Install
Upgrade Your System- Memory
Trouble Shooting - Hardware Lookup
New Computer - Customized Assemble
Call Nathan ( Network Specialist )
Phone: 416.850.5814 or 416.915.0161
Email: inathan@yahoo.com or adi_repair@hotmail.com

## விருதுகள் சுமந்த சிவாஜி

**நடிகர் திலகம் சிவாஜிகணேசன் மூன்றாம் ஆண்டு நினைவு தினம் 21.7.2004**

சிவாஜிகணேசன் புகழ்பெற்ற நடிகராக வளரத்தொடங்கிய போதும் தாய் வீடான நாடகத்துறையை அவர் மறக்கவில்லை. தனது சிவாஜி நாடக மன்றத்தால் வீரபாண்டிய கட்டப் பொம்மன் நாடகத்தை 100 முறை அரங்கேற்றி இருக்கிறார். அதற்கு மேலும் அவரால் நிகழ்த்தி இருக்க முடியும். அரங்கில் நிஜமாகவே கட்டப் பொம்மனாக மாறி கர்ச்சிக்கும் போது பல



தடவை வாயில் இரத்தம் கக்கி மயங்கியதால் அது தடைப்பட்டது. அப்படி உயிரைக்கொடுத்து நடித்த அந்தப் படம் தான் 1960 இல் கெய்ரோ நகரில் நடைபெற்ற ஆசிய ஆபிரிக்க திரைப்பட விழாவில் சிறந்த படமாக தெரிவு செய்யப்பட்டது. அத்திரைப்படத்தில் நடித்தமைக்காக சிறந்த நடிகர் விருது வழங்கிச் சிவாஜிகணேசன் கௌரவிக்கப்பட்டார். கூடவே வெண்கலத்தாலான நந்துச்சிலை ஒன்றும் பரிசளிக்கப்பட்டது. இதன் மூலம் அயல் நாட்டு விருதைப் பெற்ற முதல் இந்தியர் ஆனார்.

கெய்ரோவில் விருதைப்பெற்ற போது எகிப்திய அதிபராக இருந்த நாசர் சிவாஜிகணேசனுக்கு விருந்தளித்து நட்புப் பாராட்டினார். பதிலுக்கு சிவாஜிகணேசனும் நாசரைத் தனது இல்லம் அழைக்க விரும்பினார். இந்தியாவுக்கு இன்னொரு நாட்டுத்தலைவர் வர குடியரசுத் தலைவர் அனுமதி இருக்க வேண்டும் என்ற அரசியல் சட்டம் அதற்குத் தடையாக இருந்தது. ஆனால் சிவாஜி பிரதமர் நேருவின் அன்புக்கு உரியவராக இருந்ததால் நாசர் இந்தியா வர விசேட அனுமதி வழங்கப்பட்டது. சிவாஜி இல்லத்தில் அன்பு கலந்த விருந்தோம்பலில் எகிப்து அதிபர் நாசர் குடும்பம் மெய்மறந்திருந்த போது ஒட்டுமொத்த ஆசியாவே இந்தியாவை உன்னிப்பாகப் பார்த்தது.

கென்னடியை அதிபராகக் கொண்ட அமெரிக்க அரசு 1962ம் ஆண்டு சிவாஜியைப் பெருமைப்படுத்தியது. அமெரிக்க கலாச்சாரத் தூதரகம் அவருக்கு 'கலாச்சாரத்துாதுவர்' அந்தஸ்து வழங்கிக் கௌரவித்ததுடன் நயாகரா நீர்வீழ்ச்சி நகரத்துக்கு அவரை ஒரு நாள் மேயராக நியமித்தும் அழகு பார்த்தது. அந்நகர மக்கள் சம்பிரதாயப்படி அவருக்குத் தங்கச் சாவி வழங்கி மகிழ்ந்தனர். இதன் மூலம், நேருவுக்குப் பிறகு அமெரிக்க அரசு கௌரவ மேயர் தகுதி வழங்கிய இரண்டாவது இந்தியர் என்ற இமாலயப் பெருமை சிவாஜியைச் சேர்ந்தது.

1966 ல் இந்திய அரசு இவருக்கு பத்மஸ்ரீ விருதனை வழங்கிக் கௌரவித்தது. மராட்டியவரான சிவாஜியைப் பற்றித் தனது நடிப்பாற்றலால் தமிழகத்தின் பட்டி தொட்டியெல்லாம் எடுத்துச் சென்ற சிவாஜிகணேசனுக்குப் பிரதியுபகாரம் செய்யும் வகையில், அப்போது மராட்டிய அரசு அந்த மாநிலத்தில் சிறந்த நடிகருக்கு என வழங்கப்படும் விருதுக்கு 'சிவாஜிகணேசன் விருது' என்ற பெயரைச் சூட்டியது. இருந்தும் பின்னாளில் தனது 'சிவாஜி பிலிம்ஸ்' படத்தயாரிப்பு நிறுவனத்துக்குரிய குறியீட்டுச்சின்னமாக சிவாஜியைப் பயன்படுத்த மராட்டிய அரசு சிவாஜி கணேசனுக்கு அனுமதி வழங்காததால் தனது தாயாரின் படத்தை அவர் பயன்படுத்த நேர்ந்தது குறிப்பிடத்தக்கது.

1984 இல் மறுபடியும் இந்திய அரசு 'பத்மபூஷன்' என்ற உயரிய விருதை சிவாஜிகணேசனுக்கு வழங்கியது. 1995ம் ஆண்டில் பிரான்ஸ் நாட்டின் மிக உயர்ந்த விருதான 'செவாலியே' விருது வீரபாண்டிய கட்டமொம்மன் படத்துக்காக வழங்கப்பட்டது. அப்போது தமிழக அரசு மிகப்பெரிய அளவில் தன பங்குக்கும் விழா எடுத்து சிவாஜியை மரியாதை செய்தது. அந்த ஆண்டில் அமெரிக்க அரசு அவரை மறுபடியும் அழைத்தது. மூன்று நகரங்களுக்கு அவரை கௌரவ மேயராக்கியது. இந்த நேரத்தில் சிவாஜி நடித்து வெளிவந்திருந்த 'தேவர்



மகன்' படத்தில் அவரது நடிப்புக்காக 'ஸ்பெஷல் ஜுரி' விருதை மத்திய அரசு வழங்கியது. இந்தியாவின் இசைக்குயில் லதாமங்கேஷ்காருக்கு 'பால்கே' விருது வழங்கப்பட்டபோது பரிசு பெறும் நேரத்தில் "என் அண்ணன் சிவாஜிக்கு இதைக் கொடுக்காமல் எனக்குக் கொடுக்கிறீர்களே" என ஜனாதிபதியிடம் லதாமங்கேஷ்கார் சுட்டிக்காட்டியதும் 1997 இல் இந்திய அரசின் உயர்ந்த விருதான 'தாதா சாஹிப்பால்கே' சிவாஜிகணேசனுக்கு வழங்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

ஆனால், தேசிய அளவில் இவர் நடித்த 9 படங்களும் மாநில அளவில் 5 படங்களும் சிறந்த படங்களுக்கான விருதுகளையும், இவர் சிறந்த நடிகருக்கான மாநில விருதையும், 1986ல் சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழகத்திலிருந்து 'டாக்டர்' பட்டத்தையும் பெற்றிருந்தும் கூட தேசிய அளவிலான சிறந்த நடிகருக்கான விருது கடைசி வரையில் கிடைக்கவே இல்லை.

விருதுகளுக்கே கௌரவம் சேர்த்த சிவாஜியின் நெஞ்சில் புதைந்திருந்த நெடுநாளைய வருத்தம் இது.

லெகசி மருத்துவ நிலையம்
Legacy Medical Centre

Family Physicians Walk-in Clinic
குடும்ப வைத்திய நிலையம்
Dr. R. லம்போதரன்
( MBBS - Srilanka ) ( CCFP - Canada )
Dr. திருமதி. அருனா லம்போதரன்
( MBBS - Srilanka ) ( Diploma in Obstetrics-New Zealand ) ( CCFP - Canada )
9 A.M. - 9 P.M.
7 Days a Week
416-299-8100
5637 Finch Ave. East
Unit #7 ( Finch & Tapscott)
Scarborough, On
( நாக பூஷணி அம்மன் கோவில் அருகில் )
Finch Ave. E
Markham Rd.
Tapscott Rd.
N
Sheppard Ave. E

## பழஞ்சோறு...பழஞ்சோறு... பழஞ்சோறு



தமிழ் சினிமா வரலாற்றில் ஆயிரம் அடி நீள படச்சுருளில் ஒரே தடவையில் படம் பிடிக்கப்பட்ட வசனக் காட்சி 'ராஜா ராணி' படத்தில் இடம் பெற்றுள்ளது. படத்தில் 10 நிமிடம் இடம் பெறும் இந்த காட்சிக்கான வசனத்தை மு. கருணாநிதி எழுத, சிவாஜி கணேசன் பேசி நடித்திருந்தார். சிவாஜிக்கு சேரன் செங்குட்டுவன் வேடம். ராஜசுலோச்சனா, 'சுவையான கதையொன்று சொல்லுங்கள் அத்தான்...' என்று கேட்பார். அதற்கு சேரன் செங்குட்டுவனாக வரும் சிவாஜி, 'சுவைக்காது கண்ணே அது... சேரன் மகளை சோழன் மணந்தான். சோழனுக்கு செல்வன் பிறந்தான்.' என்று தொடங்கும் மிக நீண்ட வசனத்தை ஒரே காட்சியாகப் பேசி முடித்து விட்டார். இயக்குநர் பீம்சிங் உட்பட அத்தனை பேரும் கைதட்டி, சிவாஜிக்கு பாராட்டை தெரிவித்தபோது எதிர்பாராத அந்த சம்பவம் நடந்தது.சிவாஜி நடித்த காட்சியை கமரா தன்னுள் சரியாக பதிவு செய்து கொண்டு விட்டது. ஆனால், ஏதோ பிரச்சினையில் சிவாஜி பேசிய வசனம் முழுமையாகப் பதிவாகவில்லை. படப்பிடிப்புக் குழுவினருக்கு அது ஏமாற்றமாக இருந்தாலும் சிவாஜி மனம் தளரவில்லை.ஒலிப்பதிவுக் கருவியை மட்டும் இயக்கச் சொன்ன சிவாஜி, முழு வசனங்களையும் மீண்டும் பேசி முடித்தார். கருவியை இயக்கிப் பார்த்தபோது வசனங்கள் தெளிவாக பதிவாகியிருந்தது. ஒளிப்பதிவையும், ஒலிப்பதிவையும் திரையில் ஓட்டிப் பார்த்த போது சிவாஜி பிசகின்றி வசனம் பேசி நடித்தது தெளிவாகியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Anbu's Construction Co.
We install hardwood floors.
We do all kind of basment & painting jobs.
நம்மரின் தரமான சேவை

For Services
Call Bala.
416 -994-0729




VMS Travels & Tours Inc.

416-293-5800
Call us for our best price
3419 Sheppard Ave. East, Unit 1A
Toronto, Ontario, M1T 3K4
www.vmstravels.com



## சொர்ணமால்யாவை சேர்த்து வையுங்கள் - கணவர் மனு

நடிகை சொர்ணாமால்யாவை தன்னுடன் சேர்த்து வைக்குமாறு அவரது கணவர் அர்ஜுன் குடும்ப நல நீதி மன்றில் மனுத்தாக்கல் செய்துள்ளார். சொர்ணமால்யா 2002ஆம் ஆண்டு அமெரிக்காவில் வேலைபார்த்து வந்த அர்ஜுனைத் திருமணம் செய்து கொண்டார். திருமணமாகி இரண்டு மாதம் வரையில் அமெரிக்காவில் தங்கியிருந்து மீண்டும் சினிமாவில் நடிப்பதற்காக அவர் சென்னை திரும்பியுள்ளார். அதற்கு அர்ஜுனும் அவரது பெற்றோரும் எதிர்ப்புத் தெரிவித்ததையடுத்து கணவரது குடும்பத்தினர் தன்னைத் கொடுமைப்படுத்துவதாக காவல் துறையில் புகார் செய்த சொர்ணமால்யா இப்போது தனியாக பிரிந்து வாழ்ந்து வருகிறார். இந்நிலையிலேயே, சொர்ணமால்யாவை சேர்த்துவைக்குமாறு கோரி கணவர் குடும்ப நல நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்துள்ளார்.

## காமராஜர் மணி மண்டபத்துக்கு சரத்குமார் ரூபா 25 இலட்சம்

நாடார் பேரவையின் சார்பில் சென்னையில் தீவுத்திடலில் காமராஜரின் 102வது பிறந்த நாள் விழா அண்மையில் கொண்டாடப்பட்ட போது, காமராஜருக்கு மணி மண்டபம் கட்டுவது என்று தீர்மானம் இயற்றப்பட்டுள்ளது. பல்லாயிரக்கணக்கானோர் கலந்து கொண்ட இந்த விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய போதே நடிகர் சரத்குமார் காமராஜர் மணிமண்டபத்துக்கு தன்னுடைய சார்பில் ரூபா 25 இலட்சத்தை வழங்குவதாக அறிவித்துள்ளார். கடற்கரை சாலையில் அமைய உள்ள இந்த மணி மண்டபத்துக்கான செலவு ரூபா 5 கோடியாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

## இசைத் தம்பதியர்

'காத்திருப்பேன்' படத்தின் மூலம் இசையமைப்பாளராக அறிமுகமாகியுள்ள இளையராஜாவின் மகளான பவதாரிணிக்கு, உதவியாளராக ராஜலட்சுமி என்னும் பாடகி பணிபுரிந்து வருகிறார். ஜாம்ஷெட்பூரைச் சேர்ந்த ராஜலட்சுமி, ஜூட், நந்தா, ஆகிய படங்களில் ஒவ்வொரு பாடலைப் பாடியுள்ளார். இவரது கணவரான சஞ்சய்யும் இசைத்துறையில் நீண்டகால அநுபவம் பெற்றவர். ஏ.ஆர் ரஹ்மான், ஹாரிஸ் ஜெயராஜ் ஆகியோரிடம் பணியாற்றிவருகிறார்.

## தண்ணீர் படமாகிறது

நதி நீர் இணைப்பு, காவிரி பிரச்சினை என்று இந்தியாவில் அரசியல்வாதிகள் தண்ணீர்ப் பிரச்சினையைக் காட்டி வாக்குக் கேட்டுவர, இப்போது சினிமாக்காரர்களும் தண்ணீரைக் கையில் எடுத்துள்ளனர். 'பண்டிட் குயின்', 'எலிஸபெத்' ஆகிய படங்களை இயக்கிய சேகர்கபூர் 'பானி' என்கிற பெயரில் படமொன்றை இயக்க உள்ளார். இந்தியாவில் எதிர் காலத்தில் தண்ணீர் பிரச்சினை எப்படியெல்லாம் தலைவிரித்தாடும் என்பதை சித்திரிக்கும் படமாக இது அமையும்.

## சமத்து சவுத்ரி

சூப்பர் குட் பிலிம்ஸ் தயாரிப்பு நிறுவனத்தின் பெயரில் ஆர். பி. சவுத்ரி தயாரித்த சில படங்கள் சரியாகப் போகாததால், விநியோகஸ்தர்கள் சவுத்ரியிடம் தோல்வியடைந்த படங்களுக்காக அடுத்த படங்களில் கணிசமான அளவு பணத்தை தள்ளுபடி செய்யுமாறு கோரிக்கைவிடும் சூழ்நிலை உருவாகியுள்ளது. இந்தப் பிரச்சினையில் இருந்து சட்ட பூர்வமாகத் தப்பித்துக் கொள்ளும் வகையில், சவுத்ரிதயாரிப்பு இப்போது ஜே. ஜே. குட் பிலிம்ஸ் என்ற பெயரில் சரத்குமார் நடிக்கும் 'சத்ரபதி' படத்தைத் தயாரிக்கத் தொடங்கியுள்ளார். இதில் ஆர். பி. சவுத்ரியின்ஆசியுடன் என்று மட்டுமெ பெயர் போடப்படுகிறது.



## திரிஷா வருத்தம்

நடிகை திரிஷா தற்கொலை முயற்சியில் இறங்கினார், கார் விபத்தில் சிக்கினார் என்று சமீபத்தில் வெளியான செய்திகள் குறித்து திரிஷா வருத்தம் தெரிவித்துள்ளார். இது பற்றி திரிஷா, கருத்து தெரிவிக்கையில் "என் மேல் உள்ள பொறாமை காரணமாகத்தான் இப்படி வதந்திகளைப் பரப்பிவிடுகிறார்கள்,. ஆனால் இது போன்ற வதந்திகளை என்னால் சாதாரணமாக எடுத்துக் கொள்ள இயலவில்லை. அதிர்ச்சியாக இருக்கிறது" என்று குறிப்பிட்டுள்ளார்.

## சூர்யாவுக்கு வேண்டுகோள்

நடிகர் சூர்யாவுக்கு நேரிலும், தபால் மூலமும் அவரது ரசிகைகள் ஜோதிகாவைத் திருமணம் செய்து கொள்ளாதீர்கள் என வேண்டுகோள் விடுத்து வருகின்றனர். இப்போது இன்னும் ஒரு படி மேலே போய், காரைக்குடியில் ஜோதிகா கலந்து கொண்ட படப் பிடிப்பின் போது கல்லூரி மாணவர்கள் சிலர் கூட்டாகச் சேர்ந்து கொண்டு 'எங்கள் பேரழகன் சூர்யாவைக் காதலிக்காதே' என்று கோஷம் எழுப்பியுள்ளனர்.



RBC
ROYAL BANK FINANCIAL GROUP
Mortgage Centre
"வீடு உயிர்ப்புள்ள ஒரு இயக்கம். வீடு பற்றிய நினைவில்லாத மனிதர்களே இல்லை என்கிற அளவுக்கு அது உயிர் பெற்றது. தாய்மையாக, தோழமையாக பரி வோடும் கனிவோடும் எங்களோடு கலக்கிறது. சிநேகம் கொள்கிறது. எப்போதும் எங்களோடு ஒரு இணக்கமான உறவை அது விரித்திருக்கிறது"
உங்கள் கடின உழைப்பை வீடொன்றில் முதலிடும் போது குறைந்த வட்டிவீதம் என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள..
எங்களை அழையுங்கள்....416.438.1688

Vince Sinnadurai
Account Manager
Residential Morgages
416-917-9462
Abirami ( Abby ) Sri Haran
Mobile Mortgage Specialist
416-472-3195
Mailvaganam (Mike)
Account Manager
Residential Morgages
416-220.1184

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**Nallur Video Centre**
Audio, Video, CD & Gift

VHS to DVD Record
DVD to DVD
PAL< > SCAM < > NTSC

Any System
*NvC*
607-1 Parliament St, 1St Floor
Toronto, Ontario ( Wellesly & Parliament )
Phone: 416.944.0238




## அன்பார்ந்த குழந்தைகளே நீங்கள் வரையும் சித்திரங்களை எமக்கும் அனுப்பி வையுங்கள் அழகானவற்றை இந்தப் பக்கத்தில் பிரசுரிக்கிறோம்

# குபேரனின் விருந்து

தனத்துக்கு அதிபதியான குபேரனிடம் செல்வத்தில் தன்னை மிஞ்சியவர் யாரும் இல்லை என்ற செருக்கு ஏற்பட்டது. இதனால் அதுவரை யாரும் அளித்திராத, கேள்விப்பட்டிராத ஒரு பெரிய விருந்துக்கு ஏற்பாடு செய்து தனது பணபலத்தை நிலை நாட்ட விரும்பினார். அப்போதுதான் தனக்கு பெருமை கிடைக்கும். தன்னை அனைவரும் மதிப்பார்கள் என்று அவர் கணக்குப்போட்டார்.

விருந்து பற்றி கூறி சிவபெருமானை அழைப்பதற்காக கயிலாயத்திற்குச் சென்றார், குபேரன். தான் எவ்வளவு செலவு செய்தாலும் தன்னிடம் உள்ள செல்வம் அழிந்துபோய் விடக் கூடாது என்று சிவபெருமானிடம் வரம் வாங்கியவர் அல்லவா குபேரன்?.. அதனால்தான் முதலில் சிவபெருமானை அழைப்பதற்குச் சென்றார்.

தன்னால் அந்த விருந்துக்கு வரஇயலாது என்று கூறிய சிவபெருமான் தனக்குப் பதிலாக தனது மைந்தன் விநாயகரை அனுப்பி வைப்பதாக கூறினார்.

குபேரனுக்கு அதிருப்தி. சிவ பெருமான் மட்டும் அந்த விருந்தில் பங்கேற்றுவிட்டால் தனக்கு அளவற்ற செல்வாக்கு கிடைக்குமே என்று நினைத்தார். ஹசரி, சிவபெருமான் வராவிட்டாலும் அவரது மகனையாவது அனுப்பி வைக்கிறாரே" என்று நினைத்துக் கொண்டார். குறைந்த பட்சம் ஒரு குடும்பத்தில் ஒருவராவது கலந்து கொண்டால்தான் தான் நடத்தும் விருந்துக்கு மகிமை கிடைக்கும் என்று கருதி ஒவ்வொரு கடவுளின் வசிப்பிடங்களுக்கும் நேரடியாகச் சென்று அழைப்பு விடுத்தார், குபேரன்.



விருந்து நாளன்று குபேரனின் அரண்மனை ஹகளை" கட்டியது. அத்தனை தெய்வங்களின் குடும்பத்தினரும் தவறாமல் அங்கே வந்து விட்டனர். பந்தி பரிமாறுவதெற்கென்றே தனியாக மிகப் பெரிய விருந்து மண்டபம் கட்டப்பட்டிருந்தது. அந்த விருந்துக்கு தலைமை தாங்கும் பொறுப்பை விநாயகர் ஏற்றிருந்தார். அவர் அங்கே வந்ததும் வராததுமாக "எங்கே விருந்து எனக்கு முதலில் பந்தி பரிமாறுங்கள்" என்று பலத்த குரலில் கேட்டார். தலைமை விருந்தினர் என்பதால் விநாயகருக்கென்று மண்டபத்தில் தனியாக ஒரு ஆசனம் போடப்பட்டது. ஒரு மேஜை□யும் கொண்டு வந்து வைத்தார்கள். விநாயகருக்காக அறுசுவை உணவுகளும், பதார்த்தங்களும் கொண்டு வந்து வைக்கப்பட்டன. உணவு பொருட்கள் வைத்த சிறிது நேரத்திலேயே அவற்றையெல்லாம் காலி செய்து விட்டார், விநாயகர். ஆனாலும் அவர் சாப்பிடுவதை நிறுத்தவில்லை. "ம்.. இன்னும் போடுங்கள்...போடுங்கள்" என்று கேட்டு சாப்பிட்டுக் கொண்டே இருந்தார். இரண்டு, மூன்று, நான்கு பந்திகள் சாப்பிட்ட பின்னரும் அவரது பசி அடங்கவே யில்லை. அவர் தொடர்ந்து சாப்பிட்டுக் கொண்டே இருந்தார். இதனால் உணவு தீர்ந்து கொண்டே வந்தது. ஒரு நிலையில் இனி பரிமாறுவதற்கு உணவு எதுவும் இல்லை என்ற நிலை உருவாகி விட்டது. விநாயகரை இனி சாப்பிடாதீர்கள் என்று வற்புறுத்தவும் குபேரனால் முடியவில்லை.

அப்படி கேட்டுக் கொண்டால்தான் தனது பெயர் கெட்டுவிடும் என்று நினைத்தார். இதனால் "தொடர்ந்து சமையல் நடக்கட்டும்" என்று உத்தரவிட்டார்.

ஆனால் விநாயகரின் அகோர பசிக்கு குபேரனின் சமையற்கலைஞர்களால் ஈடு கொடுக்க முடியவில்லை.

உடனே பந்தியில் இருந்து விநாயகர் எழுந்தார். "என்னை எதற்கு விருந்துக்கு அழைத்தீர்கள். இதெல்லாம் ஒரு விருந்தா? நான் கயிலாயம் செல்கிறேன்" என்றவாறே அங்கிருந்துகோபத்துடன் கிளம்பினார்.

குபேரன் கெஞ்சினார். "இதோ சிறிது நேரத்தில் உங்களுக்குத் தேவையான உணவு தயாரித்து தருகிறேன், போகாதீர்கள்" என்றார்.

விநாயகர் கேட்பதாக இல்லை. அங்கிருந்து கிளம்பிவிட்டார். குபேரனும் விநாயகரைத் தொடர்ந்து கயிலாயத்திற்குச் சென்றார்.

விநாயகர் தனது சிவபெருமானிடம், "தந்தையே என் வயிற்றுக்குப் போதுமான உணவு விருந்தில் கிடைக்கவில்லை. குபேரன் என்னை ஏமாற்றிவிட்டார்" என்று புகார் செய்தார்.

அதைக் கேட்ட சிவபெருமான் அங்கே வந்திருந்த குபேரனிடம், "என்ன குபேரா இது? நீ என்ன விருந்து நடத்தினாய்?விருந்தில் உணவில்லை என்றால் அதற்குப் பெயர் விருந்தா?" என்று கடிந்து கொண்டார்.

குபேரன் பதில் பேச முடியாமல் "அது வந்து... அதுவந்து..." என்று இழுத்தார். உடனே சிவபெருமான் தன் விநாயகரிடம், "நீ உன் தாயாரிடம் சென்று உணவு கேட்டு சாப்பிடு" என்று கூறி விட்டு ஏளனமாக குபேரனைப் பார்த்தார்.

குபேரன் சிவபெருமானிடம் சரணடைந்தார். "பெருமானே என்னை மன்னித்துவிடுங்கள். நான் அளித்த விருந்து கேலிக்குரியதாகி விட்டது. இனிமேல் நான் ஆணவம் கொள்ளமாட்டேன்" என்று கெஞ்சினார். தனது அகந்தையை உணர்த்தவே சிவபெருமான் விநாயகர் மூலம் இப்படியொரு நாடகத்தை நடத்தியிருக்கிறார் என்பதும் குபேரனுக்குப் புரிந்தது. அன்றிலிருந்து குபேரன் தனது கர்வத்தை ஒழித்துவிட்டார்.


**MORTGAGE - MORTGAGE- MORTGAGE**

**Major Banks Only**



உங்கள் அனைத்து மோட்கேஜ் தேவைகளுக்கும் நாடுங்கள்

| | |
|---|---|
| 5 Years Closed | 4.9% |
| 4 Years Closed | 4.8% |
| 3 Years Closed | 4.7% |
| Variable | 3.0% |



**VIJAY MARIAMPILLAI**
Mortgage Specialist
**Cell: 416.566.0621**

2190 Warden Ave, Suite 206, Scarborough, On
Office: 416.499.4700 Fax: 416.499.9546

**MORTGAGE - MORTGAGE- MORTGAGE**




" எம் தந்தையும் தாயும் நின்று குலாவியதும் இந் நாடே "

யாழ் பொது நூலகம்
புகைப்படம்
தலங்காவலூரான்




# சிங்கப்பூரில் உங்கள் இல்லம்

**NEW KERBAU INN**
தமிழில் பேசுவோம்.
தாய்மொழியை வளர்ப்போம்.

கட்டணங்கள் $40 ல் இருந்து.
குளிர் ஊட்டப்பட்ட அறைகள்.
சகல அறைகளிலும் தொலைக்காட்சி, தொலைபேசி, சிறிய குளிர்சாதனப் பெட்டி, இணைந்த குளியல் அறை வசதி.
கடைகளுக்கும் போக்குவரத்துக்கும் சுலபமாகச் செல்லும் வழி
திருமணச் சேவைகள், சுற்றுலா ஒழுங்கு செய்தல், விமான நிலையத்திலிருந்து ஏற்றிச் செல்லல்
- உங்கள் வேண்டுகோளுக்கிணங்க ஒழுங்கு செய்யப்படும்-

*By Viva-Link Holdings*

முன்கூட்டியே பதிவு செய்ய: Phone: 65.63 96 55 00 ( V.Pushpa ) Email: newkinn@singnet.com.sg


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவல்

(சென்ற வாரத் தொடர்ச்சி)

4

ஈழத்தின் சிறுகதை - நாவலாசிரியர்களில் பிரதானமானவரான செங்கை ஆழியானின் நாவல்களில் வாடைக்காற்றுப் பிரபலமானது. நெடுந்தீவின் புவியியல், சமூகப் பின்னணிகளில் உருவான இந்த நாவல் விமர்சகர்களால் சிலாகிக்கப்பட்ட அதே வேளை பெரும் சர்சைகளுக்கும் சிக்கல்களுக்கும் ஆளானது. 1973இல் வீரகேசரி பிரசுரமாகவும், 1978இல் திரைப்படமாகவும், 2001இல் பூபாலசிங்கம் புத்தக நிலையத்தினரால் இரண்டாவது பதிப்பாகவும் வெளிவந்து பல்லாயிரக் கணக்கானவர்களை வசீகரித்த வாடைக்காற்று இப்போது வைகறை வாசகர்களுக்காக நாவலாசிரியரின் உளப்பூர்வ அநுமதியுடன் தொடராக மறுபிரசுரமாகிறது.

# வாடைக்காற்று

## -செங்கை ஆழியான்-

அவன் வந்ததிலிருந்து செமியோன் பெயரையும், அவனுடைய திறமையையும்தான் அடிக்கடி கூறுகிறார்கள். மரியதாஸுக்கு அறிமுகமில்லாத அந்தச் செமியோன் மீது கோபம் கோபமாக வந்தது.

"செமியோன் கொடுப்பதிலும் பார்க்க இரு மடங்கு கூலி தருவன். நீங்கள் எல்லோரும் கரைவலையில் வேலை செய்யவேணும்.... வேலை இருந்தாலும், இல்லாவிட்டாலும் ஒவ்வொருவருக்கும் நாள் கூலியாக ஐந்து ரூபா தருவேன். இப்ப வேணுமென்றாலும் அட்வான்ஸ் தருகிறேன்" என்று வீம்போடு மரியதாஸ் கூறினான்.

மரியதாஸ் எழுந்து படலையை நோக்கி நடந்தான்.

பனை மட்டைகளினால் பிணைக்கப்பட்டிருந்த படலையைத் தூக்கித் திறந்தபடி தன்னை அறியாமல் திரும்பி ஒரு தரம் குடிசையைப் பார்த்தான்.

மரியதாஸ் தன்னைப் பார்ப்பதை நாகம்மா கண்டாள். அவன் பார்வை தன்மீது ஊர்வதையும் உணர்ந்தாள். குடிசைக்குள் விருட்டெனப் புகுந்தாள்.

நாகம்மாவின் உயர்ந்து வளர்ந்த தோற்றத்தைப் புகைப்படமென தன் உள்ளத்தில் பதித்துக்கொண்டு, இதயம் பறிகொடுத்த நிலையில் நடந்தான் மரியதாஸ்.

---

நல்ல தண்ணீர் கிணற்றுக்கு வடக்குப்புறமாகச் சிறிது தொலைவில் அமைந்திருந்தது ஊர் மயானம். ஓங்கி வளர்ந்ததொரு ஆலமரமும் சிறியதொரு தங்குமடமும் தான் அந்த மயானத்தில் காணக்கூடியவை.

தங்குமடத்தின் குளிர்ச்சியான சிமெந்து தரையில் விருத்தாசலம் மல்லார்ந்து படுத்திருந்தான். இரண்டு கைகளையும் தலைக்குக் கீழே வைத்தபடி நிம்மதியாக உறங்கிக் கொண்டிருந்தான்.

கறுத்துத் திரண்டிருந்தது அவன் உடல். எண்ணெய் காணாததால் பரட்டை பற்றிப் போன தலைமயிரைப் பழுப்பேறிய ஒரு துவாயினால் மடக்கிக் கட்டியிருந்தான். பழுப்பேறிய ஒரு சாரம் அலங்கரித்தது. முகத்தில் குழந்தைத்தனமான பேதமை நிலவியது ஆலமரத்தின் கீழ் பழுப்பு நிறமான கட்டைக் குதிரை ஒன்று மேய்ந்து கொண்டிருந்தது.

அது தான் விருத்தாசலத்தின் குதிரை. குதிரையும், அவனும் ஒன்றாகவே காணப்படுவார்கள். நெடுந்தீவின் சிறப்புக்களில் ஒன்று இந்தப் போனிக் குதிரைகளாகும். மோட்டார்க் கார்களும், சைக்கிள்களும் இலங்கையில் அறிமுகமாவதற்கு முன்னர் நெடுந்தீவுக் குதிரைகளுக்கு இலங்கையில் எங்கினும் மிகுந்த செல்வாக்கு இருந்தது. குதிரை வண்டில்களுக்கும், தனிச் சவாரிகளுக்கும் இக்குதிரைகளே தேவைப்பட்டன. ஆனால் இன்று இவை அதிகம் பயன்படாத மிருகங்களாகப் போய்விட்டன.

தீவின் கரடுமுரடான வண்டில் பாதைகளில் சிறுவர் முதல் வயோதிபர் வரை 'டக் டக்' என்ற ஒலி எழுப்பியவாறு குதிரைகளில் செல்வது இனிய காட்சி தான். ஒரு பழைய சாக்கினை மடித்துக் குதிரையின் முதுகில் போட்டிருப்பார்கள். ஒரு பலமான கம்பியோ, இரும்புக் கம்பியோ குதிரையின் வாயில் கொடுத்து சேணமாக்கியிருப்பார்கள்.

மேய்ந்து கொண்டிருந்த விருத்தாசலத்தின் குதிரை கனைத்தது. விருத்தாச்சலம் நித்திரை குழம்பி எழுந்து பார்த்தான். "என்னடா இராமா " என்று கேட்கவும் செய்தான்.

குதிரை தலையைச் சிலுப்பிவிட்டுத் தன்பாட்டுக்கு மேயத் தொடங்கியது. ஒருக்களித்துப் படுத்திருந்தபடியே விருத்தாச்சலம் ஒரு புறமாகத் தலையைத் திரும்பிப் பார்த்தான். சற்றுத் தூரத்தில் சண்முகம் வருவது தெரிந்தது.

"சுடலை வயிரவருக்கு உருவம் இருந்தால் அவர் இவனைப் போலத் தான் இருப்பார்''. என விருத்தாச்சலம் எண்ணிக்கொண்டான்.

சண்முகத்தான் என்ற சண்முகம் தங்குமடத்தின் தூணோடு சாய்ந்து அமர்ந்தான். "எப்படிச் சண்முகம் ஊர்ப் புதினங்கள்?....." என்று விருத்தாச்சலம் கேட்டுவிட்டுச் சிரித்தான்.

" என்ன தம்பி, ஏதோ கொழும்பாலே வந்ததுபோல ஏன்புதினம் கேட்கிறீர்.....'' என்றான் கேலியாகச் சண்முகம்.

"உந்தக் கொழும்புக்கு ஒருக்கால் நான் போகாமல் விடவா போறன்...."

சண்முகம் கேட்டான் "நீ எனக்கு முயல் ஒன்று பிடித்துக் கறிக்குத் தா்றன் என்று சொல்லி எத்தனை நாளாகுது. ஏன் தம்பி இப்ப முயல்கள் அம்பிடுகிறதில்லையோ? அல்லது தம்பியினுடைய குறி தவறிப் போகுதோ.....?" விருத்தாச்சலம் விருட்டென்று எழுந்து அமர்ந்து கொண்டான்.

"சண்முகம் இதோ பார்.... நான் ஒரு முயலுக்கு குறிவைச்சு அது தப்பிறதெண்டால், நான் முயல் வேட்டையையே விட்டிடுவேன். துவக்காலை வைக்கமுடியாத லெக்கை என்ரை கூர்த் தடியால் வைப்பன். தெரியுமா?" என்று



கூறிவிட்டு, விருத்தாச்சலம் பக்கத்தில் சாய்த்து வைத்திருந்த நீளமான பொல்லொன்றை எடுத்து கைகளில் உருட்டினான். வளவளப்பான அத்தடியின் ஒரு முனையில் பிடி கழன்ற வில்லுக்கத்தி ஒன்று இறுக்கமாகச் செருகப்பட்டிருந்தது.

கத்தி விருத்தாச்சலத்தின் கை உருட்டலுக்கேற்பப் பளபளத்தது. அதன் பளபளப்பு சண்முகத்தின் கண்களை கூசவைத்தது. "ஏன் பயமா இருக்கோ?...." என்று கேட்டு விட்டு விருத்தாச்சலம் சிரித்தான். "இது எத்தனை முயல்களை ருசி பார்த்திருக்கும் தெரியுமோ?"

அவன் கூறுவதைச் சண்முகம் அவதானித்தபடி ... கூறினான்.

"கடற்கரையில் வாடி ஒன்று அமைக்கப்படுகிறதாம்..... மரியதாசாம். மன்னாரிலிருந்து வந்தவனாம்..... ஏதோ புது மாதிரி மீனைப் பிடிக்க போறானாம். செமியோன் சம்மாட்டி யாருடைய இடத்தில் வாடி போடுறானாம். செமியோன் சம்மாட்டி வந்தவுடன் வில்லங்கம் வரப் போகுது என்று கதைக்கினம்....."

"நானும் கேள்விப்பட்டன், செமியோனை பார்க்கக் கூலியும் கூடத் தரறானெண்டு சொலகிறானாம்.... விசரன் போலக் கிடக்குது. ஏதோ கனக்கவா மீன் பிடிபடப் போகுது?....."

சண்முகம் பீடி ஒன்றை பற்ற வைத்துக் கொண்டான்

"தம்பி ஒன்றைக் கேட்கிறேன், கோவியாதையும்."

"நீ என்ன கேட்கப் போகிறாய் என்று எனக்குத் தெரியும்.... எப்ப கல்யாணம் என்று தானே கேட்கப் போகிறாய்.....? இப்ப என்ன அவசரம்....! பொம்பிளை தயாரா இருக்கு. எப்ப வேணுமெண்டாலும் தாலியைக் கட்ட வேண்டியது தானே?.... என்று விருத்தாச்சலம் சிரித்தான்.

அவன் மனக் கண்களில் நாகம்மாவின் உருவம் தெரிந்தது. அள்ளி முடிந்த கொண்டையும், முல்லைச் சிரிப்புமாய் அவள் நின்றாள். விருத்தாச்சலம் மெதுவாகக் கண்களை மூடிக் கொண்டான். அவனது சிந்தையில் நாகம்மா சிரித்தாள்.

"அப்பு..'' என்று அழைத்தவாறு, விருத்தாச்சலம் பொன்னுக்கிழவரின் குடிசைக்கு வருகிறான். ஒருவரையும் காணோம். தூரத்திலே சில பெண்கள் தண்ணீர் அள்ளப் போவது தெரிந்தது. தண்ணீர் குடிப்போமென்று , குடிசையின் கதவைத் தள்ளிக்கொண்டு உள்ளே நுழைந்தான். மறுகணம் வீல் என்ற அலறல் குடிசைக்குள் எழுந்தது.

திடுக்கிட்டுப் போன விருத்தாச்சலம், குரல் வந்த மூலையைப் பார்த்தான். அங்கே நாகம்மா நின்ற கோலம்? அரையில் பாவாடை மட்டும் அணிந்து செவ்விளநீர்க் காய்களைத் தென்னை மட்டைகளை மறைக்க முயலுவது போல், தனது இரு கைகளாலும் நிர்வாண மார்பை மறைக்க முயன்றாள். ஒரு கையில் அவள் அணியும் மேற்சட்டை காட்சி தந்தது.

இக்காட்சியைக் கண்டு நிலைகுலைந்து போன விருத்தாச்சலம் வெளியே ஓடினான். அவன் தேகம் படபடத்தது. தொண்டை அடைத்துக் கொண்டது.

"தண்ணீர் குடிக்க வந்தன் நாகம்மா" என்றான் அழாக்குறையாக " கூப்பிட்டுக் கொண்டு வரப்படாதோ? நான் சட்டை கிழிஞ்சு போச்சென்று தைச்சுப் போட" என்று குடிசைக்குள் இருந்து நாகம்மா முணுமுணுத்தாள்.

அவள் முணுமுணுத்து அவனுக்கு தெளிவாகக் கேட்டது.

"தெரியாமல் வந்திட்டன் நாகம்மா.... கோவிச்சிடாதே நான் போட்டு வர்றன் என்றான் அவன்."

"தண்ணியைக் குடிச்சிட்டப் போ மச்சான்...." என்ற படி செம்பைக் கொண்டு வந்து அவனிடம் நீட்டினாள். அவளை நிமிந்து பார்க்கக் கூசிய அந்த ஆடவன், தலையைக் குனிந்தபடி வாங்கிக் கொண்டான்.

நினைவுச் சங்கிலித் தொடர் அறுந்தது.

"என்ன தம்பி யோசிக்கிறீர்?..." என்று அவனைச் சண்முகம் உலுப்பினான்.

"ஒன்றுமில்லை.....'' என்று மென்று விழுங்கினான் விருத்தாச்சலம்.

"அது சரிதான் தம்பி, நீர் ஆற அமரப் போட்டால், பொன்னுக்கிழவற்றைப் பேத்தியை ஆராவது நேற்று வந்தவன் அடிச்சுக் கொண்டு போயிடுவான். "

விருத்தாசலத்தின் முகம் திடீரென மாறியது.

"நாகம்மாவை அடிச்சுச் செல்ல இனி ஒருவன் பிறக்க வேணும் என்கிறன்.....!"

"சும்மா கதைக்குக் கேட்கிறன் தற்செயலாக ஏதாவது நடந்து விட்டால்....?

"அப்படி நடந்து விட்டால் நான் மனிதனாக இருக்கமாட்டேன். முயலுகளுன்ரை வயிற்றில் பாய்ந்து பாய்ந்து இரத்த சுவை கண்ட இந்த கூர்த்தடி முதலில் அவனுடைய மார்பில் பாயும். பிறகு....!"

விருத்தாச்சலத்தின் ஆத்திரத்தைக் கண்டு சண்முகம் உண்மையில் பயந்தே போனான்.

"பயமுறுத்தாதே தம்பி...!"



விருத்தாச்சலத்தின் கண்கள் திடீரென வேறிடத்தில் நிலைத்தன. இருபது யார் தூரத்தில் ஈச்சம்பற்றை ஒன்று சலசலப்பதை அவனது காதுகளும் கண்களும் உணர்ந்தன.

"சண்முகம் நீ வெகு நாளாக முயல் கேட்டாய்.... பொறு இப்ப உனக்குத் தா்றன்..... என்று விருத்தாச்சலம் மெதுவாகக் கூர்த்தடியை தூக்கிக் கொண்டு நகர்ந்தான். மறுகணம் அவனது வலது கை விசுக்கென்று ஈச்சம்பற்றை நோக்கி தடியை வீசியது. பற்றைக்குள் "கீச்...கீச்...ச்" என்ற மரண ஒலி எழுந்தது. ஈச்சம்பற்றையை நோக்கிச் சண்முகம் பாய்ந்து ஓடினான்.

கத்தி பாய்ந்த முயல் வேதனையால் துடித்து உயிர் துறந்தது.

சண்முகத்திற்கு இன்று நல்ல வேட்டை தான்! விருத்தாச்சலம் குதிரையில் தாவி ஏறினான்.

( தொடர்ச்சி அடுத்த வாரம் )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# NETCOM TRAINING & TECHNOLOGY

( Registered & Approved as Private Career College under Private Career College Act )

**Summer Classes $99**

## Technology for your Future



**Call Now 416-438-3737**

### Summer Special - Register before July 5th

| | | | |
|---|---|---|---|
| Computer Introduction | $99 | Networking | $99 |
| PC Assembling | $99 | Hardware / Software | $99 |
| Internet + Email | $99 | HTML / Webpage | $99 |
| Word / Excel / PP / Outlook | $99 | Photoshop / Fireworks | $99 |
| Java | $99 | Visual Basic | $99 |
| C / C++ | $99 | M.S Access | $99 |
| Audio / Video Editing | $ 99 | Macromedia Flash | $99 |

**Benefits**

- Certificate issued for all successful students.
- We provide you free web space to host your projects and profiles.
- Summer courses can be credited towards our diploma courses.
- Successful students will get 20% off for our advanced courses.

**Diplomas**

* Diploma in Office Application.
* Diploma in Networking.
* Diploma in E-Commerce.

**Certifications**

- Microsoft
  --MCSD, MCSE, MCDBA, MOUS
- Cisco (CCNA, CCNP)
- IBM (Lotus Notes, Solaris)
- Wireless ( CWNA)
- CompTIA (A+, Network+)

**International / University / College Students are Welcome**

**HOT**

- Windows 2003
- SQL 2000
- . Net Technology
- Oracle
- Wireless Technology
- A+
- Exchange Server

**Netcom**

Focused Training.
Certified Instructors.
Flexible Schedules.
Financial Assistance.
Industry Certifications.
Quality Assured.
Low Fees.

**Career**

416-438-3737

NETCOM TRAINING & TECHNOLOGY

E-mail: info@netcom-technology.com

1200 Markham Rd, Suite # 525, Scarborough, ON, M1H3C3, Tel: 416-438-3737. www.netcom-technology.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவல்

(சென்ற வாரத் தொடர்ச்சி)

**4**

**தமிழ் பேசும் மக்கள் தனியரசுக்கான தமது வேணவாவினை 1977–ம் பொதுத் தேர்தல் மூலம் உலகிற்குப் பிரகடனம் செய்தனர். ஆனால் ஈழத்தில் நிராயுதபாணிகளாய் அப்பாவிகளாய் - அரசியல் ரீதியாக ஒடுக்கப்பட்ட மக்கள்கூட்டம் தனியாட்சி உரிமைப்பிரகடனம் செய்ததன் பின்னர் 1977 –ன் ஆவணி மாதத்தில் ஒரு பெரும் கலவரத்தைச் சந்தித்தது. "போர் என்றால் போர்: சமாதானம் என்றால் சமாதானம்" என்ற ஜே. ஆரின் அரசு கட்டவிழ்த்துவிட்ட கலவரத்தால் பாதிக்கப்பட்ட அப்பாவி மக்கள் அகதிகளாக முகாம்களில் தஞ்சமடைந்தனர். தஞ்சமடைந்தவர்களில் ஒரு பகுதியினரைச் சுமந்து கொண்டு கொழும்பிலிருந்து லங்காராணி புறப்பட்டுச் சென்றது. இதைப்பின்னணியாகக் கொண்டு 1978 மார்கழியில் அருளர் அவர்கள் 'லங்காராணி' நாவலை எழுதி வெளியிட்டார்.**

**லங்காராணி வெறுமனே கற்பனைக் கதை அல்ல, பொழுது போக்குவதற்காக எழுதப்பட்ட புனை கதை அல்ல. இலங்கையின் இனப்பிரச்சினை தமிழர்களுக்கான தனியரசு ஒன்றை ஏற்படுத்துவதன் மூலமே தீர்க்கப்படமுடியும் என்பதையும் இதனை ஈடேற்ற ஒரு மாபெரும் மக்கள் எழுச்சியை தோற்றிவிக்கவேண்டிய அவசியத்தையும் இந்நூல் வலியுறுத்துகிறது.**

**அருளர் அவர்களின் மனப்பூர்வமான சம்மதத்துடன் லங்காராணி நாவல் வைகறை இதழில் தொடர்ந்து பிரசுரமாகின்றது.**

# லங்கா ராணி– அருளர்

பாணவில இந்துக் கோவில் சற்றுத் தொலைவில்தான் உள்ளது. அங்கிருந்த குருக்கள் சாமிநாத சர்மா, வயது ஐம்பது இருக்கும், வாட்டசாட்டமானவர். இருபது வருடங்களாக அங்கேயே இருக்கிறார். மனைவியும், இரண்டு பெண் பிள்ளைகளும். அவருக்கு உதவியாக அவருடைய தம்பி ஒருவர். கலவரம் தொடங்கிவிட்டதை ஊகித்துக்கொண்ட குருக்கள், தமது இரண்டு பெண்களையும் கர்ப்பக்கிருகத்தில் விட்டுப் பெரிய பூட்டு போட்டுப் பூட்டி விட்டார். மாலை ஆகியதும் கலு அல்பட் தனது வேலையைத் தொடங்கியிருந்தான்.

கலு அல்பட் தலைமையில் வந்த நூறு பேர் வீட்டையும் கோவிலையும் சுற்றி வளைத்துக் கொண்டார்கள். கையில் கத்தி, வாள்கள் இருந்தன. சிலபேர் பேணிகளில் பெட்ரோலை நிரப்பி வைத்துக்கொண்டு நின்றனர். குருக்கள் தன் தம்பியுடன் வெளியே வந்தார். ஏதோ சமாதானம் சொல்லி அனுப்பலாம் என்ற எண்ணத்தோடு 'என்ன வேணும்' என்று ஏதும் புரியாத மாதிரி வினவினார்.

"கொல்லுடா" என்று கலு அல்பட் உரக்கக் கத்தினான். குருக்கள் இருவரும் சுருண்டு விழுந்தனர். இரத்தம் வெள்ளமாக ஓடியது. இருவரும் துடிதுடித்துச் செத்தனர். அங்கு நின்றவர்கள் இருவரையும் ஒன்றாக இழுத்துப்போட்டு பெட்ரோலை ஊற்றி நெருப்பு வைத்தனர். வீட்டுக்குள் புகுந்து எல்லாம் பொறுக்கி எடுத்தனர். கலு அல்பட் எல்லாம் தன்னுடைய பொருட்கள் மாதிரி அங்குமிங்கும் நின்று மேற்பார்வை செய்துகொண்டிருந்தான். அடுத்து கோவிலை நோக்கி ஒரு பகுதியினர் படையெடுத்துப் போயினர். கர்ப்பக்கிருகம் பெரிய இரும்புப் பூட்டு போட்டுப் பூட்டப்பட்டிருந்தது. கலு அல்பட் வரும் வரைக்கும் மற்றவர்கள் பார்த்துக்கொண்டு நின்றனர். கலு அல்பட் வந்தான்.

"உடையுங்களடா" என்றான்.

ஒருவன் எங்கோ இருந்து பெரிய இரும்புக் கம்பியை எடுத்துக்கொண்டு வந்தான். இடையில் விட்டான். நாலுபேர் பிடித்து இழுத்தார்கள். பூட்டு உடைந்துவிட்டது. கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தார்கள். அங்கிருந்த பிள்ளையார் சிலையிலிருந்த எல்லாவற்றையும் பிடுங்கிக் கொண்டார்கள். பின்னால் நின்ற இரண்டு பெண்களையும் பிடித்துக் கொண்டார்கள். அவர்கள் போட்ட கூச்சல் ஏதும் அந்தக் காடையர்களுக்குக் கேட்கவில்லை.

பிள்ளையார் சிலையைக் கீழே தள்ளிவிட்டனர். சிலை உடைந்து சிதறியது. நினைவற்ற நிலையில் பெண்கள் கீழே கிடந்தனர். காடையர்கள் விட்டுவிட்டு அடுத்த தெருவிற்குப் போய்விட்டனர்.

சுமார் ஒருமணி நேரத்திற்குப் பின் பொலிசார் வந்தனர். இரு பெண்களையும் கொண்டுவந்து ஆஸ்பத்திரியில் போட்டுவிட்டுப் போனார்கள்.

கலு அல்பட் அதே இடத்தைச் சேர்ந்தவனாகையால் தமிழருடைய வீடுகளெல்லாம் தெரியும். அவனோடு வெளியிலிருந்து வந்த வேறு பலரும் சேர்ந்து கொண்டனர். தமிழர் வீடுகளுள் புகுந்து கொள்ளையடித்தனர். ஒருசில தமிழர்கள் பக்கத்திலுள்ள சிங்கள வீடுகளில் புகுந்து தஞ்சம் கேட்டனர். காடையர்கள் அந்த வீடுகளிலும் புகுந்து தமிழர்களை வெளியில் விடும்படி மிரட்டினர். சிறு குழந்தைகளையும் வெட்டித் துண்டுதுண்டாக்கினர். வீடுகள் தீப்பற்றி எரிந்தன. எவ்வித பாதுகாப்பும் இல்லாது தமிழர்கள் அங்குமிங்கும் ஓடினார்கள்.

டாக்டர் திருமுருகன் வீட்டில் மற்ற தமிழ் டாக்டர்களும் தங்கள் குடும்பங்களுடன் கூடியிருந்தனர். பாதுகாப்புக்கு ஒரு துப்பாக்கியும் இருந்தது. நகரின் பல பகுதிகள் தீயில் எரிந்தன. கடைகள் கொளுத்தப்பட்டு எரிந்தன. பெண்கள் இருவரையும் வீட்டுக்குக் கொண்டு வரும்படி உத்தரவு போட்டார். வீட்டில் மற்ற டாக்டர்களுடன் சேர்ந்து முதல் உதவிகளை அளித்தா் பொலிசாருக்குப் போன் செய்தார். மனைவி சுகதி இயலுமானவற்றை ஒருசில பெட்டிகளில் போட்டுத் தயார் செய்து கொண்டார்.

ஒரு மணித்தியாலத்தின் பின் பொலிசார் வந்தனர். இரண்டு கார்கள், ஒரு ஆம்புலன்ஸ் வண்டி புறப்படத் தயாராயின. இரு பெண்களையும் ஏற்றிக் கொண்டார். முனியாண்டியும் ஏறிக் கொண்டான். பொலிஸ் ஜீப் முன் சென்றது. அதிலிருந்தவர் இயந்திரத் துப்பாக்கிகள் வைத்திருந்தனர். அதில் ஒருவர் தமிழர். கொழும்பின் சில பகுதிகளில் தமிழ்ப் பொலிசார் உயர் பதவிகளில் இருந்தார்கள். அவர்கள் கடமை ஆபத்தானதாகவே இருந்தது. அந்த ஒரு சிலரின் கையில் ஏராளமான தமிழர்களில் பாதுகாப்பு தங்கியிருந்தது. வண்டிகளில் ஏறி நேரே இந்துக் கல்லூரி அகதிகள் முகாமுக்கு வந்துவிட்டனர்.

டாக்டர் நற்குணம் டாக்டர் திருமுருகனிடம் விடைபெற்று அடுத்திருந்தவர்களிடம் கதைத்து அவர்களுக்கு மாத்திரைகளை வழங்கினார்.

லங்கா ராணியில் உள்ள அகதிகளில் அதிகமானவர் இந்தக் கிடங்கிலேயே இருந்தனர். கப்பலின் பின்பகுதியில் இருந்ததனால் படிகள் குறைவானதாகவும் சாய்ந்தும் இருந்தன. பெட்டி, கூடைகளை வைத்துக்கொண்டு சற்று நெருக்கமாகவே அமர்ந்திருந்தனர். காலை சூரிய வெளிச்சம் விழத்தொடங்கியிருந்தது. அகதிகள் முகாம்களில் பெண்களும் ஆண்களும் வெவ்வேறாகவே இருந்தனர். இந்தக் கட்டுப்பாடுகள் இங்கு நீங்கி இருந்தன. சிலர் அங்காங்கே சுற்றி வளைத்துத் தங்கள் அனுபவங்களை விமர்சிப்பதில் ஈடுபட்டிருந்தனர். ஒருவர் கைளிலும் தலையிலும் கட்டுப் போட்டிருந்தார். வயது இருபது இருக்கும். சாரத்தை உடுத்த வண்ணம் உட்கார்ந்திருந்தார். டாக்டர் நற்குணம் அவரைப் பரிசோதிப்பதில் ஈடுபட்டிருந்தார்.



கொழும்பு மத்திய தபால் நிலையத்தில் வேலை பார்த்துக் கொண்டிருந்த அவர் இரவில் வேலை பார்த்தார். யாழ்ப்பாணம் பூநகரிப் பகுதியைச் சேர்ந்தவர். முன்னைய தபால் அமைச்சர் குமாரசூரியர் தேர்தலில் போட்டியிட்ட கிளி நொச்சித் தொகுதி யிலிருந்த பலருக்குத் தேர்தலுக்கு முன் தபால் பகுதியில் வேலை கொடுத்திருந்தார். மிளகாய்த் தோட்டத்தில் நல்ல வருமானம் இருந்தது. அரசாங்க உத்தியோகம் பார்க்க வெளிப்பட்டு ஆறு மாதங்களுக்கு முன்புதான் தலைமைத் தபால் அலுவலகத்தில் சேர்ந்தார். அன்று வழக்கம் போல தபால் பிரிப்பதில் ஈடுபட்டிருந்தார். கலவரம் தொடங்கியிருந்தும் அடுத்த நாள் சம்பளம் எடுத்துக்கொண்டு வேலைக்கு முழுக்குப் போடலாம் என்ற நோக்கத்தோடு அன்று வேலைக்கு வந்திருந்தார்.

மேலதிகாரி சிவாவும் வேறு இருவரும் அவரோடு வேலையில் ஈடுபட்டிருந்தனர். வெளிச்சம் திடீரென நின்று விட்டது. எங்கும் ஒரே இருள். மெதுவாகப் போய் அங்கிருந்த அலுமாரியின் பின்புறமாக ஒளிந்து கொண்டார்கள். டோர்ச் லைற்றுடன் பத்துபேர் நுழைந்தார்கள். 'எங்கே சிவா?' என்று எல்லா இடமும் தேடி கடைசியில் கண்டுபிடித்து விட்டார்கள். சிவாதான் தலைமை அதிகாரி. வயது ஐம்பது இருக்கும். சற்று ஒல்லியானவர். கண்ணாடி அணிந்திருப்பார். தலைமயிரைப் பிடித்துக் கீழே தள்ளினார்கள். நால்வருக்கும் அடி, உதை. உடுத்தியிருந்த உடைகளையும் கழற்றிக் கொண்டு போங்கடா யாழ்ப்பாணத்துக்கு என்று போய் விட்டார்கள்.

சுமார் அரைமணி நேரத்திற்குப் பின் வெளிச்சம் வந்தது. பொலிசார் வந்தனர். இயந்திரத் துப்பாக்கிகளைக் கையில் வைத்திருந்தனர். ஒருவர் மட்டுமே கையில் எதுவும் இல்லாமல் நின்று கொண்டிருந்தார். அவரது முகத்தை உற்றுப்பார்க்கும் பொழுது அவர் ஒரு தமிழர் என்பது நன்கு தெரிந்தது.

பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றனர். ஆட்களைத் தெரியுமா என்று கேட்டனர்.

'தெரியும்' என்று பதிலளித்தார். எல்லோரும் அங்கு வேலை செய்யும் பியுன்மார்தான்.

"எப்படித் தெரியும் இருட்டில்" என்று பொலிசார் கேட்டனர்.

அதற்கு அவரால் விடை கூற முடியவில்லை.

அந்தத் தமிழ்ப் பொலிஸ் உத்தியோகத்தர் ஒரு மூலையில் நின்றுகொண்டிருந்தார். அவரே பயத்தால் நடுங்கிக் கொண்டிருப்பது போலத் தெரிந்தது. பின்பு மூவரையும் ஆஸ்பத்திரியில் சேர்த்து விட்டனர்.

"டாக்டர்! கப்பல் எப்ப யாழ்ப்பாணம் போகும்" என்று வாலிபன் வினவினான்.

"நாளைக்குப் பின்னேரம் போகும். என்ன அவசரம்"

"இல்ல டாக்டர் ஊரில பேக்கறியில் நாலஞ்சு சிங்களவர் இருக்கிறாங்க. கெதியாப் போனாத்தான் ஒருக்காத் தட்டிப் பார்க்கலாம்."

வாலிபனின் நகைச்சுவை பலரைச் சிரிக்க வைத்தது.

"அவன்களெல்லாம் பிளேனில இப்ப வீட்ட போய் சேர்ந்திருப்பாங்க" என்று கூட்டத்திலிருந்து ஒரு குரல் கூறிவைத்தது.

யாழ்ப்பாணத்தில் சம்பத்ரிசியார் கல்லூரிக் களியாட்ட விழாவில் அனுமதிச் சீட்டு இல்லாமல் நுழைய முனைந்த பொலீசாரும் அங்கு நின்ற காவலாளிகளும் மோதிக் கொண்டனர். அடுத்தநாள் யாழ்பாணத்தில் வேறு ஒரு பகுதியில் மூன்று வாலிபர்களைப் பொலிசார் சோதனை இடுவதற்கு மறித்தனர். அவர்களில் ஒருவன் திடீரென சுழல் துப்பாக்கியை எடுத்துப் பொலீசாரைச் சுட்டான். இதனால் பண்டா என்ற சிங்களப் பொலிசார் காயம் அடைந்து விட்டார். வாலிபர்கள் ஓடித்தப்பி விட்டனர். நிலைமை மோசமடையத் தொடங்கியது.

இலங்கைப் பொலிஸ் படையினரில் மூன்று வீதத்தினரே தமிழர்கள். இருபது வருடங்களுக்கு முன் முப்பது சதவிகிதம் தமிழராக இருந்தது. ஆங்கிலமோ தமிழோ தெரியாதவர்களே இப்போது அதிகமாகப் பொலிசில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். சிங்களமே கரும மொழியாக இருந்ததனால் அங்கிருந்த ஒரு சில தமிழ்ப் பொலிசார் கூட தங்களுக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரங்களைப் பிரயோகிக்க முடியாமல் திண்டாடிக் கொண்டிருந்தனர். தமிழரானபடியால் உயர்பதவிகள் மறுக்கப்பட்ட நிலையில் பலர் இருந்தனர். தனிச் சிங்களப் போக்கைக் கடைப்பிடித்த அரசுக்குத் தமிழர்கள் பல முறைகளில் தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்துச் சாத்வீகப் போராட்டங்களில் ஈடுபட்டனர். இப்படிப் பாதகமான அரசாங்கத்தின் போக்கைப் பாதுகாக்கும் கடமை இந்தப் பொலிசார் உடையதாகவே இருந்தது. ஒரு சில சமயங்களில் இராணுவத்தினரும் வரவழைக்கப்பட்டனர். தமிழ்ப் பகுதிகளில் இந்தப் பொலிசாரை மக்கள் வெறுக்கத் தொடங்கினர். இதற்கு ஈடு கொடுப்பதாகவே இவர்களும் நடந்து கொண்டனர். பொதுமக்களின் பாதுகாப்பு, சமுதாய ஒழுங்கை நிலை நாட்டுதல், அமைதியைப் பாதுகாத்தல் போன்ற பணிகளைச் செய்வதற்கு அவசியமான மக்கள் நம்பிக்கை அற்றுப் போனதால் தமிழ்ப் பகுதிகளில் பொலிசார் தங்கள் கடமைகளைச் செய்வதில் பல சிக்கல்களை எதிர்நோக்கிய வண்ணம் இருந்தனர். சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாக்க வேண்டிய இடங்களில் இவர்களுடைய வருகை பதட்ட நிலையையும் குழப்பங்களையும் உருவாக்கியது.


( தொடர்ச்சி அடுத்த வாரம் )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனகாம்பிகை நகைமாளிகை

## KANAGAAMBIKAI GOLD HOUSE

*There's never been a more beautiful interpretation of what it means to be a woman.*



# கனகாம்பிகை அடைவுமாடம்

## கனகாம்பிகை

## நகைமாளிகையின் கிளை நிறுவனம்

**கனேடிய அரசினால் அங்கீகாரம் பெற்ற அடைவுமாடம்**





3160 EGLINTON AVE E,
UNIT# 03,
SCARBOROUGH

TEL: 416-269-7198


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுகதை

# சர்ப்ப நாயகன்

- எஸ். சங்கரநாரயணன்

அந்தப்பகுதியில் சுத்துவட்ட கிராமத்தில் சர்ப்பநாயகி அம்மன் பிரபல்யம். கல்யாணமாகாத ஸ்தீரிகள் அம்மனுக்கு நேர்ந்து கொண்டு ஒரு மண்டலம் விளக்கேற்றி, பின்னால் இருக்கும் புற்றுக்குப் பால் உற்றி வந்தால் நாகதோஷம் விலகி அடுத்த சுபமுகூர்த்தத்தில் கல்யாணம் நடக்கும் என்பதில் அவர்களுக்கு அதிக நம்பிக்கை.

"பாம்புக்கும் கல்யாணத்துக்கும் என்னய்யா சம்பந்தம்?.... பைத்தியக்காரத்தனம்'' என்பார் வேணுகோபால். அந்த ஊரில் ஸ்கூல் உடற்பயிற்சி ஆசிரியர். பேய்க்கதை என்றால் அவருக்கு இளக்காரம். "பயந்தான் பேய்'' என்பார். பயந்தான் என்றாலும் எல்லோருக்கும் பயம் தானே இருக்கிறது?. மனிதரில் பயப்படாதவர் உண்டா?.

"பாம்பெல்லாம் பாலைக் குடிக்காதுய்யா. அது கறையான் புத்து. கறையானைத் திங்கத் தானே பாம்பு வருது...''

எல்லோரும் சிரித்து தலையாட்டிக் கேட்டுகொண்டாலும், சொம்புப் பாலுடன் அவரைத் தாண்டிப் போவார்கள்.

ஒரு நாடோடி அந்த ஊருக்கு வந்திருந்தான். தலையில் அடர்வண்ணத்துண்டில் முண்டாசு கட்டியிருந்தான். மார்பில் எங்கும் பாம்பு பச்சை குத்தியிருந்தான். கோயில் திண்ணையில் தங்கிக் கொண்டான் அவன். துளிகூட பாம்பு பற்றியோ, பேய் பற்றி பயமே இல்லை! வேணுகோபால் மாஸ்டரைப் போல!...

கொஞ்ச நாளாகவே அந்த ஊரில் பாம்பு நடமாட்டம் இருந்தது. வேலுப்பிள்ளை தோட்டத்துக் கிணறு பெரியது. தோட்டம் அமைதியாய்க் கிடந்தது. நாகப்பன் சரசரவென நடக்கிறான். மற்ற பசங்கள் நேற்று நடராஜ் டாக்கீசில் பார்த்த சினிமாக்கதை பேசியபடியே பின்னால் வருகிறார்கள்... திடீரென தோட்டத்துக்கருகில் இருந்து சத்தம். சரசர " பாம்பு! பாம்பு!....'' என்று அலறினான் நாகப்பன். அவன் குரல் அவனுக்கே விநோதமாய் ஒலித்தது.

" எங்க?. எங்க?....'' கேட்டபடி பதறி வெளியே வந்தான் நாடோடி. அவன் பயப்படுவதாக எல்லாப் பசங்களும் நினைத்தார்கள்.

" எங்க பார்த்தே?.''

" இதோ.... இந்தப் பக்கம், வாலை மட்டும் பார்த்தேன்.சரசரவெனப் போச்சு.''

" சே இவன் அரணை போற சத்தம் கேட்டுப் பயந்திருப்பாண்டா'' என்று சிரிப்பு காட்ட முயன்றான் தங்கவேலு. கூட யாரும் சேர்ந்து சிரிக்கவில்லை... என்றதும் அவனுக்கே பயமாகிவிட்டது.

" அதையும் பார்த்திருவம்'' என்றான் நாடோடி.

ஆச்சரியம். அவன் காலால் சருகுகளைக் களத்தில் நெல் உலர்த்துகிறாற் போல பரவிக் கடந்தபடி தேடிப் போனான். அடிக்கடி நின்று வாசனை பிடித்தான். சட்டென்று நின்றான். " இங்க தான் எங்கயோ இருக்கு அந்தப் பாம்பு...'' அவன் கண்கள் இங்கும் அங்கும் அலை பாய்ந்தன.

" இதோ!'' அவன் மரத்தில் காட்டினான்.

" பயப்படாதீங்க'' என்றான் அவன், அவர்கள் பாம்பைப் பார்த்தார்கள். அது அவர்களைப் பார்த்தது. திடீரென்று நாக்கினை நீட்டி திரும்ப மூடிக்கொண்டது. பசங்கள் சிலிர்த்துப் போனார்கள்.

அங்கே கிடந்த குச்சியொன்றை எடுத்து அவன் அந்தப் பாம்பை மரத்துக்குக் கீழே தள்ளினான். என்ன தைரியம் இவனுக்கு?.... பாம்பு பொத்தென்று விழுந்தது நல்ல நாலடி, ஐந்தடி நீளமான பாம்பு. பாய்ந்து அவன் - ஐயோ - அதன் தலையைப் பற்றினான். " மலைப்பாம்பு விஷம் இல்லாதது. கடிக்காது '' என்றான்.

" வாங்க, வந்து தொட்டுப் பார்க்கிறீங்களா?. என்று பாம்பைப் பிடித்து நீட்டிக் காட்டிச் சிரித்தான் அவன். பசங்கள் நாகப்பனைப் பிடித்து " நீ தொடுறா....'' என்று தள்ளினார்கள்.

அவர்களை தாண்டிப் போனான் அவன்.

நாடோடியின் புகழ் பாம்பு விஷம் போல விறுவிறுவென்று பரவ ஆரம்பித்தது.

தேசிகாச்சாரி வீட்டுப் பின்பக்கம் நல்ல புதர். மழிக்கப்படாமல் கிடந்தது. ரொம்பக் காலமாய், ஊரில் பாம்பு பயம் அதிகரித்தபின் அவர் உடனடியாய் ஏதாவது செய்யவேண்டுமென உணர்ந்தார். அவர் பயத்தை அதிகரிக்கிற மாதிரி, ஒரு நாள் தெருவில் தட்டேந்திக் கொண்டு நடந்து போன அந்த நாடோடி அவர் வீடு தாண்டி நடைபோட்டவன் சட்டென நின்றான். " ஆகா '' என்றான் கண்கள் மின்ன, " சாமியோவ் உங்க வீட்ல பாம்பு நடமாடுது... ''

ஈசிச்சேரில் பேப்பர் வாசித்துக் கொண்டிருந்த சாரி துள்ளியெழுந்து எங்க?. எங்க?. என்றார். அவன் அழுத்தமாய் வாசனை பிடித்தான் " இருக்கு சாமி. ஜாக்கிரதையா இருந்துக்கிடுங்க,'' அவன் போய்விட்டான். சாரி திரும்ப ஈசிச்சேரில் உட்காருமுன் ஒருமுறை சுற்றும் முற்றும் தேடிப் பார்த்துக்கொண்டார். பேப்பர் படிக்க முடியவில்லை. அவரால் அவருக்கு ஆஸ்துமா தொந்தரவு ஆரம்பித்து பாம்பென மூச்சேற ஆரம்பித்து விட்டது.

பாம்பு வந்தது உண்மைதான். ஆனால் சாரி வீட்டில் இல்லை. அவருக்கு அடுத்த ராமானுஜம் வீட்டில். மாடிக்கு துணி உலர்த்தப் போன சிவகாமி மாமி அப்படியே போட்டு விட்டு வந்தாள்.

பேச முடியாமல், நிற்க முடியாமல் நெஞ்சைப் பிடித்துக் கொண்டாள். '' ப்பா... ப்பா '' என்றாள். மூச்சிறைத்தது. அவள் கணவருக்குப் புரியவில்லை. " என்னடி மழலை பேசிற?.'' என்று சிரித்தார் ராமானுஜம்.

" நீங்க வேற பாம்புன்னா...?.



" பாம்பா?.''

மாடில... மரத்துல... தூரத்திலேயே கவனிச்சிட்டேன். இல்லாட்டி சீறிக் கொத்தியிருக்கும் என்னை...''

" நல்ல வேளை!'' என்றார் சாரி.

ராமனுஜம் " என்னவே நல்லவேளை.... உம்மகிட்ட புதரையெல்லாம் வெட்டி ஒழுங்கு பண்ணனு திரும்பத் திரும்ப சொன்னே., கேட்டீரா நீர்?.'' என்று படபடத்தார்.

வீட்டு வாசலில் கூட்டம் கூடிவிட்டது. " அந்த ஆள்... அன்னிக்கே தோட்டத்தில பாம்பைப் பிடிச்சானே...'' என்று ஞாபகப்படுத்தினான் ஒருவன். '' ஓடு சீக்கிரம்'' என்றார் ராமானுஜம்.

" எங்க பாத்தீங்க தாயி?.'' என்றபடி அவன் வந்தான். " ம்மா என்றாள் சிவகாமி மாமி. " சர்க்கஸ்ல டீயச விளையாடற மாதிரி ஆடிண்டிருந்தது மரத்தில.''

முன்னே வழிகாட்டி மேலேறப் போன ராமானுஜம் நின்று " நீ முன்னாடி போ...'' என்று அவனுக்கு வழிவிட்டார்.

மரத்தில் பாம்பு இல்லை. " கிளை எதுனாச்சும் ஒடிஞ்சு தொங்கிச்சா?. பயந்துகிட்டீங்களா?''

" இல்லப்பா பார்த்தேன்'' சட்டென்று காலில் ஏதோ தட்ட சிலிர்த்துப் போய் அவள் காலை இழுத்துக் கொண்டாள். அவள் போட்டு விட்டுப் போன புடவை.

அவன் இடுப்பு முடியில் இருந்து ஏதோ மூலிகை வேரை எடுத்துத் தற்பாதுகாப்புக்கு வைத்துக் கொண்டான். " வாழும் பாம்பு யாரையும் கொத்தாது. மழை கிழைன்ன ஒதுங்குகின்ற பாம்புன்னா பயப்படனும்... என்ற புது விஷயம் சொன்னான். அவன், துணி மூட்டையைப் பிரித்தான். அதற்குள் மகுடி இருந்தது. அவன் வாசிக்க ஆரம்பித்தான். அந்தச் சத்தம் விநோதமாய், திகிலூட்டுவதாய் இருந்தது. ஒரு பத்து நிமிடம் போல அவன் வாசித்திருப்பான்.

அதற்குள் பெருங் கூட்டம் கூடிவிட்டது. உள்ளே பம்பரம் விட்டாற் போல குறுகுறுக்கிறது அந்த இசை. ஆகாவென எழுச்சி கொண்டார்கள் மக்கள். மாடி தண்ணீர் தொட்டி பக்கமிருந்து பாம்பு எட்டிப் பார்த்தது. ஜானகிராமன் " தோ '' என்று கிச்சுக்குரலில் கத்தினார். பாம்பாட்டி சட்டென்று திரும்பி எழுந்து நின்று மகுடியை தொடர்ந்து வாசிக்க ஆரம்பித்தான். ஹெட் மாஸ்டருக்கு, பாம்பு ஒன்று தண்ணீர் குடிக்க வந்தது பற்றிய டீ.ஹெச்.லாரன்சின் கவிதை ஞாபகம் வந்தது.

பாம்பு மெல்ல ஊர்ந்து தரையிறங்கியது. அவன் ஒரு கையால் மகுடி ஊதியபடியே மறுகையில் வேரை எடுத்துக் கொண்டான்.

திடிரென்று பாம்பு " உஸ் '' என்று கோபத்துடன் சீறிப் பொங்கியது. சட்டென விலகி... ஆனால் அவன் கிட்டே கிட்டே நெருங்கினான். ஒரு கட்டத்தில் மகுடியைப் போட்டு விட்டு அதன் வேரை அதன் முன்னே நீட்டினான். என்ன ஆச்சரியம்!... அது தலையைக் கீழே போட்டு அடங்கியது.

யாரும் எதிர்பாராத ஒரு கணத்தில் கையை வீசிப்பாய்ந்து அவன் அந்தப் பாம்பின் கழுத்தைப் பிடித்துக் கொண்டான்... பாம்பு அவன் கையில் தவித்தது. சுறுசுறுவென்று அவன் கையைச் சுற்றிக் கொண்டது. அவன் பிடியை விடவில்லை. வேரால் அதன் முகத்தில் அழுத்திபடியே தன் துணி மூட்டையைப் பிரித்தான். அதிலுள்ள கூடையில் அந்தப் பாம்பை போட்டுக் கொண்டு கவனமாய் மூடினான்.

கூட்டம் மெல்ல மூச்சுவாங்கி ஆசுவாசப்பட்டது. அந்த நாளும் அதற்கடுத்த நாளும் ஊரெங்கும் அவன் பாம்ப பிடித்த கதையை நிறையப் பேசினார்கள். நீலகண்டன் வீட்டுத் திண்ணை சீட்டாட்டத்துக்குப் பெயர் போனது. சிவசைலம் " அடாடா நான் பாக்கலியே'' என்றார். ஐந்து ஆட்டினை இறக்கிபடி கவலைப்படாதீரும் உம்ம வீட்டுக்கு பாம்பு வந்தாலும் வரும்.... என்று பயமுறுத்தினார் வேதகிரி. ரியல் ரம்மிக்கான அவரது சீட்டு வசமாய் சிவசைலத்தின் பிடியில் இருந்தது.

பையனிடமிருந்து மணியாடர் வர எதிர்பார்த்துக் காத்திருந்தார் தானு மாமா. எதிர்பாராமல் அவருக்கு ஒரு கார்டு வந்தது. ஸ்ரீ பாலாஜி துணை - இதைப் படிக்கிற எல்லாருக்கும் அருள் கிடைக்கும். எங்கள் வீட்டுக்கு ஒரு நாள் பாம்பு ஒன்று வந்தது. நாங்கள் பதறி எழுந்து கொண்டோம். அது கதவுக்குப் பின்னால் மறைந்து கொண்டது. நாங்கள் அதை அடிக்க முற்படும் போது அந்தக் கதவில் இருந்து ஒரு அழகான மகாபுருஷன் சங்கு சக்கர திவ்ய ஒளியுடன் வெளிப்பட்டார். " நான் பாலாஜி உங்கள் வீட்டில் தங்க வந்திருக்கிறேன்.'' என்று அந்த மகாபுருஷன் சொன்னார். அப்படியே மறைந்து கரைந்து விட்டார். அதன் பின் எங்கள் வீட்டில் நின்று போன அநேக சுபகாரியங்கள் நல்லபடி நடந்தேறின. இதை வாசிக்கிற அன்பர்கள் தயவு செய்து உடனே பதினைந்து நபர்களுக்கும் தெரியப்படுத்தவேண்டும். ஒருவர் தெரியப்படுத்தத் தவறினார். அடுத்தவாரம் அவர்கள் வீட்டில் துக்ககரமான நிகழ்ச்சி ஒன்று நிகழ்ந்தது. ஆகவே அலட்சியப்படுத்த வேண்டாம்.

" ரமணி....'' என்று கூப்பிட்டு அந்தக் கார்டை கொடுத்தார் மாமா. கைவலிக்க வலிக்க ரமணி எழுத வேண்டியிருந்தது.

ராமானுஜம் வீட்டில் பிடிபட்டது கட்டுவிரியன். உடம்பில் விதவிதமான அடர்கறுப்பு வளையங்கள் இருந்தன. சிறிய இரண்டடிப் பாம்பே அது. குட்டி " அப்ப பெரிய பாம்பு கீம்பு நடமாடுதா?.''... என்று யாரோ புதுப்பிரச்சினை எழுப்பினார்கள்.

அந்த நாடோடி எப்போது பார்த்தாலும் அந்தப் மலைப்பாம்புடன் தட்டுப்பட்டான். கிருஷ்ணசாமி ஹைஸ்கூல் தலைமையாசிரியர். அவருடைய கடைசிப் பெண் ஜமுனா சாப்பிட்டு விட்டு எச்சில் இலையைப் போட்டு கையலம்பப் போனால் வழவழவென நெழியும் அது... ஆவெனப் பின்வாங்கியபடி கீச்சுக்குரலில் அலறினாள். எல்லோரும் ஓடி வந்தார்கள். வேணுகோபால் சேதி கேள்விப்பட்டு கிடைத்த கம்புடன் ஓடி வந்தார். " எங்க பாத்தேம்மா?.'' என்றார் ரில் மாஸ்டர். ஐயோ பாம்பை அடிக்கவேணாம். அது பாவம்...'' என்றார் யாரோ ஒருவர். " பாலாஜி ...'' என்று குரல் மெல்ல எழுந்து சட்டென்று உள்வாங்கியது.

அதற்குள் பாம்புக்காரனைக் கூட்டிவர ஒரு பையன் தானாகவே ஓடினான்.

ஒவ்வொரு அறையாக டிரில் மாஸ்டரின் தலைமையின் கீழ் ஒரு குழு கைகையாய்க் கம்பு ஏந்திய வண்ணம் தேட ஆரம்பித்தது. பின்னறைச் சேந்தியில் விறகுக் கட்டை அடுக்கியிருந்தார் ஹெட்மாஸ்டர். ஒவ்வொரு கட்டையாய் தன்னிடமிருந்த கம்பால் விலக்கி விலக்கி தேடினார் மாஸ்டர்.

திடீரென்று அந்த விறகுக் கட்டுகளிலிருந்து உஸ்ஸெனச் சீறல், ஹெட்மாஸ்டர் கம்பைக் கீழே போட்டு விட்டார். ஆனால் டிரில் மாஸ்டர் சட்டெனச் சுதாரித்து விலகிக் கொண்டதோடு குச்சியால் பாம்பின் தலையையும் அழுத்திவிட்டார்.

' அடிக்காதீங்க... அடிக்காதீங்க... என்று நாடோடி ஓடிவந்தான். " அட போப்பா... அதை விட்டு வெச்சோம்னா நாளைக்கு பிள்ளை குட்டிங்கபாடு என்னாவறது.?.'' அவர் பிடியை விடவில்லை. பாம்பின் ஆவேசத் துடிதுடிப்பும் எகிறலும் மெல்ல மெல்ல அடங்கி, வாயிலிருந்து இரத்தம் வர, பாம்பு இறந்து போனது.

நாடோடி செய்வதறியாது திகைத்து நின்றான். அழுது விடுவான் போலிருந்தது. எதுவும் பேசாமல் தள்ளாடிப் போனதைப் பார்க்க. எல்லோருக்கும் வருத்தம், பாம்புகளை அவன் எவ்வளவு நேசித்தான். அப்புறம் நாடோடி யார் கண்ணிலும் தட்டுப்படவில்லை.

அடுத்த சீட்டாட்டத்தில் அந்த நாடோடி பற்றியும் பேச்சும் வந்தது. ஒரு வேளை அவன் ஊரை விட்டு போயிருப்பான் என்று பேசிக் கொண்டார்கள். சீட்டை இறக்கப் போன டிரில் வாத்தியார் உயர்த்திய கையை அப்படியே நிறுத்தி, ஒரு சந்தேகம் போலச் சொன்னார்.

'' ஒரு வேளை அவனே பாம்பை வீட்டுக்குள்ள விட்டிருப்பானோ?.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாக்குப் பிடிக்குமா இந்த மணற்காட்டு வளம் ?

**பொ. ஐங்கரநேசன்**

**யாழ்குடாநாட்டின் அபிவிருத்தி விடாய் பருகித் தீர்த்துவிடத் துடிக்கும் ஒரே மணல் ஆறாக மணற்காடும் அதை அண்டிய பகுதிகளுமே இன்று நிலவுகின்றன.**

யாழ்ப்பாணக் குடாநாட்டில் இன்று அதிகம் தேவைப்படும் பொருளும், அதிகம் தட்டுப்பாடான பொருளும் மணல்தான். ஆம்!; அந்தக யாழ்பாடி ஒருவனுக்குப் பரிசாகத் தரப்பட்ட தரிசு மண் பட்டினத்தில்தான் இன்று மணல் மண்ணுக்கான மவுசு அதிகரித்துள்ளது.


சமாதானத்தின் மீது கட்டப்பட்டுவரும் நம்பிக்கைகளைத் தொடர்ந்து, போர் உருக்குலைத்த கட்டடங்கள் மீண்டும் நிமிர்ந்தெழத் தொடங்கியுள்ளன. இந்தக் கட்டடக் காடுகளுக்கு உரமிட 'அல்லஸ்', 'ராம்கோ', 'மிற்சுயி' என்று சீமெந்து வகையறாக்கள் தாராளமாக இறக்குமதியாக, இதற்கு ஈடுகொடுக்க முடியாத நெருக்கடி நிலைக்கு உள்ளூர் மணல்வளம் ஆளாகியுள்ளது. குடாநாட்டைப் புனரமைப்பதற்கான தாகம் பெருமளவு மணலை வேகமாகக் குடிக்கத் தொடங்கியிருப்பது சமூக, பொருளாதார, சுற்றுச் சூழற் தளங்களில் பலத்த விவாதங்களை உருவாக்கியுள்ளது.

இயற்கையின் விநோதங்களில் ஒன்றான மணல் மண் என்பது பூமியின் பாறை சிதைந்து உருவான பாறைத் துகள்கள்தான். சின்னதும் - பெரிதுமாக, மிருதுவும் - கரடுமாகப் பல்வேறு பரிமாணங்களில் மணல் மணிகளை உருவாக்குவதில் கடல் அலை முதலிடம் வகிக்கிறது. கடல் அலைகள் இடைவிடாமல் முட்டி மோதி கரையோரப் பாறைகளை மெதுமெதுவாகப் பொடி செய்கிறது. எனினும், மணலை உருவாக்கும் விடயத்தில் கடல் அலைகளுக்கும் மணலுக்கும் இடையே ஒரு சமநிலை நிலவுகிறது ஒரு குறித்த பருமனுக்கு மேல் மணல் துணிக்கைகள் நீரினால் மேலும் உடைக்கப்படுவதில்லை. அவை தமக்கிடையே நீரைச் சிறைப்பிடித்துக் கேடயமாக்கி அலையின் வேக மோதலில் இருந்து தப்புகின்றன.

அலைக்கும் மணலுக்கும் இடையே நிலவும் இந்த ஒப்பந்தத்தின் மூலம் வடமராட்சியில், வல்லிபுரத்தில் இருந்து நாகர் கோவில் வரை மணற்காடுகளாகக் காட்சி தரும் அழகான மணற்கரையோரம் ஒன்று எமக்குக் கிடைத்துள்ளது. வங்கக் கடலின் கரையோரங்களான வல்லிபுரம், மணற்காடு, குடத்தனை, அம்பனை, நாகர் கோவிற் பகுதிகளில் பருவக்காற்று, மணலை மலைகளாகக் குவித்து வைத்துள்ளது. ஏக்கருக்கு ஒரு அடி ஆழ மணல் 3,200 தொன்களைக் கொண்டிருக்கும் அளவுக்குப் பிரமாண்டமான அளவில் மணல் இங்கே காணப்படுகிறது. வடமராட்சியின் இந்த வடக்கு- கிழக்குப் பகுதிகளைத் தவிர, யாழ் குடாநாட்டில் சாவகச்சேரி, கச்சாய், கிழக்கு அரியாலை, மண்கும்பான், அல்லைப்பிட்டி, சாட்டி, புங்குடுதீவு கண்ணகை அம்மன் கோவிலடி போன்ற இடங்களிலும் மணல் கணிசமான அளவில் காணப்படுகின்றது.

குடாநாட்டின் பல பகுதிகளில் மணல் இருந்தபோதும் அவற்றின் தரம், தூய்மை காரணமாக மக்களை அதிகம் வசீகரிப்பது வடமராட்சியின் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் பனிக்கவிப்புகளாகப் பிரகாசிக்கும் மணற் குன்றுகள்தான். அத்தோடு, மற்றைய இடங்களில் நிலவும் இராணுவக் கட்டுப்பாடு, காலடியில் காத்திருக்கும் கண்ணிவெடி அபாயம், பயணிக்க முடியாத பாதைகள், ஏற்கனவே மணலை அளவு மீறி அகழ்ந்ததால் ஏற்பட்டிருக்கும் பற்றாக்குறைவு என்று எல்லாமுமாகச் சேர்ந்து வடமராட்சியையே மேலும் கவனிப்புக்கு ஆளாக்கியுள்ளது. இன்று, குடாநாட்டின் 'அபிவிருத்திவிடாய் பருகித் தீர்த்துவிடத் துடிக்கும் ஒரே 'மணல் ஆறு' ஆக மணற்காடும் அதை அண்டிய பகுதிகளுமே நிலவுகின்றன. இந்த விரைவு நுகர்வே மணல் பற்றிய கரிசனையை சமூக, பொருளாதார, சுற்றுச்சூழல் தரப்புகளில் முதன்மைப்படுத்தியுள்ளது. இதற்குக் காரணங்கள் இல்லாமல் இல்லை.

குடாநாடு இராணுவத்தின் வசம் வந்த பின்னர், தனது பிடியில் யாழ் நகரை இந்திரப் பிரஸ்தமென நம்ப வைக்க இலங்கை அரசு முயற்சித்தது. பொதுசன நூலகம் முதல் - பொதுமகனின் வீடுகள் வரை போரின் சாட்சியங்களான இடிபாடுகளை மறைப்பதில் ஆர்வம் காட்டப்பட்டது. 1996 இல் இருந்து நான்கு வருடங்கள் வரையில் மாதம் ஒன்றுக்கு ஏறத்தாழ 12,000 உழவு இயந்திரச் சுமைகள் (Tractor Load) என்னும்




வீதத்தில் மணல் இப்பகுதிகளில் இருந்து அப்புறப்படுத்தப்பட்டுள்ளது. இப்பிரதேசத்தின் அரச நிர்வாகத்துடன் அரசியற் பலம் சேர்ந்த வியாபாரிகளும் இணைந்து நிகழ்த்திய இந்த அதிவேக மண்களைவைப் பெரும் மணற்கொள்ளையெனவே உள்ளூர்வாசிகள் இன்றளவும் குமுறுகின்றனர். ஏனைய கட்டடப் பொருள்களுக்கான சந்தை விலையுடன் பொருந்திவராத மிகக்குறைந்த விலையிலேயே மணல் அபகரிக்கப்பட்டுள்ளது. ஒரு உழவு இயந்திரச் சுமையளவு மணலை வெறும் 50 ரூபாய்கள் கொள்வனவில் அகழ்ந்து, 5000 ரூபாய்கள் வரையில் விலை பேசிய மணல்வாணிகம், இராணுவக் கெடுபிடிகளில் தொழில் வாய்ப்பை இழந்திருந்த இப்பகுதிச் சமூகம் குறித்து எதுவித அக்கறையும் கொள்ளவில்லை என்பது விசனத்துக்குரியது ஆகும்.

விடுதலைப்புலிகள் அரசியல் நடவடிக்கைகளை மீளவும் முன்னெடுக்க ஆரம்பித்த பின்னர், இப்பகுதி மக்கள், 'சுற்றுச் சூழல் பாதுகாப்புச் சங்கம்' என்னும் அமைப்பைக் குடத்தனையில் நிறுவி இதனை நெறிப்படுத்தியுள்ளனர். முன்னர் மாதம் ஒன்றுக்கு 12,000 உழவு இயந்திரச் சுமைகள் என்று பெரும் எடுப்பில் நிகழ்ந்த மண் அகழ்வு இப்போது 3,000 சுமைகள் என்னும் அளவுக்குக் கட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. உழவு இயந்திரச் சுமை ஒன்றுக்கு அறவிடப்பட்டு வந்த கட்டணமும் உயர்த்தப்பட்டு, வருவாய் இப்பகுதி மக்களின் கல்வி மேம்பாட்டுக்கெனவும், மீள் மரநடுகைக்கெனவும் பயன்படுத்தப்படுகிறது.

மணல் வாணிகத்தில் தமது சமூக பொருளாதார மேம்பாடு குறித்து இப்பிரதேசக் குடிகள் இப்போது ஓரளவு திருப்தி கொண்டிருப்பினும், சுற்றுச் சூழல் குறித்த அச்ச உணர்வுக்கு ஆளாகியுள்ளனர். சமீப காலமாக இப்பகுதி நன்னீர்க் கிணறுகள் பல உவர்ப்பேறத் தொடங்கியுள்ளன. கடல் தனக்குத்தானே போட்டுக்கொண்ட மணல் அணைகளும் கடந்த காலங்களில் பல இடங்களில் சூறையாடப்பட்டிருப்பதால் கடலோரக்கிராமங்கள் கடற்பெருக்கு அபாயத்துக்கு ஆட்படலாமெனவும் அஞ்சப்படுகிறது. இதனை வெறும் ஊகங்கள் என நிராகரிப்பதற்கும் இல்லை. தீவகத்தில் மண்கும்பானில் இருந்த மணல் மேடுகள் பெருமளவில் அப்புறப்படுத்தப்பட்டதுடன், நிலமட்டத்துக்குக் கீழாகவும் மணல் அகழப்பட்டிருப்பதால், - பண்ணைக் கடல் வெள்ளைக் கடற்கரையுடன் கரம்கோர்த்து, அல்லைப்பிட்டி - மண்கும்பான் பகுதிகளைக் கபளீகரம் செய்யும் அபாயம் நீடிப்பதாக புவியியலாளர்கள் எச்சரித்து வருவது இங்கு குறிப்பிடத்தக்கது ஆகும்.

இருந்தபோதும்,1130 சதுர கிலோமீற்றர்கள் பரப்பளவு கொண்ட யாழ்குடா நாட்டின் அபிவிருத்திக்காக சில சதுர கிலோ மீற்றர்கள் பரப்பளவு பகுதிகளைக் காவு கொடுத்தால் என்ன என்ற மேம்போக்குவாதமும் முன்வைக்கப்படுகிறது. குடாநாடு புனருத்தாரணம் செய்யப்படவேண்டும் என்பதில் மாற்றுக் கருத்து எவருக்கும் இருக்கப்போவதில்லை. அதே சமயம் சோலையோ- பாலையோ எதனையும் - எத்தனை அளவிலும் பலியிடும் உரிமையும் மனுக்குலத்துக்கு இல்லை. மனிதனை மையப்படுத்தி நீடித்த மேம்பாட்டை (Subtainable development) வலியுறுத்திய சூழலியற் கோட்பாடுகள் கூட நிராகரிக்கப்பட்டு, சூழலே முதல் என்பதை வலியுறுத்தும். 'விடுதலைச் சூழலியல்' (Liberation ecology) என்னும் சிந்தனைப் பள்ளி மேற்கிளம்பியிருக்கும் காலம் இது.

தவிரவும் மணல் வளம் வெறுமனே கட்டுமானத் தேவைகளுக்குரியது மட்டும் அல்ல; ஆதியில் காலாற நடப்பதற்கும், மணற் கடிகாரம் தயாரிப்பதற்கும் பயன்பட்டுவந்த கரையோர மணல், நாகரிக வளர்ச்சியில் கட்டுமானப் பணிகளுக்கென்றாகி, - இன்று இந்தப் பயன்பாடுகளையெல்லாம் தாண்டி உலகின் தொழிற்துறையில் பல பரப்புக்களை ஆக்கிரமித்து விட்டது.

பாறைத் துளிகளான மணற் பளிங்குகள் 'குவார்ட்ஸ்' (Quartz) என்ற பொதுப் பெயரால் அழைக்கப்படுகின்றன. இதன் இரசாயனப் பெயர் 'சிலிக்கா' (Silica); பூமியில் அதிக அளவில் காணப்படும் சிலிக்கனும் ஒட்சிசனும் இணைந்து உருவாக்குவதே இந்த சிலிக்கா ஆகும்.

எமது மூதாதையர்களும் சிலிக்காவின் பயன்பாட்டை ஓரளவு அறிந்திருக்கின்றனர். மணலைப் பயன்படுத்தி, மொசபத்தேமியர்கள் கண்ணாடி தயாரித்துள்ளனர். பளபளப்பான கல் போன்ற நாலாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட இந்தக் கண்ணாடியைத் தொல்பொருளாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். எரிமலையின் வெப்பத்தால் சிலிக்காவும் வேறு பொருட்களும் சேர்ந்து 'ஒப்சிடியன்' (obsidian) என்ற கறுப்பு நிற சிலிக்காப் பளிங்குகள் உருவாகின்றன. இந்த ஒப்சிடியன்களைப் பயன்படுத்திக் கூட ஆதியில் ஆபரணங்கள் தயாரித்திருக்கிறார்கள்.

மணல் மண்ணின் நவீன காலப் பயன்பாட்டிலும் கண்ணாடி தயாரிப்புக்கே முதலிடம் கிடைத்துள்ளது. அமெரிக்காவில் நியூஜெர்சி கண்ணாடித் தொழிற்சாலை யொன்று பதின்மூன்று வினாடிகளுக்கு ஒரு போத்தல் என்ற வீதத்தில் போத்தல்களை உற்பத்தி செய்து தள்ளுகிறது. இத் தொழிற்சாலை ஆண்டொன்றுக்கு 1,50,000 தொன்கள் மணலைப் பயன்படுத்துகிறது.

மணல் மண்ணின் இன்னுமொரு பயன்பாடு அதன் பளிங்குத் தன்மையை அடிப்படையாகக் கொண்டது. வானொலி கண்டுபிடிக்கப்பட்ட புதிதில் ஒலிபரப்புக்கருவிகளில் (Transmitter) சிலிக்காப் பளிங்குகளின் மூலம் தான் வானொலி அலைகளின் அதிர்வு எண்களை மாற்றினார்கள். தொலைக் காட்சியிலும், ராடாரிலும் கூட மணற் பளிங்குகளைப் பயன்படுத்தினார்கள். நவீன கடிகாரங்களில், பொறியியல் அமைப்புக்கள் ஏற்படுத்த முடியாத நுட்பமான அதிர்வுகளையெல்லாம் குவார்ட்ஸ் பளிங்குகள் ஏற்படுத்துகின்றன.

சிலிக்காவைத் தூய்மையாக அல்லது வேறு பொருட்களுடன் கலந்து பயன்படுத்துவதில் இருந்து அடுத்த படியையும் விஞ்ஞானிகள் இப்போது அடைந்திருக்கிறார்கள். மணலை வழிகாட்டியாகவும் மூலப்பொருளாகவும் கொண்டு சிலிக்கன் - ஒட்சிசன் சங்கிலிகள் தொடர்ச்சியாக உருவாக்கப்பட்டுள்ளன. இப்படி உருவாக்கப்பட்ட மணலுக்கு 'சிலிக்கோன்' என்று பெயரிட்டிருக்கிறார்கள்.

சிலிக்கோனின் பாவனை சமையலறை தொடங்கி விண்வெளிவரை வியாபித்திருக்கிறது. தட்டில் சூடாக்கப்படும் உணவுப்பொருள் தட்டுடன் ஒட்டிக்கொள்ளாமலிருக்க, தட்டு சிலிக்கோனால் முலாமிடப்படுகிறது. தளபாடங்களை மினுக்குதல், இயந்திரங்களைச் சுத்தப்படுத்தல், விண்வெளி வாகனங்களை உயர் வெப்பத்தில் இருந்து காப்பதற்காகக் கவசமிடல் என இதன் பயன்பாட்டுப் பட்டியல் நீள்கிறது. சிலிக்கோன் மனித உடலுக்குத் தீமை செய்வதில்லையாகையால் சிலிக்கோனைப் பயன்படுத்தி செயற்கையான விரல் இணைப்புகள், மூக்கு, மார்பகம், இதயவால்வுகள் என்பவை கூட இன்ற மாற்று உடல் உறுப்புக்களாகத் தயாரிக்கப்படுகின்றன.

சிலிக்கோனின் பிரதான பயன்பாடு கணனிகளின் 'சிலிக்கன் சில்லுகள்' தயாரிப்பு ஆகும். சிலிக்கன் பளிங்கை வளரச் செய்து, மென்தட்டுகளாக வெட்டி, அத் தட்டுக்களில் அதி ஊதாக் கதிர்களைக் கொண்டு மின்சுற்றுக்களை வரைந்து சிலிக்கன் சில்லுகளைத் தயாரிக்கிறார்கள்.

இந்த, அத்தனை பயன்பாடுகளையும் தன்னுள் பொத்தி வைத்திருக்கும் கைத்தொழில்வளத்தை இயற்கை எமக்கும் வல்லிபுரக்கோவில், மணற்காட்டுப் பகுதிகளில் தாராளமாக அள்ளித் தந்திருக்கிறது. இது கனவு காண்பவர்களது மணற்கோட்டையல்ல, 1920 ஆம் ஆண்டிலேயே பிரித்தானியாவின் கம்பீரியல் நிறுவனம் வடமராட்சிக் கிழக்கின் மண்வளத்தை ஆராய்ந்து இந்த உண்மையைத் தெரியப்படுத்தி உள்ளது.

இம்மணலைப் பயன்படுத்தி இயங்கக் கூடிய பாரிய கண்ணாடித் தொழிற்சாலை ஒன்றை உருவாக்குவதற்கான கட்டுமானப் பணிகள் 1978 இல் அச்சுவேலித் தொழிற்பேட்டைப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் தமிழர்களின் சுயசார்புப் பொருண்மியத்தைத் திட்டமிட்டு நசுக்கி வந்த ஸ்ரீலங்கா அரசின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் கூர்மையடையத் தொடங்கியதும் இம் முயற்சி கைவிடப்பட்டுப்போனது.

( தொடர்ச்சி அடுத்த வாரம் )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடி 18ம் நாள் மார்க்கம் திரை அரங்கில் மனவெளி கலையாற்றுக் குழு வழங்கிய அரங்காடல் 2004

## அரங்காடல்

ஒரே அரங்கில் பன்முக கதா பாத்திரங்களின் அரங்காடல். ஒவ்வொரு நாடகத்தின் கதையும் கதாபாத்திரங்களும் எங்கோ ஒரு மூலையில் உறங்கிக் கிடக்கும் உணர்வுகளுக்கு உயிர் கொடுத்து கண்முன் காட்சிக்கு விட்டதுபோல் யதார்த்தமாக இருந்தது. முத்தமிழின் மூன்றாம் தமிழுக்கு இது ஒரு புதிய முகவரி உண்மையைச் சொன்னால்

நாடகம் பார்த்தேன் தோள் கண்டேன் தோளே கண்டேன் என்ற கம்பனின் சொற் கோட்டம்போல் நாடகம் பார்த்தேன்....நாடகமே பார்த்தேன் என்பது பொருத்தமாக இருக்கும் என்றே நினைக்கின்றேன்.

நாடகம் என்னும் பதம் இங்கே பக்குவமாய் கையாளப் பட்டிருப்பதைக் கண்டேன் நாடக நதிகள் ஆறு ஒன்றாய்க் கூடி தமிழ்க் கடலின் நீர் மட்டத்தை அதிகரிக்க வைத்திருக்கிறது.

இப்பொழுது ஆடல் அரங்கத்திற்குள் நுளைகின்றேன் ஆடி 18ம் நாள் மார்க்கம் திரை அரங்கில் மனவெளி கலையாற்றுக் குழு வழங்கிய அரங்காடல் 2004 ஆறு நாடகங்கள். அந்த நாடகங்களை பார்த்து முடித்தபோது அடடா இந்தப் பிரபஞ்சத்தை ஐந்து மணி நேரத்திற்குள்சுற்றிவந்து விட்டது போன்றே என் மனநிலை இருந்தது.

அறுசுவைகளிலும் நான் அனுபவித்த சுகத்தை இங்கே சுரம்பிரித்து வைக்க முயல்கிறேன்.

### மூலதனம்

இது கேரளத்துக் கதை என்றும் தமிழில் மொழிமாற்றித் தந்தவர் வேறொருவர் என்றும் அரங்காட நெறிப்படுத்தி வந்தவர் **மாணிக்கவாசகர் சுதன்** என்றும் முன்னுரை தந்திருந்தார்கள்

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ்மொழியில் பெயர்த்தல் வேண்டும்
மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள் சொல்வதிலோர் மகிமை இல்லை. திறமான புலமையெனில் வெளிநாடடோர் அதை வணக்கஞ் செய்தல் வேண்டும்

சங்க காலத்திற்குப் பின் பைந்தமிழுக்கு புத்துணர்ச்சி தந்த மாகவி பாரதியின் மன வாசகங்கள் கதையும் பாத்திரங்களும் நன்றாகவே காலத்தோடு ஒன்றியிருந்தது.

மூலம் ஒன்று இல்லாமல் உலகின் எந்த ஒரு உருவாக்கமும் இல்லை. இயற்கையின் இயக்கத்தின் அடிப்படையை பார்த்தால் ஒவ்வொன்றிற்கும் ஏதோ ஒன்று மூலமாக இருப்பது புலனாகும்.

எங்களைப் பொறுத்த வரையில் மூலதனம் என்ற சொற்பதம் பொருளாதாரத்தில்தான் பிரபல்யம் பெற்றிருக்கிறது ஐந்து கோடி ரூபா சம்பாதிப்பதற்கு ஐந்து ரூபா கூடு மூலதனமாக இருந்திருக்கலாம்.

எதை முதலிடுகிறோமோ அதை மூலதனம் என்கிறோம் இப்போது கதைக்கும் மூலதனத்திற்கும் இந்தக் கதாசிரியர் கொடுத்த ஒற்றுமை என்ன என்பதைப் பார்த்தால்

ஒரு குடும்பத்தின் ஆரோக்கிமான வளர்ச்சிக்கு கட்டான குடும்ப அமைப்பே மூலதனம் என்பதை சிதறிக்கிடக்கும் உறவுகளின் மூலம் விளக்க முனைந்திருப்பது தெட்டத் தெளிவாகத் தெரிகிறது. உறவுப் பாலம் சிதறிக்கிடக்கிறது இருமுனைகளிலும் உறவுகள் தவிக்கின்றன உதிரிப் பூக்களாய் சிதறிவிட்ட உறவுகளை சேர்த்து குடும்ப மாலையைப் புனைவதில் வரும் இடர்ப் பாடுகளை விளக்குகின்றது மூலதனம்.

பாத்திரங்களாய் வந்தவர்கள் ஒவ்வொருவரும் அந்தப் பாத்திரங்களாகவே மாறியிருப்பதை உணரக் கூடியதாக இருந்தது.

ஒரு குடம்பத் தலைவன் இல்லையென்றால் கோடி பிரச்சனைகளின் கொள்ளிடமாக ஒரு குடம்பத் தலைவி
தவிப்பதை சாரதா என்ற பாத்திரத்தில் நடித்தவர் மிக திறமையான நடிப்பால் வெளிப்படுத்தி இருக்கிறார்
உயர் மட்டங்களின் செல்வாக்கை மூலதனமாக முன்வைத்து உதவி செய்வதாக வேடமிட்டு அபலைப் பெண்ணை அடையத் துடிக்கும் வேடதாரியாக மட்டுமன்றி புகழ் என்ற இமயத்தை அடைய ரவி என்ற நண்பன் எழுதிய கதையை தானே எழுதியதாகக் கூறி பழிங்குகளின் மேல் பாசியை பூசிவிடுகிறார் வாசகி ஒருத்தியை வலையிலும் வீழ்த்தி விடுகின்றார் மது
எதற்காக கொலை செய்தார் என்பதை புதிராக வைத்திருந்தாலும் தந்தை இல்லாத பிள்ளைகள் காதல் கணவன் இல்லாத மனைவி இவர்களைச் சுற்றிப் பின்னப் பட்டிருப்பதே கதையின் முக்கிய நோக்கமாக இருந்ததால் ரவி என்ற பாத்திரத்தை முக்கியத்துவப் படுத்தி சொல்வதற்கு ஒன்றும் இல்லை.
அம்மணி! அணைத்து முத்தம் கொடுக்க வேண்டும்போல் இருந்தது. சின்னத் தளிர் என்றாலும் நடிப்பில் மிகப் பெரிய முதிர்ச்சி தெரிந்தது கண்கள் கை விரல்கள் எல்லாமே நடித்தது படமே இல்லாத சதுரச் சட்டத்தை அனைத்து வைத்திருந்த அழகும் எஞ்சிய மாலையை தந்தையின் படத்திற்கு போட்டு ரசித் வண்ணமும் பார்வையாளர்களை மெய்சிலிர்க்க வைத்தது. அம்மணி நாடகத்தமிழின் நாளைய வளர்ச்சிக்கு நல்லதோர் மூலதனம்.

மதங்களைக் கடந்து நிற்கும் மனிதத்திற்கு அயல் வீட்டு இஸ்லாமியப் பெண்ணின் நல்ல மனதை சாட்சியாக்கி இருக்கும் காதாசிரியர் மனிதத்திற்கு மதங்கள் தடையல்ல மனிதத்தை மகிமைப் படுத்துவதற்காகவே மதங்கள் என்பதை மௌனமாகச் சொல்லியிருக்கிறார்.

நாடகத்தின் இறுதியில் மட்டும் காவல் துறையினரின் கொடுமையான சித்திரவதைகளில் பெத்த பிள்ளை துடிக்கிறான். மது மட்டும் மனம் வைத்தால் காப்பாற்றலாம் என்பது தெரிந்திருந்தும் தன்னை அடையத் துடிக்கு மதுவிடம் எப்படிக் கேட்பது அதைவிட பெற்ற பிள்ளை துயர் ஒன்றும் பெரிதல்ல என்று தமிழ் பெண்மையின் மேன்மை கற்பெனும் திண்மை என்றுணர்த்த விளைந்த தமிழ்த்தாய்.



இறுதியல் நட்புக்காக காலமெல்லாம் கூடவே இருந்து உதவிகள் பல செய்த இஸ்லாமியப் பெண் தன்னைத் தியாகம் செய்து அவள் பிள்ளையைக் காப்பாற்ற விளைந்தபோது கற்பை காமுகனிடம் விலைகொடுக்க துணிந்தாள். என்னைத் தருகிறேன் என்பதுபோல் அவன் காலடியில சரணடைந்தாள். தவறே இல்லை அதை முடிவாக்கியதில் கொஞ்சம் தமிழ் தாய்மை கொச்சைப்பட்டுப் போகிறது. இந்த இடத்தில் முடிவை சாரதா அப்படியே கற்பெனும் தீயில் உள்ளுடல் பொசுங்கி இறந்துவிடுவதாகவோ அல்லது அவளின் அந்த தியாக நிலைகண்டு மது திருந்தி அறிவுக் கண்களை திறந்து விடுவதாகவோ நாடகத்தை முடித்திருந்தால் நன்றாக இருந்திருக்குமே என்பது எனது தாழ்மையான அபிப்பிராயமாக உள்ளது.

### மூலதனம் நாடகத் தமிழின் செழிப்புக்கு நல்ல உரம்

### தத்துப்பிள்ளை

பூக்கள் எந்தத் தேசத்து நந்தவனத்தில் பறித்து வந்தவை என்பது முக்கியமல்ல மாலைதொடுப்பவன் கைவிதைத் திறனே அழகுக்கு காரணமாகின்றது

எந்த தாய் வயிற்றில் பிறந்தாலும் வாழும் சூழலும் சுவாத்தியமும்தான் ஒரு பிள்ளையின் பண்பாட்டை வளர்ச்சியை தீர்மானிக்கிறது என்று ஆய்வுகள் சொல்கின்றன. தத்துப் பிள்ளை தாயின் பண்பினையே முற்றாகக் கொண்டிருக்கும் என்று எதிர் பார்க்க முடியாது என்பதை இந்த குறு நாடகம் துல்லியமாக விளக்கி இருக்கிறது.



இலங்கையில் ஒரு தலை சிறந்த எழுத்தாளனின் கதையை இந்திய இயக்குனர் எடுத்துக் கையாள முற்படும் போது கதை உயிரிழந்து நிற்கிறது எழுத்தாளனின் நோக்கம் தோற்றுப் போகிறது வியாபாரி வெற்றிப் படியில் ஏறுகிறான். வாழும் தேசம் அங்கே ஓடும் சமுதாய சாதனம் நிகழும் காலம் இத்தனைக்கும் ஏற்றாற்போல் உண்மைத்தாய்க்கே அடையாளம் தெரியாதபடி தழுவல்கள் முகவரி மாறிவிடும் என்பதை அரங்கத்தில் சொல்லிவிட்டுப் போனது தத்துப் பிள்ளை.

### சமாந்தரங்கள்

குறுக்கும் நெடுக்குமாய் இடியப்ப சிக்கல்களாய் பின்னிப் பிணைந்தும் ஒன்றை ஒன்று முரண்பட்டும் இருக்கும் மனித உறவுகளுக்குள் சமச்சீரான இடைவெளிகொண்ட சமாந்தரக் கோட்டினைப்போல் தாய் மகள் என்ற உறவு மட்டும் கவனமாக கணிதம் செய்து கீறப்படுகிறது.

மகளின் ஒவ்வொரு நகர்விலும் தாயின் தாக்கம் இருக்கும் எங்கே மகள் தவறிவிடுவாளோ என்று எப்போதும்
தாய்மனதில் ஏக்கம் குடிகொண்டிருக்கும் அதற்கும் காரணம் உண்டு தமிழர் பண்பாட்டு விழுமியங்களை சிந்தாமல் சிதறாமல் பரம்பரை பரம்பரையாக சுமந்து வந்தவர்கள் பெண்கள்தான்.

பண்பிலும் பழக்கத்திலும் தன்னைப்போல் தன் மகள் வளரவேண்டும் என்பதே ஒவ்வொரு தமிழ்த் தாயினதும் ஆசையாக உள்ளது இங்கே பிரஷாந்தி பத்மநாதன், சௌமியா தயாளன் இருவருமே இமைகள் மூடாமல் விழிகள் அசையாமல் நடிப்பில் லயித்திருக்க வைத்து விட்டார்கள். புரிந்து உணர்வுக்கு மொழியே அவசியம் என்பது இங்கே பொய்த்து விட்டது. மொழி வெட்கப்பட்டு ஒதுங்கிக் கொண்டது இந்த நாட்டிய நாடகத்தை இயக்கிய தர்சினி வரப்பிரகாசம், பிரஷாந்தி பத்மநாதன் இருவரும் நாட்டியக் கலையின் சிகரங்கள் என்பதை நிரூபித்து விட்டார்கள்.

### காலயந்திரங்கள்

அரங்கத்தின் தலைமைப் பொறுப்பை கடிகாரம் ஏற்றிருப்பதைப்போல் காட்சியின் ஆரம்பத்தில் காடிகாரம் மேடையை முற்றகை இட்டிருந்தது நெறியாளரின் அனுபவக் கூர்மைக்கு கட்டியம் கூறுகின்றது.

காலம் சுழல்கிறது காலக் கணிதத்திற்குள் இயற்கையும் கட்டுப்பட்டே இயங்குகின்றுது மனிதன் மட்டும் அடிக்கடி முரண்டுபிடிப்பதுண்டு. காலத்தின் பலமான அடி விழும்போது ஆடி அடங்கி காலக் கணிதத்தின்முன் தன் கணக்கை கோட்டை விட்டு விடுகிறான் இதுதான் வாழ்வியல் யதார்த்தம் என்றால் அதையும் ஒப்புக் கொள்ள சம்மதம் இல்லாத மனிதர்கள்.

இந்த உண்மையைப் புலப்படுத்த காலச் சக்கரத்தின் தாக்கத்திற்கு உட்பட்ட வித்தியாசமான கதாபாத்திரங்களை ஒரே குடும்பத்திற்குள் சிருஷ்டித்த இயக்குனருக்கு முதலில் பாராட்டுச் சொல்ல வேண்டும் மிக அருமையான கற்பனை.

தொழில் அதிபர் இயந்திரங்களை அறிமுகப்படுத்தி தயாரிப்புகளின் வேகத்தை கூட்டி குறுகிய காலத்திற்குள் லாபத்தை பெற்றுவிட துடிக்கின்றார். காலத்தின் கணக்கிற்கு மதிப்பளித்து காலவரையறுப்பை மீறாமல் நிதானமாக செயல்படுவதே நல்லது என வலியுறுத்தும் சக பங்காளர்கள்.

வரையறுக்கப் பட்ட காலக் கணிப்பை மனிதன் தன்கணக்கால் தோற்கடித்து விடலாம் என்று முயற்சிப்பதில் தப்பே இல்லை. ஆனால் அதனால் வரும் இழப்புக்களையும் மனிதனால் தாங்கிக் கொள்ள முடிவதில்லை மனைவி பிள்ளைகளின் சந்தோஷம் அவர்களின் தேடல்கள் தேவைகள் இதில் அக்கறை செலுத்த போதுமான காலம் கிடைக்காதபோது அப்பா என்ற உறவு அதன் அர்த்தம் பிள்ளைக்கு புரியாது. இரவுத் தூக்கத்திற்கு போகும் குழந்தைகள் தங்களோடு சின்னதொரு பொம்மையை துணையாக உறங்க வைப்பது போல்தான் கணவன் என்பது இரவில் பக்கத்தில் படுத்திருக்கும் மனிதப் பொம்மை என்றாகி விடுகிறது கால நகர்வில் உறவில் விழுந்துவிடும் அகலமான விரிசல்.

மனைவி அவளின் நினைவுகளில் எல்லாம் இளமை நிலைக்கும் என்ற கனவு காலம் என்னை என்ன செய்யும் பார்க்கலாம் வழுவழுப்பான என் மேனியில் சுருக்கம் எனும் தடங்களை காலம் பதித்துவிட முடியாது முதுமையா அது எங்கே என்னை முட்டிப் பார்க்கட்டும் பார்க்கலாம். காலம் தன்கைவரிசையைக் காட்டும் என்பதை அவள் புரிந்து கொண்டபோது பொரிமாத் தோண்டியைப் போல் பொத்தென்று உடைந்து விடுகிறாள்.
வாழப்போவது இன்னும் ஒருவருடம் காலத்தின் கணக்கை வைத்தியர் கோடிட்டுக் காட்டி விட்டார் காலத்தை மேவிப் போராட்டம் நடத்தி கிடைத்த காலத்தை கோட்டை விட்டு விடக் கூடாது என்பதில் இவளின் கவனம் காதல் சுகம். அது நிரந்தரமாக என்றால் கொஞ்சம் நிதானமாக தேர்வுசெய்யலாம்
ஒரு நாள் சுகத்திற்காக இறக்கை வாங்கிவரும் ஈசல்களைப்போல் சிலநாட்கள் மட்டும் வாழ்ப்போகும் அவள்
தன்காதலன் எப்படி இருக்க வேண்டும் என்பதில் கவனம் செலுத்தவில்லை. ஒருவேளை அவள் தன் காதலனை தோந்து எடுப்பதில் நாட்களை நகர்த்தியிருந்தால் காதல் சுகம் கிட்டுவதற்கு முன்பே சாவந்து சேர்ந்திருக்கக் கூடும். மதுபானம் அருந்துவதாக காட்டினாலும் காலக் கணிதத்திற்கு ஏற்றவாறு வாழ்க்கையை வரையறுத்துக் கொள்பவர் வெற்றி அடைந்து விடுகிறார்கள் என்பதை இயக்குனர் வெற்றிகரமாக விளக்கியிருக்கிறார்.

நடிப்பில் அத்தனை கதாபாத்திரங்களும் சக்கைபோடு போட்டிருக்கின்றன
அடுத்து அரங்கத்தில்...... **ACT WITHOUT WORDS** சின்னதொரு கரு இந்த உலகிற்குள் நீ வீழ்ந்துவிட்டால் சுற்றியுள்ள சூழல்களின் தாக்கம் உன்னை ஆட்கொள்ளும். இது தவிர்க்க முடியாதது அந்த தாக்கத்திற்கு முகம் கொடுக்க முடியாமல் வந்தவழி பார்த்து ஓட நினைத்தாலும் இயற்கை உன்னை திருப்பியும் பிறவிக்குள் தள்ளும். நீ கொண்டுவந்த உடல் உயிர் உனது கனவுகள் இந்த சுயங்களையும் சூழலின் தட்பவெப்பநிலைகள்தான் தீர்மானிக்கிறது
உறைபனிச் சூழலில் இரத்தம் உறைந்தால்.....
உயர் வெப்பம் அதிகரித்தால்....
காற்று கணப்பொழுது நின்று விட்டால்......
உங்கள் சுயங்களின் நிலை என்னாகும்
உலகத்தாக்கங்களோடு தர்க்கம் வேண்டாம்
தழுவிக்கொண்டு செல்மனிதா என்று
வார்த்தைகள் இல்லாமல் ஒரு வாழக்குரை கதை இங்கே அரங்கேறியது உண்மையாகவே உடல்வலி நோக்காமல் படீர் படீர்என்று கீழே விழுந்து தன் நடிப்புத்திறனை வெளிப்படுத்தியதோடு இந்த மௌன யுத்தத்தை நெறிப்படுத்தி அரங்கிற்க கொண்டுவந்து கலைப்பசி தீர்த்த சத்தியா தில்லைநாதன் அவர்கள் பாராட்டிற்குரியவரே.

அரங்காடல் நிகழ்ச்சிக்கு சிகரமாக அமைந்தது துளிரும் சருகுகள்
புலம்பெயர்ந்து வாழும் சமூகத்தின் மத்தியில்' புரையோடிக் கிடக்கும் முக்கியமான குறைபாடுகளை அரங்கத்திற்கு இழுத்துவந்து நியாயம் கேட்டிருக்கும் இந்த நாடகமே காலத்தின் தேவை அறிந்து இன்றய முதியவரின் தேடல்களுக்கு சாலச்சிறந்த தீனி போட்டிருக்கிறது என்றால் மிகையில்லை

பாத்திரங்கள் இரண்டு முதியவர்கள் மட்டும்தான் நல்லதொரு நெறியாளனின் கைவண்ணம் என்று பாராட்டும்படி அரங்கம் முழுவதுமே பொலிந்திருப்பதுபோல் நெறியாளர் கதையை நகர்த்தியிருக்கும் உத்தி மிகமிக பாராட்டுதற்குரியது
ஒவ்வொரு முதியவர் மனதிலும் கோடி ஆசைகள் புதைந்து கிடக்கிறது பூட்டிய கதவுக்குள் முடங்கிக் கிடக்கும் அவர்கள் நெஞ்சுக்குள் யுத்தகளம் நடக்கிறது அவர்களின் கனவுகளை மெய்படுத்த யார்தான் முயல்வார்கள்

இரண்டு முதியவர்கள் பூட்டை உடைந்துக்கொண்டு புறப்பட்டு விட்டார்கள் ஒருவர் தன்கதையைச் சொல்வதும் சோக மேலீட்டில் தற்கொலை செய்யத் துணிவதும் அடிக்கடி அவரைத் தடுத்து நிறுத்திய மற்றய முதியவர் தன்நிலை தளர்ந்து தற்கொலைக்கு முனையும்போது அடுத்த முதியவர் தடுப்பது வேடிக்கையாக இருந்தது. ஆயினும் அதற்குள் தான் அந்த நாடகத்தின் உட்பொருளும் புதைத்து வைக்கப்பட்டிருந்து

ஈ, எறும்பு வாழ்வதற்கும் கல்லுக்குள் உள்ள தேரைக்கும் ஆகாரம் கொடுத்து வாழவைத்த இறைவன் எங்களையா கைவிடப் போகிறான். எல்லா வசதிகளும் உள்ள இந்த நாட்டில் யாருக்காகவும் யாரும் வாழத் தேவையில்லை துணிந்து எழுந்தனர் முதியவர் பணிந்து வரவேற்றது இந்த வானமும் வையமும்.

அரங்காடல் **2004** நாடகப் பிரியருக்கு ஓர் அமுத விருந்து

- கலா-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(சென்ற வாரத் தொடர்ச்சி)

## இயற்கை தந்த வரம்

ஆயிரம் திரை கண்டு இன்றும் சளைக்காமல் நடிப்புலகில் ஓடிக்கொண்டிருக்கும் மனோரமாவிற்கு வயது அறுபதுக்கும் மேல். உடலையும் மனதையும் துவளச்செய்யும் மெனோபோஸ் பருவத்தைத் தான் கடந்துவந்த விதத்தை இங்கே பகிர்ந்து கொள்கிறார் ஆச்சி.

பத்து வயசா இருக்கும்கோதே மெனோபோஸ் என்றால் என்னவென்று புரிந்துவிட்டேன். அந்தளவிற்கு என் கண்முன்னே க்'டப்பட்டவர் உணர்வுகள் வேறு கல்யாணம் புரு'ன் என்பது வேறு.அதிலும் அவ எழுதுறவ. ஒரு லவ்ஸ்டோரி எழுதணும்னாக்கூட இந்த உணர்வுகள் வேணும் என்று சொல்லிவிட்டாங்க. நல்லவேளையாக கால் உடைஞ்சு ஆஸ்டியோபொராஸிஸ் வந்துநான் கஷ்டப்பட்டபோது அந்த ஓவரீஸ்தான் என்னைக் காப்பாற்றியது. அதிலிருந்து சுரக்கின்ற ஹார்மோன்களால்தான் என் உடம்பிற்கு இன்றுவரைக்கும் கல்சியம் கிடைத்திருக்கிறது.

யுட்ரஸஷ எடுத்ததன் பின் நாற்பத்தொரு வயதில் எனக்கும் மெனோபோஸ் வந்தது. திடீரென்று தலைக்குள் என்னவோ கொதிக்கிற மாதிரி இருக்கும். சட்சட்டென்று கோபம் வரும். வசு என்னை மன்னிசிடும்மா ஒரேயடியா எல்லாவற்றையும் சொல்லிவிடுகிறேன் என்று ஆரம்பித்தபோது கூட இப்படியான விஷயங்கள் அவர் வாயிலிருந்து வரும் என்று எதிர்பார்த்திருக்கவில்லை.

நான் இரண்டு மூன்று தடைவ சிவப்பு விளக்குப் பகுதிக்குப் போய்விட்டு வந்தேன் வசு.. என்று அவர் சொல்லி முடித்தபோது வசுமதிக்குத் தான் இன்னும் உயிரோடு தான் இருக்கிறோமா என்கிற சந்தேகம் வந்தது. ஆத்திரம். அழுகை கோபம் எல்லாம் முடிந்து யோசித்துப் பார்த்தபோது இது சாதாரணமாக விடக்கூடிய விஷயமில்லை என்பது புரிந்தது.

கால்வலி என்றால் மருத்துவர்களிடம் போகிறவர்கள் இதற்கும் முதலிலேயே மருத்துவரிடம் போயிருந்தால் மருந்து கொடுத்திருப்பார். சரியாகியிருக்கும்.

இரண்டாவது ஆர்காஸ்மிக் டிஸ்.ஃ.பங்ஷன் ஏனப்படுகிற பெண் உச்ச நிலையை அடையாதிருக்கும் பிரச்சனை. இது பொதுவாக நிறையப் பெண்களுக்கு ஏற்படுவது. இவர்களுக்கு ஹெச்.ஆர்.டி.தர வேண்டும். கூடவே பெண்ணுறுப்புப் பகுதியில் செயற்கையான வழவழப்புத் தன்மையைத் தருகிற ஜெல் தடவ வேண்டும். சிலர் தாங்களாகவே விளக்கெண்ணெய் தேங்காய்

# நாற்பதைக் கடக்கும் பெண்களுக்கு ஒரு வழிகாட்டி

# – மெனோபோஸ் (Menopause) –

என் அம்மா. அம்மா எந்நேரமும் அனலில் குளித்து முறுக்குச் சுடும் வேலை. வேலை பார்த்துக் கொண்டிருக்கும் போதே திடுதிப்பென்று காலோடத் தீட்டுப் போகும். அவங்க கட்டியிருக்கிற 18 முழம் புடவை மொத்தமாக நனைந்துவிடும். ஒரு நாளைக்கு நாலைந்து புடவை மாத்துவாங்க. நான்தான் துவைப்பேன். அம்மா படும் வேதனையைப் பார்த்து எனக்கு நெஞ்சு வலிக்கும். அம்மா கஷ்டப்பட்டாத்தான் எங்க வயித்துக்குச் சோறு. ஆனா சேர்ந்தாப்போல் அரைமணிநேரம் உட்காரமுடியாத அளவிற்கு கைகாலெல்லாம் விட்டுப் போகிறது என்று அழுது கொண்டே போய்ப் படுத்திடுவாங்க. ஒரு வருஷம் வரைக்கும் இந்த அவஸ்தை தொடார்ந்தது. அம்மாவுக்கு நான். எனக்கு அம்மா வேறு துணையில்லை என்றதால் தன் உடம்புக்கு என்னவென்பதை என்னிடம் விளக்கமாகச் சொன்னார்கள். அந்த நிமிடமே என் அடி மனதில் இந்த வயதை நினைத்து ஒரு பயம் ஒட்டிக்கிட்டே இருந்தது.

நாற்பத்தைந்தாவது வயதில் அந்தக் கட்டம் எனக்கு வந்தது. இந்த விஷயத்தில் அம்மா மாதிரித்தான் பெண்ணுக்கும் என்று சொன்னதால் பயம் கூடியது. முனமாயி தயவால் எனக்கு அந்த மாதிரி ஏற்படவில்லை.

அந்த இரண்டு வருஷமும் அடிக்கடி மூளையே குழம்பிப் போவது போலிருக்கும். திடீரென உடம்யு முழுவதும் அனலடிக்கும். குப்பென்று வேர்க்கும். அதை வெளியில் காட்டிக்கொள்ளாது காத்தாட உட்கார்ந்து உடம்பு பழைய நிலைக்கு வந்ததும் வேலையைப் பார்ப்பேன். இப்படியெல்லாம் ஆகுமென்று தெரிந்திருந்ததால் தன்னால் சரியாகிவிடுமென்று நானே என்னைச் சமாதானப்படுத்திவிடுவேன்.

எப்போ வருமென்று தெரியாது திடீர் திடீரென விலக்காகும். ஆதனால் தான் ரொம்ப அவஸ்தைப்பட்டேன். அப்படித்தான் வருவான் வடிவேலன் படத்திற்காக மதுரை மீனாட்சியம்மன் கோயிலுக்குப் போனபோது விலக்காகிவிட்டேன். எல்லாரும் காத்திருந்தாங்க. நான் தயங்கினால் பலபேருடைய பிழைப்புக் கெட்டுவிடும். கடைசியில் ஆத்தாமேல் பாரத்தைப் போட்டுவிட்டு இது பெண் பிறப்பிற்கு நீ ஏற்படுத்திய நியதி. இதில் என் தப்பொன்றுமில்லை தாயே என்று கண்ணீரோடே வேண்டிவிட்டு பிரகாரத்துள் நுழைந்து நடித்தேன். அந்த ஒரு நாள் முழுக்கப் பச்சைத் தண்ணி பல்லிற் படாமற் பார்த்தேன். அதுதான் ஆத்தாவிற்கு என்னால் செய்ய முடிந்தது.

இத்தனை அவஸ்தைப் பட்டதனாலோ என்னவோ அந்த மாதாந்தரத் தொல்லையிலிருந்து கிடைத்த விடுதலை பிரசவ வெதனையை மறக்கடித்து குழந்தைமுகம் பார்க்கிற மாதிரி அத்தனை சுகமாயிருக்கிறது. ஒரு வேளை இளமை போய்விட்டதென்று சங்கடப்படக் கூடாதென்றுதான் இயற்கை இத்தனை கஷ்டங்களைத் தருகிறதோ என்னவோ என்கிறார் கவித்துவமாக.

**இன்னும் நான் இளமை தான்**

சிரித்த முகம் எழுத்தாளர் அனுராதா ரமணனுக்கு வரும் ஜூனில் ஐம்பத்தேழு வயதைத் தாண்டுகிறது. தான் கடந்து வந்த பாதையைக் கொஞ்சம் திரும்பிப் பார்க்கிறார். அப்போ எனக்கு முப்பத்தேழு வயது. எழுத்தாளராக ரொம்பப் புகழோட இருந்த காலம். மீட்டிங் விழாவென்று எங்கேயாவது போய்ட்டே இருப்பேன். ஆப்போதான் அந்தப் பிரச்னை ஆரம்பித்தது. பதினைந்து நாள் இருபது நாளுக்கு ஒருமுறை விலக்காகிவிடும். உடம்பே கரைந்துபோவதுபோல் மிகவும் கஷ்டப்பட்டேன். டாக்டரிடம் போனபோது ஸ்கேன் பண்ணிப் பார்த்துவிட்டு யுட்ரஸ்ஸில் சின்னக் கட்டி இருக்கிறது. யுட்ரஸ்ஸையே எடுக்கவேண்டும் என்று சொல்லிவிட்டார்கள். எனக்கு சர்ஜரிபண்ணின டாக்டர் கனகவல்லி. உனக்கு முப்பத்தேழு வயசுதானே ஆகிறது. ஓவரிஸை எடுக்க வேண்டாம். ஆதை எடுத்தால் ரொமான்டிக்கான உணர்வுகள் செத்துப்போய்விடும் என்றார். ஆதற்கு என் அம்மா அதனால் என்ன டாக்டர்? அவ புரு'ன் தான் உயிரோடில்லையே என்று சொல்லவும் டாக்டர் அப்படிச் சொல்லாதீங்கம்மா

பிபி தான் அதிகமாகிவிட்டதென்று டாக்டரிடம் போனால் பிபி நார்மலா இருக்கும். அப்போதான் டாக்டர் இது மெனோபோஸ். உங்க விஷயத்தில் மாதவிலக்கு இருக்காதே தவிர மற்லெல்லாக் குழப்பங்களும் இருக்கும் என்றார். இப்போது நினைக்கும்போது கூட ஆச்சரியமாக இருக்கிறது. அது ஒரு மாதிரி நம்மை நாமே இழந்துவிடும் நிலைமை. மத்தவங்களுக்கு அந்த நேரத்தில் ஆறுதல் சொல்ல வீட்டுக்காரர் இருப்பாங்க. என் விஷயத்தில் வீட்டுக்காரனும் நானே. வீட்டுக்காரியும் நானே. என்னை நானேதான் தேற்றிக்கணும்.

சின்ன வயதில் இருந்தே எனக்கு ஒரு புத்தி. எதுக்காகவும் ரொம்ப நேரம் அழவோ வருத்தப்படவோ மாட்டேன். கொஞ்ச நேரம் மனசு விட்டு அழுதுவிட்டு விட்டுவிடுவேன்.

அப்படிப்பட்ட நானே அந்த நேரத்தில் நாலுறங்கும் நாள் வேண்டும். சாய்ந்து கொள்ளத் தோள் வேண்டும். உன் கண்ணில் நீர் வேண்டும். சுகமாக அழ வேண்டும் என்று ஒரு சினிமாப் பாட்டில் வருமே அதுபோல



எனக்கென்று யாருமே இல்லையேயென்று மிகவும் தவித்துவிட்டேன். ஆந்த நேரம் என் தங்கை என் கூடவே ஆறுதலாக இருந்தாள். இப்போ பாருங்க ரொம்ப சந்தோஷமாக இருக்கிறேன். நேற்றுப் பெய்த மழையில் ஒரு பையனும் பொண்ணும் வீட்டுக்குத் தெரியாம வந்திருக்குங்க போல.. ஸ்கூட்டர்ல நனைஞ்சுட்டு என் வீட்டு வழியா போச்சுங்க. எனக்கு அதுங்களை பாக்க ஆசையா இருந்தது. என்னோட உணர்வுகளை நல்லபடியாக வைத்திருக்கும் கடவுளுக்கு நன்றி சொன்னேன். ஏன் உடலுக்குத்தான் வயசாச்சே தவிர மனசு இன்னும் இளமைத்துள்ளலோட தான் இருக்கிறது.

**சந்தோஷத்தை மீட்க முடியும்**

வசுமதிக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. ஏன் தன் கணவரின் புத்தி இப்படிப் போனது.? இத்தனை வருடங்களாகத் தன்னைத்தவிர வேறொரு பெண்ணை ஏறெடுத்தும் பார்க்காத மனிதர் திடீரென்று வேலைக்காரியிடம் போய் இப்படி நடந்து கொள்வார் என்பதை வசுமதி நினைத்துக் கூடப் பார்த்ததில்லை. முதலில் வேலைக்காரியின் மீதுதான் சந்தேகம் வந்தது. ஆனால் கணவரிடம் கேட்டபோது அவர் அதை மறுக்காததும் வேலைக்காரியின் முகம் பார்க்கக் கூசியதும் உண்மையை டபாரம் அடித்தன. கூசிப் போனார் வசுமதி. நல்லவேளையாகத் தன்னைக் காப்பாற்றிக் கொண்டுவிட்ட வேலைக்காரி இனிமேல் உன் சங்காத்தமே வேண்டாம் நாங்க வயித்துக்கு இல்லேன்னாலும் ஈனப் பொழப்புப் பிழைக்கிறவங்க இல்லை என்று தூற்றி வாரிப் பேசியது மனதை என்னவோ செய்தது. தன் கணவன் இப்படியா? ஏன்று குறுகிப் போய் இருந்தவளை மேலும் குறுக்கின கணவனின் வார்த்தைகள்.

ஊடனடியாக என்னிடம் வந்தார்கள். என்று தொடங்கினார் டாக்டர் நாரதயண ரெட்டி.

இவருக்குக் கவுன்சிலிங் பண்ணுங்கள் என்றுதான் அந்த அம்மா கேட்டார்கள். ஆனால் கவுன்சிலிங் தேவைப்பட்டது அந்த அம்மாவுக்குத் தான். மெனோபோஸை அடைந்திருந்த அவருக்கு தாம்பத்திய உறவு பெரும் வலி தரும் விஷயமாக மாறிவீட்டது. காரணம் பெண்ணுறுப்பை வழவழப்பாக வைத்திருக்கின்ற திரவம் சுரக்காமல் போனதுதான். பயத்தில் அந்த அம்மா தன் கணவரை நெருங்கவே விடவில்லை. ஆதன் விளைவுதான் இது. குறைந்தபட்சம் தன் கணவருடன் இந்தப் பிரச்சனைகளை அவர் பகிர்ந்து கொண்டிருந்தால்கூட அவருக்குப் புரிந்திருக்கும். இவர் காரணமே சொல்லாமல் நெருங்கவும் விடாமல் முரண்டு பிடிக்கவும் தான் இப்படி ஒரு தவறைச் செய்திருக்கிறார்.

தான் மாதவிலக்கு நிற்கிற நிலையில் இருப்பதாகச் சொன்னால் எங்கே தன்னைக் கணவருக்குப் பிடிக்காமல் போய்விடுமோ என்கிற பயம் பகிர்ந்து கொள்ளாததற்குக் காரணம். பிறகு அவர்கள் இருவருக்குமே கவுன்சிலிங் செய்து ஹெச். ஆர். டீ. (ஹார்மோன் ரிப்பிளேஸ்மெண்ட் தெரபி)பற்றிச் சொல்லி சிகிச்சையும் எடுத்த பிறகு இப்போது சந்தோஷமாக இருக்கிறார்கள். என்கிறார்.

இந்தச் சமயத்தில் தாம்பத்தியம் தொடர்பான என்னென்ன பிரச்சனைகள் ஏற்படுகின்றன? என்று கேட்டோம்.

மனரீதியான உடல்ரீதியானன என்று இரண்டு வித பிரச்சனைகள் ஏற்படும். மனரீதியாக செக்ஸ் மேல் ஒரு வெறுப்பு ஏற்படும். சிலருக்கு சாதாரணமாக இருந்த நாட்களிலேயே செக்ஸ் மேல் பெரிய ஆர்வம் இருந்திருக்காது. ஆதற்கு அவருடைய கணவர்தான் முக்கிய காரணம். ஃ.போர்ப்ளே எனப்படுகிற தாம்பத்தியத்துக்கு முந்தின விளையாட்டுக்கள் பற்றியெல்லாம் தெரியாமல் தாம்பத்திய சுகம் பற்றிய உணர்வே இல்லாமல் இத்தனை காலமும் அதை ஒரு சுமையாகவும் வலியாகவும் பயம் தரக்கூடிய நிகழ்வாகவுமே நினைத்தவர்கள் இப்போது மிகப் பெரிய விடுதலையை அடைந்து விட்டதாகவே நினைப்பர்கள். இனி கணவரிடம் சொல்வதற்கு ஒரு சாக்குக் கிடைத்துவிட்டது என்று சந்தோஷப்படுவார்கள். இவர்கள் தாம்பத்தியத்தை மன ரீதியான சந்தோஷமாக உணரவே முடியாமல் போனவர்கள். இவர்களுக்கு கவுன்சிலிங் கொடுத்து இனியும்கூட சந்தோஷத்தை உயரச் செய்ய முடியும்.

இன்னொரு விதத்தினர் மனதில் ஆர்வமிருந்தாலும் பல வருடங்களாகிவிட்டதால் ஒரேமாதிரியான விதத்தில் தாம்பத்தியமிருப்பதால் போரடித்துப்போய் சுவாரஸ்யம் காட்டமாட்டார்கள். வருடம் ஒருமுறை வெளியூருக்குப்போவது விதம் விதமான ஃ.போப்ளேயில் ஈடுபடுவது. உறவுக்கான பொசிஷன்களை மாற்றுவது போன்றவை இவர்களை கடைசிவரைக்கும் சந்தோஷமான தாம்பத்திய வாழக்கையில் வைத்திருக்கும்.

இனி உடல்ரீதியான பிரச்சனைகளைப் பார்க்கலாம். முதலாவது வெஜைனிஸ்மஸ்

பெண்ணுறுப்பு வறண்டு போனதால் தாம்பத்தியத்தின்போது திடீரென்று பயங்கரவலி இருந்திருக்கும் இவர்களுக்கு. இரண்டாவதுமுறை அப்படி வலித்து விடுமோஎன்கிற பயத்தில் பெண்ணுறுப்பின் சதையைக் கையால் இறுக்கப் பிடித்துக் கொள்வார்கள். இவர்கள் இதனால் உறவு சாத்தியமற்றுப் போய்விடும். கை வலி

எண்ணெகைத் தடவுவார்கள். இது ரொம்பத் தப்பு. ஏற்கெனவே இருக்கிற பிரச்சனை போதாதென்று புதிதாக இன்.ஃ.பெக்ஷனை ஏற்படுத்திவிடும் இந்த சுய மருத்துவம்.

முன்றாவது உடல்நலமில்லாததால் ஏற்படுகிற ஈடுபாடின்மை ஏற்கெனவே உடல் வலி மூட்டு வலி என்று சிரமப்படுகிறவர்களுக்கு மனதில் ஆர்வம் இருந்தாலும் வலிகளால் உடலில் ஆர்வம் இருக்காது. இப்படியே ஈடுபடாமல்விடும் போது பெண்ணுறுப்பு சுருங்கிப்போகும். பிறகு நினைத்தால்கூட தாம்பத்தியத்தில் ஈடுபடவே முடியாமல் போகலாம். இந்த நிலைவரை விடாமல் உடனடியாக மருத்துவரை அணுகி சிகிச்சை பெறவேண்டும்.

மெனோபாஸ் என்பதைப் பல பெண்கள் தாம்பத்தியத்துக்கான முற்றுப்புள்ளி என்று நினைத்துக் கொள்கிறார்கள். இது தவறு. இது குழந்தைப் பிறப்புக்கான முற்றுப் புள்ளிதானே தவிர தாம்பத்தியத்துக்கானதல்ல. சொல்லப்போனால் மெனோபோஸுக்குப் பிறகு முன்னைவிடவும் அதிகமாக தாம்பத்திய சந்தோஷத்தை அனுபவிக்கிறவர்களும் உண்டு. வாக் போவது. யோகா செய்வது. சரிவிகித உணவு சாப்பிடுவது. எந்த வலியையும் அலட்சியம் செய்யாது உடனடியாக உடலுக்கு முக்கியத்துவம் தருவது. முழு உடல் பரிசோதனைகளைச் செய்வது இவற்றைத் தொடர்ந்து செய்தாலே கடைசி வரையிலும் இயல்பான சந்தோஷமான தாம்பத்தியம் எல்லோருக்குமே சாத்தியம் தான் என்கிறார் டாக்டர் நாராயணரெட்டி.

**இதயத்திற்கு இதமானது எது?**

இந்த உலகத்தில் அம்மாவின் இதயத்தை விட இனிமையானது எதுவுமே இல்லை என்பார்கள். அம்மாதான் மொத்தக் குடும்பத்தையும் பாதுகாப்பவர். அவருடைய இதயம் ஆரோக்கியமாக இருந்தால்தான் குடும்பம் சந்தோஷமாக இருக்கும்.

இந்த அம்மாக்கள்தான் எதைப்பற்றியும் கவலைப்படாமல் இருக்கிறார்கள் என்றால் பிள்ளைகள் அவர்களை அப்படியே விட்டுவிடக் கூடாது. தன்னுடைய உடம்புக்கு ஏதேனும் வந்தால் வற்புறுத்தி வலியுறுத்தி மிரட்டியாவது மருத்துவரிடம் அழைத்துப் போகும் அம்மாவை அதே முறையில் ரெகுலர் செக்கப்புகளுக்கு அழைத்துச் செல்வது ஒவ்வொரு பிள்ளையின் கடமை. ஏன்கிறார் டாக்டர் ஆஷா குருமூர்த்தி.

மாதவிலக்கு ஏற்படும் காலகட்டங்களில் பெண்களாகிய நாம் கிட்டத்தட்ட எல்லா விதமான இதய நோய்களிலிருந்தும் பாதுகாக்கப்படுகிறோம். ஆந்த வகையில் மெனோபோஸ் சற்றுச் சிக்கலான பருவம்தான்.

சரியாக மெனோபோஸை அடைந்ததும் இதயநோய் ஏற்பட ஆணுக்கு இருக்கிற அதேயளவு ரிஸ்க் சமயத்தில் ஆணைவிடவும் இரண்டு மடங்கு ரிஸ்க் நமக்கு இருக்கிறது. திடீரென்று ஹார்மோன்கள் சுரக்காமல் போவதுதான் இதன் காரணம் என்கிறார் டாக்டர் ஆஷா.

நம் உடலில் சுரக்கின்ற விசேஷ ஹார்மோன்கள்தான் நம்மை ஆணைவிடவும் வலிமைமிக்கவர்களாக வைத்திருக்கின்றன. ஆவாகளை விடவும் வலி தாங்குகிறோம். வீடு அலுவலகம் என்று இரண்டையும் அநாயாசமாகக் கையாளுகிறோம். ஆனால் இதிலும் ஒரு விநோதமிருக்கிறது. இயற்கையாக இந்த ஹார்மோன்கள் சுரக்கும்போது அவை இதயநோயைத் தள்ளி வைக்கின்றன.

மாதவிலக்கு வரும் காலத்தில் இந்த விஷயங்களில் கவனம் தேவை. சும்மா எதற்கெடுத்தாலும் மாதவிலக்கைத் தள்ளிப்போட ஹார்மோன் மாத்திரை சாப்பிடக்கூடாது. அதேபோல க்ப்பத் தடைக்கும் மாத்திரை தவிர்த்து மற்ற வழிகளை முயற்சிக்கலாம்.

மெனோபோஸ் சமயத்தில்தான் முன்பு எடுத்த ஹார்மோன் மாத்திரைகளின் தாக்கங்கள் தெரியும். அப்படியெனில் மெனோபோஸுக்குப் பிறகு ஹார்மோன் ரீப்ளேஸ்மெண்ட் தெரபி

( 24 பக்கம் பார்க்கவும் )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(23ம் பக்கத் தொடர்ச்சி )

**நாற்பதைக் கடக்கும்......**

எடுப்பதும் இதயத்துக்கு ஆபத்தை விளைவிக்குமா? என்றொரு கேள்வி உங்களுக்கு எழும்.

இல்லவே இல்லை. ஹேச். ஆர் டி. இதய நோயைத் தள்ளிப் போடும்.

ஏன்னங்க டாக்டர் குழப்புறீங்களே. என்கிறீர்களா? முன்பு எடுத்தது ஏற்கெனவே இருக்கிற ஹார்மோனுடன் கூடுதலாக இப்போது எடுப்பது இல்லாத ஹார்மோனை ஈடுசெய்ய.

ஹார்மோன் இல்லாததால் தான் இதயநோய்க்கான வாய்ப்பு அதிகரிக்கிறது. ஈடுசெய்வதால் அந்த வாய்ப்புக் குறைகிறது. வெளிநாட்டவர்கள் மெனோபாஸ் நிலையில் பதறியடித்துப் போய் ஹெச். ஆர். டீ. சிகிச்சைக்கு ஓடுவது இளமைத் தோற்றம் தர மட்டுமல்ல. இதய நோயைத் துரத்தவும்தான்.

இதய நோயைத் துரத்த வேறு என்னவெல்லாம் செய்யலாம்.

தினம் தினம் கண்டிப்பாக 15 நிமிடமாவது நடக்க வேண்டும். வெளியில் போய் நடக்கச் சங்கடமெனில் வீட்டுலெயெ ட்ரெட் மில் வாங்கி வைத்து நடக்கலாம். சாப்பாட்டு முறையையே மாற்ற வேண்டும். முன்னே சாப்பிட்ட அதே அளவுதான் இப்பவும் சாப்பிடுறேன். திடீரென ஏன் குண்டானேன்? என்பாகள் சிலர். முன்பு செரித்த அளவுக்கு இப்போது செரிப்பதில்லை என்பதுதான் காரணம்.

சுலபமாக செரிக்கக் கூடிய பச்சைக் காய்கறிகள் பழங்களை உணவில் சேர்க்க வேண்டும். ∴பாஸ்ட் ∴புட் கடைகளுக்குப் போவதை முற்றிலும் தவிர்க்க வேண்டும். எண்ணெயில் மூழ்கடிக்கப்பட்டு பொரித்தெடுத்த ஐட்டங்களை மறக்க வேணடும்.

அப்புறம் மிக முக்கியமானது டென்ஷனுக்கு பை(டிலநு) சொல்ல வேண்டும். இந்தச் சமயத்தில் சின்ன விஷயத்திற்கெல்லாம் பெரிதாகக் கோபம் வரும். பி பி அதிகரிக்கும். இதைக் கட்டுப்படுத்த யோகா மெடிட்டேஷன் செய்யலாம். இவை மனதிற்கு அமைதி தருகின்றன. எக்கச் சக்கமாகத் துடிக்கிற இதயத்தை கொஞ்சம் ரிலாக்ஸ் பண்ணிக்கோப்பா என்று கட்டுப்படுத்துகின்றன இவை.

சரி.. இதயத்தில் பிரச்னை ஏற்பட்டால்தான் என்ன? இப்போதெல்லாம் பைபாஸ் சர்ஜரி என்பது மிகச் சாதாரண விஷயமாகிவிட்டதே என்கிறீர்களா?

அது ஆண்களுக்கு. இயல்பாகவே அவர்களுக்கு பைபாஸ் செய்யப்படுகிற சத்த நாளம் பலமாக இருக்கிறது. பெண்களுக்கு இது ரொம்ப வீக். இதனால். பைபாஸ் ஆண்களுக்கு ரொம்பச் சாதாரணமாகிவிட்டாலும் பெண்களைப் பொறுத்தவரையில் அது இன்னமும் சற்று சீரியஸ் ரகம்தான். வருமுன் காப்பது எப்போதுமே நல்லது. அதிலும் பெண்களின் இதய விஷயத்தில் ரொம்ப ரொம்ப நல்லது. என்கிறார் ஆஷா.

**வரும் முன் காப்போம்.**

மூாதவிலக்கு முற்றிலும் நின்றுபோன பிறகு திடீரென்று ஒரு வருடம் கழித்து ரத்தப்போக்கு இருந்தால் அது கேன்சர் முற்றிய நிலையாக இருப்பதற்கான வாய்ப்பு மிக அதிகம். ஆதனால்தான் மெனோபாஸ் நிலையில் சில பரிசோதனைகளைச் செய்ய வேண்டியதும் அவசியம் என்கிறார் டாக்டர் செல்வி ராதாகிருஷ்ணா.

மேமோகிர∴பி வெஜினல் அல்ட்ராசவுண்ட் எனப்படுகின்ற பிறப்புறுப்பில் ஸ்கேன் செய்வது பாப்ஸ்மெர் டெஸ்ட் இந்த மூன்றும் அத்தியாவசியப் பரிசோதனைகள். ஓவ்வொன்றாகப் பார்க்கலாம்.

மேமோக்ரா∴பி மார்பகப் புற்றுநோய் இருக்கிறதா என்று பார்ப்பதற்கான பரிசோதனை. வருஷா வருஷம் ஒரே நிலையத்தில் இதைச் செய்ய வேண்டியதும் ஒவ்வொரு வருடத்திற்கான ரிசல்ட்டுகளையும் பத்திரமாகப் பாதுகாக்க வேண்டியதும் அவசியம்

இது தவிர மார்பகங்களில் கட்டி இருக்கிறதா என்று பார்ப்பதற்கான சுய பரிசோதனையையும் தவறாமல் மாதாமாதம் மேற்கொள்ள வேண்டும்.

இரண்டாவது பரிசோதனை வெஜினல் அல்ட்ராசவுண்ட். இது எதற்குப் பயன்படுகிறதென்று பார்க்கலாம்.

கர்பப்பையின் உள்ளே இருக்கின்ற எண்டோமெட்ரியம் தான் மாதவிலக்காக வெளிப்படுகிறது. மெனோபோஸுக்குப் பிறகு இந்த எண்டோமெட்ரியம் வளர்வதில்லை. மாதவிலக்கும் ஆவதில்லை. இது சாதாரணம்.

சிலருக்கு மெனோபோஸுக்குப் பிறகும் இந்த எண்டோமெட்ரிகத்தின் வளர்ச்சி இருக்கும். ஆனால் மாதவிலக்கு ஏற்படாது. இப்படி வளர்ச்சியடைகிற எண்டோமெட்ரியம் எண்டோம்டெரியல் கேன்சராக மாறுவதற்கான வாய்ப்பு மிக மிக அவசியம்.

இந்த வளர்ச்சியை டக்கென்று காட்டிக் கொடுத்துவிடும் வெஜினல் அல்ட்ராசவுண்ட்.

இந்த வளர்ச்சி இருப்பது கண்டுபிடிக்கப்பட்டால் எண்டோமெட்ரியத்திலிருந்து கொஞ்சம் வெட்டி எடுத்து பயாப்ஸிக்கு அனுப்புவார்கள். கேன்சராக இருக்குமோ என்று பார்க்க. கேன்சராக இல்லாவிட்டாலும்கூட இதை அகற்றி விடுவதும் தொடர்ந்து சிகிச்சை எடுப்பதும் அவசியமானது.

**அடுத்தது பாப்ஸ்மெர் டெஸ்ட்**

இதில் பிரமாதமான விஸயம் என்ன தெரியுமா? கேன்சரை மிக மிக ஆரம்ப நிலையிலேயே கண்டறிய உதவுவதுதான். இதனால் கேன்சரை முற்றிலும் குணப்படுத்தல் சுலபம். முப்பதாவது வயதிலிருந்தே இந்த டெஸ்ட் செய்து பார்க்க வேண்டியது அவசியம். குறைந்த பட்சம் இந்த மெனோபாஸ் நிலையிலாவது செய்வது மிக மிக அவசியம்.

இன்னொரு முக்கியமான விஷயம். ஹேச். ஆர். டீ. எடுக்கிறவர்கள் கேன்சர் விஷயத்தில் கவனமாக இருக்க வேண்டும். இவர்களுக்கு கேன்சர் வருவதற்கான சாத்தியம் உண்டு. அதற்காக ஹெச். ஆர். டீ. எடுக்கவே கூடாது என்று அர்த்தமில்லை. நம் ஊரில் ஒரு வழக்கம் இருக்கிறது. ஐம்பது வயதில் எடுக்கிற ஹெச். ஆர். டீ. மாத்திரைகளை அடுத்த ஐந்து வருடங்களுக்கு டாக்டரின் ஆலோசனையின்றி சாப்பிடுவார்கள். இது தவறு. ஆறு மாதங்களுக்கொருமுறை டாக்டரைச் சந்தித்து அவர் அனுமதியுடன் எடுத்தால் ஒரு பிரச்சனையுமில்லை.

**கூடாகும் எலும்பு**

மெனோபாஸ் பருவத்தில் அடியெடுத்து வைக்கும் பெரிமெனோபாஸ் நிலையில் இருப்பவர்கள் கண்டிப்பாக ஆஸ்டியோபெரோஸிஸ் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும். நமது உடலில் இரும்புபோல உறுதியாக இருக்கும் எலும்புகள் உறுதியிழந்து பேப்பர் சுருள் போல மாற ஆரம்பிப்பதுதான் ஆஸ்டியோபெரோஸிஸ் என்கிறார் டாக்டர். சுலபமா சௌந்தரபாண்டியன்.

இதனால் பாதிக்கப்பட்டவர்கள் கொஞ்சம் அழுத்தமாகக் கையூன்றி எழுந்தாலே மணிக்கட்டு எலும்புகள் முறிந்துவிட வாய்ப்பு உண்டு. அவ்வளவு ஏன்? ஆட்டோவில் சென்றால் அதன் குலுக்கலிலேயே இடுப்பு எலும்பும் முதுகெலும்பும் முறிந்து விடலாம் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்.

ஆண்களுக்கும் வரும் என்றாலும் இது பெண்களைத்தான் அதிகமாகக் குறிவைத்துத் தாக்குகிறது. அதிலும் குறிப்பாக மெனோபாஸ் நிலையையடைந்து விட்ட நால்வரில் ஒருவர் இந்நோயால் பாதிக்கப்படுகிறார்கள்.

ஆஸ்டியோபொரோஸிஸ் பற்றி இங்கே விரிவாக விளக்குகிறார் டாக்டர் சௌந்தர பாண்டியன்.

நம் உடல் எலும்பு தேநடை மாதிரியான ஒரு அமைப்பில் இருக்கிறது. புரோடினால் ஆன தேனடை என்று சொல்லலாம். தேனீக்கள் தேனடையின் ஒவ்வொரு இடைவெளியிலும் தெனைச் சேகரித்து வைப்பதுபோல நம் உடம்பில் சேர்கிற மொத்தக் கல்சியமும் இந்தப் புரோடடீன் தேனடையின் இடைவெளியில் தான் சேகரித்து வைக்கப்படுகிறது. அங்கு கால்சியமும் சேர்ந்திருக்கும்போது எலும்பு உறுதியாக இருக்கும். அந்தக் கல்சியம் நம் உடம்பின் தேவைக்கேற்ப கொஞ்சம் கொஞ்சமாக ரத்தத்தில் கலக்கும்போது எலும்பில் இருக்கும் கல்சியமும் மெதுமெதுவாகக் குறைந்து உள்ளே வெறும் கூடாக எலும்பு மாறிப் போகிறது. ஆதனால் தான் சின்ன அதிர்வு என்றால்கூட அத்தனை பாதிப்பு.

இந்த ஆஸ்டியோபொரோஸிஸ் இளமையில் வருவதில்லை. காரணம் குழந்தை வளரும்போது அதன் உறுதியை ஈடுகட்டிவிடும். முப்பத்தைந்து வயதிற்குப் பிறகுதான் பிரச்சனைகள் ஆரம்பிக்கின்றன.

ஏனென்றால் அதன்பிறகுதான் நாம் உணவாக எடுத்துக்கொள்ளும் கல்சியத்தின் அளவு மெதுவாகக் குறைகிறது. இன்னொரு பக்கம் கல்சியத்தை எலும்பில் சேர்த்து வைக்க உதவும் ஹார்மோன்களின் சுரப்பும் குறைய ஆரம்பிக்கிறது. அதனால் இந்தப்பிரச்சனை இன்னும் கொஞ்சம் பெரிதாகிறது. வயதானவர்கள் கூன்போட்டு நடப்பது இதனால்தான். முதுகுத் தண்டு எலும்புகள் வலுவிழந்து கொஞ்சம் கொஞ்சமாக நுனியிலிருந்து நொறுங்கிக் கொண்டே வருகின்றன.

மெனோபோஸான பெண்களுக்கு இந்த நோய் அதிகமாக வரும். வயதாக ஆக இந்த நோய் தாக்கும் சந்தர்ப்பங்கள் அதிகரிக்கும். அதிலும் சில பெண்களுக்கு ஏற்கெனவே எலும்பு மென்மையாக இருக்கும். எலும்பு தன் எடையை இழக்கும்போது இன்னும் மென்மையாகி வலுவிழந்துவிடும்.

அதற்காக ஒல்லியாக இருக்கும் பெண்களுக்கு இந்த ஆபத்து இன்னும் அதிகம் என்று அர்த்தமில்லை. ஓல்லி எலும்புள்ளவர்கள் பார்க்க பருமனாகவும் இருக்கலாம். ஊடல் தோற்றத்தை வைத்து கணிக்க முடியாது. ஏக்ஸ்ரேயின் முலம்தான் கண்டுபிடிக்க முடியும்.

ஆஸ்டியோபொராஸிஸ் தாக்குதலுக்கு உள்ளாக சந்தர்ப்பம் இருக்கும் அடுத்த ரகத்தினர் அறுவை சிகிச்சை மூலம் கர்ப் பையுடன் ஓவரியையும் எடுத்த இளம் பெண்கள் பொதுவாக கர்ப்பப்பை நீக்கும்போது ஓவரியை எடுக்க மாட்டார்கள். காரணம் ஓவரியிலிருந்து தான் பெண்களின் ஹார்மோனான ஈஸ்ரோஜென் புரொஜெஸ்ட்ரோன் இரண்டும் சுரக்கின்ளன. ஓவரியை எடுப்பதன் மூலம் அந்த ஹார்மோன்களின் சுரப்பு தடுக்கப்படுகிறது.

இயல்பாகவே இந்த ஹார்மோன்கள் குறைவாகச் சுரக்கும் பெண்களும்கூட (மாதவிலக்கு மூன்று மாதம் ஆறு மாதம் என்று விட்டுவிட்டு வரும் பெண்கள்) இந்த நோயின் பிடிக்குச் ச் சுலபமாக ஆளாகிறார்கள். பாட்டியோ அம்மாவோ இந்நோயால் பாதிக்கப்பட்டிருப்பவர்கள் உணவில் தேவையான கல்சியம் சேர்காதவர்கள் வெய்யிலக்கே முகம் காட்டாதவர்கள் சாதாரண உடற் பயிற்சி கூட இல்லாமல் சும்மாவே உட்கார்ந்திருப்பவர்கள் போன்றவர்களுக்கும் இந்த ரிஸ்க் உண்டு.

இந்த நோய் தாக்குவது பெரும்பாலும் மெனோபாஸுக்குப் பிறகுதான் என்பதால் எலும்பு முறிவு ஏற்பட்டால் அந்த வயதில் எலும்புகள் திரும்ப ஒன்று சேர்வது கடினம். இளம் வயதில் எலும்பு முறிவு ஏற்பட்டு படுக்கையில் இருப்பவர்களைவிட இவர்கள் இன்னும் சீக்கிரமே படுக்கையைவிட்டு எழுந்து நடமாட முயற்சிக்க வேண்டும். இல்லாவிட்டால் நோயின் தீவிரம் அதிகமாகும். ஏந்த அளவுக்கு உடல் ஆரோக்கியமாக இருக்கிறதோ அந்த அளவிற்கு ஆஸ்டியோபொராஸஸின் தாக்கத்தைக் குறைக்க முடியும்.

இதை வரவிடாமல் தடுக்க கல்சியம் புரோட்டீன் கலந்த உணவுகளைத் தினமும் உணவில் சேர்க்க வேண்டும். மெனோபாஸான பெண்ணுக்கு ஒரு நாளைக்கு 1500 மி.லி. கிராம் கல்சியம் தேவை.

விட்டமின் டி மிக மிக முக்கியம். இதற்கு தினமும் மாலை நேரத்தில் வெயில் உடம்பில் படுமாறு ஒரு முறை நடப்பது நன்று.

ஊடற் பயிற்சிகள் செய்வதன் மூலம் உடலும் எலும்பும் வலுவேறும். சயிக்கிள் ஓட்டுவது பாட்மின்டன் டென்னிஸ் போன்ற விளையாட்டுக்களும் எலும்பின் அடர்த்திக்கு உரம் சேர்க்கும். காலசிடொனின் என்ற ஹார்மோன் எலும்பின் அடர்த்திக்கு உதவுகிறது. இது ஊசியாகவும் மூக்கினால் உறிஞ்சக்கூடிய வகையில் மருந்தாகவும் கிடைக்கிறது.

எல்லா முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மீறி ஆஸ்டியோபொராஸிஸ் வந்தேவிட்டால் கல்சியம் பரோட்டீன் நிறைந்த சாப்பாடு உடற்பயிற்சி மாலை வெயில் என்று அனைத்து விஷயங்களையும் தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டும். கல்சியம் பற்றாக்குறை ஏற்படும் என்ற வகையில் கல்சியம் மாத்திரைகளையும் விட்டமின் டி மாத்திரைகளையும் மருத்துவரின் ஆலோசனையோடு சாப்பிடலாம்.

இதுதவிர ஈஸ்ட்ரோஜன் ரீப்ளேஸ்மெண்ட் தெரபியையும் எலும்பின் அடர்த்தியை அதிகரிக்கவென்றே இருக்கிற சிறப்பு மருந்துகளையும் எடுத்துக்கொள்ளலாம்.

இந்த நோய் வருவதற்கு முன்பே கண்டுபிடிக்க முடியாதா என்று கேட்டால் முடியும். செலவு குறைந்த சுலபமான விஷயம் இது. எக்ஸ்ரே மூலம் எலும்பின் அமைப்பு எப்படி இருக்கிறது என்று எலும்பு நோய் சிகிச்சை நிபுணரால் ஓரளவு கண்டுபிடிக்க முடியும். அதில் கண்டுபிடிக்க முடியாத பட்சத்தில் டெக்ஸா(DEXA) எனப்படுகிற ஒருவகை சிறப்பு டெஸ்ட் செய்து தெரிந்து கொள்ளலாம்.

ஆல்ட்ரா சவுண்ட் சி.டி.ஸ்கேன் போன்றவற்றாலும் இந்த நோயைக் கண்டுபிடிக்க முடியும். இந்தப் பரிசோதனை முறைகள் வலியோ பக்க விளைவுகளோ இந்லாதவை. ஏதிர்காலத்தில் ஆஸ்டியோபொராஸிஸ் தாக்கும் வாய்ப்பு எவ்வளவு இருக்கிறது என்பதைத் துல்லியமாகக் கணித்துச் சொல்பவை.

மெனோபாஸுக்குப் பிறகு இவற்றை வருடம் ஒரு முறை செய்து வந்தால் ஆஸஷடியோபொராஸிஸா அப்படியென்றால்? என்று கேட்கலாம்.

**உணவே மருந்து**

கல்சியம் இல்லாததால் என்னென்ன பிரச்சனைகள் என்று பார்த்தோம்.

சுரியான உணவுப் பழக்கம் இருந்தாலே எந்தப் பிரச்சனையும் வராமல் பாதுகாக்க முடியும் என்கிறார் நியுட்ரிஷியன் ஜோத்ஸ்னா ரஜ்ஜா.

பிரிமெனோபோஸ் சமயத்தில் இருந்தே தினமும் உணவில் 600 மி.லிட்டர் தயிர் சேர்த்து வர வேண்டும். பாலை விடவும் தயிரில்தான் அதிக கால்சியம் இருக்கிறது. கொழுப்புச் சத்து நீக்கப்பட்ட பாலாலான தயிர்தான் சேர்க்க வேண்டும். அல்லது தயிரில் உள்ள கொழுப்பு எலும்பின் மேல் எடையாகச் சேரத் தொடங்கி வேறு பிரச்சனைகளில் கொண்டுபோய் விட்டுவிடும். தயிருடன் பாலும் ஒருநாளுக்கு 300 மி.லிட்டர் சேர்க்க வேண்டும். இதோடுகூட சீஸ் பன்னீர் பால்கோவா நெல்லிக்காய் போன்றவையும் சாப்பிடலாம்.

எள் நிறையச் சேர்க்கலாம். வெள்ளை கறுப்பு இரண்டு எள்ளிலுமே கல்சியம் மெக்னீசியம் இரும்புச் சத்துக்கள் உள்ளன. கறுப்பு வெள்ளை எள் இரண்டையும் சம அளவு கலந்து பொடி செய்து தினமும் மதிய இரவு உணவின்போது ஒரு டீஸ்பூன் சேர்த்து வந்தால் ஹார்மோன்களால் உடல் இழக்கின்ற சத்துக்களை இது ஈடு செய்யும்.

ரத்தக் கொதிப்பு சர்க்கரை கொழுப்புச் சத்து இருக்கிறவர்களும் எள் சாப்பிடலாம். இதில் இருப்பது ஈ.எஸ். ஏ எனப்படுகிற எஸன்ஷியல் ∴பேட்டி ஆசிட்தான்.

பச்சைக் காய்கறிகளும் பழங்கயும் எக்கச்சக்கம் சேர்க்க வேண்டும். அளவோடு சோயா சேர்க்கலாம். இது ஈஸஷட்ரோஜன் ஹார்மோனின் குறைவை ஈடுசெய்யும். ஐகக்குத்தல் அரிசி மற்றும் முழு கோதுமை மாவாலான உணவைச் சாப்பிடுங்கள்.

பூசணி வெள்ளரி தர்புசணி போன்றவற்றின் விதைகளையும் உணவில் சேர்க்க வேண்டும். விட்டமின் ஈ இருக்கின்ற டானிக்குகள் மீன் சேர்க்க வேண்டும்.
வெற்றிலை பாக்கு போடுவதின் மூலம் சுலபமாக கல்சியம் கிடைக்கும்.

அடுத்தது வாக்கிங் தொண்ணூறு சதவிகித வியாதிகளை அண்டவே விடுவதில்லை வாக்கிங். நானெல்லாம் வீட்டிலேயே அங்கும் இங்குமாக நடந்துகொண்டே தான் இருக்கிறேன். ஏன்று சொல்கின்றவரா நீங்கள்? ஒரு நிமிஷம் தயவுடன் ஒரு நாளைக்கு எட்டாயிரம் முதல் பத்தாயிரம் அடிகள் மிக வேகமாக நடப்பதுதான் சரியான பயிற்சி. இப்போது யோசியுங்கள். வீட்டுக்குள் நீங்கள் எத்தனை அடிகள் நடக்கிறீர்கள்? நடக்க ஆரம்பியுங்கள். சந்தோஷமாக அமைதியாக சிரித்த முகத்துடன் மெனோபோஸை வரவேற்கும் உற்சாகத்தை அந்த நடையும் நீங்கள் சாப்பிடுகிற உணவும் தரும்.

**தொகுப்பு தயாமலர் ஜி. கோமளா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நல்ல முத்தும் நத்தையும்

- பொறையாறு கணேசன்

எல்லாவிதமான வசதிகளும் நிறைந்த ஒரு ஊர் என்றால் அது நல்லூர்தான். அங்குள்ள பள்ளி ஒன்றில் நல்லமுத்து என்பவன் படித்து வந்தான்.

அவன் பெயர்தான் நல்லமுத்துவே தவிர, அந்தப் பெயருக்கும் அவனுக்கும் கொஞ்சமும் சம்பந்தம் இல்லை என்றே சொல்ல வேண்டும்.

வகுப்பிலேயே ஒரு வடிகட்டிய மடையன் யார் என்றால் அவனேதான். இதற்குக் காரணம் என்னவென்றால் பள்ளியில் மட்டுமல்ல வீட்டிலும் கூட பாடப்புத்தகங்களைக் கண்ணெடுத்துப் பார்ப்பதில்லை அவன்.

நல்லமுத்துவுக்கு ஆண்டவன் நல்ல அறிவை அளித்திருந்தும் கொஞ்சம் கூட உழைக்காமல், உருப்படாமல் போனான். அவனது சோம்பலே அவனுக்கு முழுமுட்டாள் என்ற பட்டத்தை அவன் கழுத்தில் கட்டித் தொங்கவிட்டு விட் டது. உடன் பயின்ற பிள்ளைகள் அவனை ஒரு பொருட்டாக மதிப்பதே இல்லை.

ஆசிரியர்கள் எத்தனை வழிகளில் புத்திமதிகளை எடுத்துக் கூறியும், நல்ல முத்துவோ கடுகளவும் திருந்தியதாகத் தெரியவே இல்லை.

ஆண்டுத்தேர்வு நெருங்கியது.

மாணவ-மாணவிகள் அனைவரும் இரவும் - பகலும் இடையறாது படித்தனர். கண் விழித்துப் படித்துக் கொண்டிருக்கும் அந்த நேரத்திலும் நல்ல முத்துவோ, செல்லமுத்துவாகக் காலத்தைக் கழித்தான்.

ஒருநாள் காலை.

நல்லமுத்து கண் விழித்துப் படுக்கையை விட்டு எழுந்து வந்து சோம்பல் முறித்தபடி கண்ணைக் கசக்கிக் கொண்டு நின்றான்.



அவன் தாயார் அவனைப் பார்த்து, ஹஹஏண்டா... முத்து பரீட்சை வருதே... இப்பவாவது புத்தகத்தை கையில் எடுத்துக் கொஞ்சம் பார்க்கக்கூடாதா? ஹகாலைப் படிப்பு ஒரு மாதப் படிப்பு"ன்னு பெரியவங்க சொல்லுவாங்க... அதெல்லாம் எங்க ஒனக்குத் தெரியப் போகுது..."" என்று மகனைக் கோபித்துக் கொண்டாள்.

தன் தாய் சொன்னதை ஒரு காதில் வாங்கி மறு காதில் விட்டு விட்டு பல் துலக்க வீட்டுத் தோட்டத்தை நோக்கிச் சென்றான் நல்லமுத்து.

கிணற்றடியில் நின்று பல் தேய்த்துக் கொண்டிருந்த அவன் தோட்டத்தின் ஒரு பக்க மூலையில் நத்தை ஒன்று ஊர்ந்து வருவதைக் கண்டான். அடுத்தகணமே அவன் பார்வை வேறு பக்கம் சென்றது. இவ்வாறு நோட்டம் விட்ட பின் அந்த நத்தையைப் பார்க்க... அங்கே அந்த நத்தை காணப்படவில்லை. வியப்புடன் அவன் சுற்று முற்றும் பார்த்தபோது அவனது காலுக்கு அருகில் அந்த நத்தை ஊர்ந்து கொண்டிருந்தது. இது அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. யோசித்துப் பார்த்த போது அவனுக்கு அது ஒரு நல்ல படிப்பினையைப் போதித்தது.

இவ்வளவு சிறிய நத்தை மெதுவாக ஊர்ந்து இவ்வளவு தூரத்தை கடக்க முடிகிறபோது, புத்தியுள்ள நான் ஏன் தினம் தினம் சிறிது சிறி தாகப் படித்துக் கல்வியில் முன்னேற்றம் காண முடியாது என்று எண்ணினான்.

நத்தையின் மூலம் நல்லதொரு முடிவெடுத்து அன்று முதல் ஊக்கத் தோடு உற்சாகமாகக் கற்றுத் தேர்வுகளில் அதிகமான மதிப்பெண்கள் எடுத்து கல்வியில் தேர்ச்சி மிக்கவனாய் சிறந்து விளங்கினான் நல்லமுத்து.

## பேப்பர் கிளிப்

யூரேகா

ஒன்றுக்கு மேற்பட்ட தாள்களை ஒன்றாக கோர்க்க பயன்படும் ஒரு சிறிய சாதனம் தான் பேப்பர் கிளிப். (தாள் மாட்டி என்று தமிழில் சொல்லலாம்.) பள்ளி, கல்லூரி மற்றும் அலுவலகங்களில் அன்றாடம் பயன்படுத்தும் பொருள் இது. ஆனால் இதன் வரலாறு தெரியுமா, நமக்கு? அதைத்தான் இந்த வார யுரேக்கா பகுதியில் பார்க்கப் போகிறோம்.

13-ம் நூற்றாண்டு காலத்தில் இன்றைய பேப்பர் கிளிப் கண்டு பிடிப்பதற்கு முன்னர் ரிப்பனை பயன்படுத்தினர். தாட்களின் இடது புற மேல் முனையில் சிறு துவாரம் போட்டு, ரிப்பன் போன்ற கயிற்றால் கட்டிக் கொண்டனர். அதன் பரிணாம வளர்ச்சியாக, மெழுகு தடவப்பட்ட கயிறு பயன் படுத்தப்பட்டது. அந்த முறை அடுத்த 600 வருடங்களுக்கு நடைமுறையில் இருந்தது.





1835-ல், நிஹயார்க்கை சேர்ந்த மருத்துவர் ஜான் அயர்லாண்ட் ஹாவ் நேரான ஊசிகளை தயாரிக்கும் எந்திரத்தை கண்டுபிடித்தார். அதிலிருந்து தாள் மாட்டியாக ஊசிகளும் உதவின. ஆனால் ஊசி வடிவமைக்கப்பட்ட நோக்கமே தையலுக்காக.

ஜான் வேலர் என்ற நார்வே நாட்டுக்காரர் தான் 1899-ல் பேப்பர் கிளிப்பை கண்டுபிடித்தார். அதற்கான காப்புரிமையை அதே ஆண்டு ஜெர்மனியில் இருந்து பெற்றார். ஏனெனில், அப்போது நார்வேயில் காப்புரிமை சட்டங்கள் இல்லை. எலக்ட்ரானிக்ஸ், அறிவியல் மற்றும் கணிதத்தில் பட்டம் பெற்றவர் ஜான் வேலர். தாள் மாட்டியை கண்டுபிடித்த போது, அவர் உள்ளூரில் உள்ள ஒரு கண்டுபிடிப்பு நிறுவனத்தில் வேலை பார்த்து வந்தார். 1901-ல் நவீன பேப்பர் கிளிப் கண்டுபிடிப்புக்கான காப்புரிமையை அமெரிக்காவில் பெற்றார். வயரின் கம்பித்துண்டு போன்ற ஒரு உலோகத்தால் உருவாக்கப்பட்டிருந்த அந்த கிளிப் முக்கோணமாகவும், செவ்வகமாகவும் வளைக்கப்பட்டு இருந்தது. அதன் முடிவு பாகங்கள் மனித நாக்கு போல அமைந்திருந்தது. இன்றைய பேப்பர் கிளிப்புகளின் ஆரம்பம் அது தான். நவீன பேப்பர் கிளிப்புக்கான காப்புரிமை பெற்ற முதல் நபர் ஜான் வேலர்.

அமெரிக்க கண்டுபிடிப்பாளர் கார்னிலியஸ் ஜே.பிராஸ்னன் ஒரு வகை பேப்பர் கிளிப்புக்கான காப்புரிமைக்காக 1900-ம் ஆண்டு பதிவு செய்தார். அவர் தன் கண்டுபிடிப்பை ஹகோனாகிளிப்" என அழைத்தார். அந்த வகை கிளிப்புகளை இங்கிலாந்தின் ஜெம் மேனுபாக்சரிங் லிமிடெட் என்றொரு நிறுவனம் தயாரித்தது. இந்த நிறுவனம் தான் இரட்டை முட்டை வடிவ பிரபல பேப்பர் கிளிப்புகளை வடிவமைத்த முதல் நிறுவனம். இந்த வகை கிளிப்புகள் தான் இன்றும் ஜெம் கிளிப் என்ற பெயரில் குறிக்கப்படுகிறது.

## வார்த்தை விளையாட்டு

உங்கள் நேரத்தை பயனுள்ளதாக கழிக்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது வார்த்தை விளையாட்டு. இதன் மூலம் தமிழ் சொற்களை அதிகம் தெரிந்து கொள்ள முடியும். அருகே உள்ள கட்டங்களில் கொடுக்கப்பட்டுள்ள எழுத்துகளை எப்படியும் பயன்படுத்தலாம். ஆனால் குறைந்தது 15 தமிழ் வார்த்தைகளையாவது கண்டுபிடிக்க வேண்டும்.




(உதாரணமாக :கூட்டணி, ஆடு...) அதிக வார்த்தைகளை கண்டுபிடித்து எழுதுபவர்களுக்கு பரிசு $20.00 வழங்கப்படும் வி.டைகளை எழுதி தபால் கவரில் வைத்து 06.08-2004 முன்னர் அனுப்ப வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட வாசகர்கள் சரியான விடை எழுதி இருந்தால் அவர்களில் ஒருவர் குலுக்கல் முறையில் தெரிவு செய்ய படுவார்.ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது.

1252 Lawrence Avenue East
Unit 207
Toronto. ON. M3A 1C3
Tel: 416 385 2999
Fax: 416 385 9862

## தோற்கிறேன் தான்!

வேதா மகாலக்ஷ்மி

என் புன்னகையில் தான்
நீ தினமும் பூத்திருப்பாய் என்றறிந்தும்,
வெறுத்துப் பேசி வேடிக்கை பார்க்கும்
வேளை...
மனசுக்குள் ஜெயித்தாலும்,
உண்மையில்,
தோற்கிறேன் தான்...



தேய்ந்து மறையும் உன் கொலுசு
சத்தத்தை
காதுகளுக்குள்
தேக்கிடும்போதெல்லாம்!!!

என் சிறு பார்வை புரிதலுக்காய்
நீ காத்திருப்பாய் என்றறிந்தும்,
சொல்லாமலே கிளம்பும் வேளை...
மனசுக்குள் ஜெயித்தாலும்,
உண்மையில்,
தோற்கிறேன் தான்...
சட்டைப்பையில் உன் புகைப்படத்தை
பேருந்து நெரிசலில்,
பத்திரப்படுத்தும்போதெல்லாம்!!!

என் தொலைபேசி அழைப்பிற்காய்
நீ தவமிருப்பாய் என்றறிந்தும்,
பிடிவாதமாய் மறுத்து மடங்கும்
வேளை...
மனசுக்குள் ஜெயித்தாலும்,
உண்மையில்,
தோற்கிறேன் தான்...
உனக்குப் பிடித்த பாடலுக்கு மட்டும்
ஒலியைக் கூட்டி
வைக்கும்போதெல்லாம்!!!

உன் நினைவைக்கூட நிஜத்தில் மறுத்து
மனதை ஒருநிலைப்படுத்தி
படித்தபடியே தூங்கிப்போகும் வேளை...
தினமும் இரவில் ஜெயித்தாலும்,
உண்மையில்,
தோற்கிறேன் தான்...
ஒவ்வொரு அதிகாலையிலும், உன்
முகமாய்
என் வீட்டு ரோஜா
மலரும்போதெல்லாம்!!!

## கவிதைப் பொழில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கே விளம்பரம்
செய்ய அழையுங்கள்
416-385-2999




## 4 ஓட்டங்களால் இந்தியா இலங்கையை வென்றது

ஆசியக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் இலங்கையை ஒரு வழியாக வென்றுவிட்டது இந்தியா!. அது



ஏறக்குறைய பாகிஸ்தானுக்கு எதிரான ஆட்டம் என்றுதான் சொல்ல வேண்டும். காரணம், தோற்றால் பாகிஸ்தான் இறுதிச் சுற்றுக்கு முன்னேறிவிடும். இந்திய வீரர்கள் மூட்டை கட்ட வேண்டியிருந்திருக்கும்.

ஆனால், கொழும்பு பிரேமதாஸ ஸ்டேடியத்தில் செவ்வாய்க்கிழமை இரவு நடந்த மிகவும் பரபரப்பான ஆட்டத்தில் 4 ரன்கள் (ஒரு பவுண்டரிதான்!) வித்தியாசத்தில் வெற்றி பெற்று, அதே இலங்கையுடன் வரும் ஞாயிற்றுக்கிழமை மீண்டும் பலப்பரீட்சை நடத்த உள்ளது இந்தியா. இந் நிலையில் கடைசி ஓவரை ஜாகீர்கானுக்கு கங்குலி கொடுத்தது சரிதானா என்ற விவாதம் கிரிக்கெட் பண்டிதர்களிடம் மேலோங்கியுள்ளது.

நல்ல வேளையாக இந்தியா ஜெயித்துவிட்டது. இல்லையேல் கங்குலியின் முடிவு தவறே என்ற வார்த்தைகள் எட்டுத்திசைக்கும் ஒலித்திருக்கும். அதற்கு சரியான காரணமும் அந்த ஆட்டத்தில் இருந்தது. பதான், ஜாகீர், ஹர்பஜன், கும்ப்ளே ஆகிய ''பந்து வீச்சாளர்கள்'' எல்லாம் சோபிக்க முடியாமல் போகவே, ''பேட்ஸ்மேனான'' சேவாக், ஜயசூர்யா, தில்'ான், சங்கக்கார ஆகிய 3 முக்கிய விக்கெட்டுகளை வீழ்த்தி நாயகனாக ஜொலித்தார்.

ஆனால் அதையெல்லாம் ஏதோ ''சமயோசிதமாக'' மறந்துவிட்டார் போல கங்குலி. சச்சினுடன் ''சூடாக'' விவாதித்து முக்கியமான கடைசி ஓவரை ஜாகீர்கானுக்குக் கொடுத்தார். அப்போது இலங்கையின் வெற்றிக்கு 11 ரன்களே தேவையாக இருந்தது. ஆனால் கங்குலியின் நம்பிக்கையைப் பொய்யாக்காமல் பார்த்துக் கொண்டார் ஜாகீர் கான்.

ஜயசூர்யா ஆட்டமிழப்பே ஆட்டத்துக்கு திருப்புமுனையாக அமைந்தது என்பதை யாரும் மறுக்க முடியாது.

கடைசி ஓவரை சேவாக்குக்கு கொடுத்திருந்தால் நிலைமை கடுமையாக இருந்திருக்கும் இலங்கை வெற்றிகூட பெற்றிருக்கும் எனத் தெரிவித்துள்ளார் காப்டன் கங்குலி.

வெற்றிக்குப் பின்னர் அவர் கூறியுள்ளதாவது

அதுவரை சேவாக் சிறப்பாகவே வீசியிருந்தாலும், இக்கட்டான அத் தருணத்தில் அவரை பந்துவீசச் சொல்வது மிகவும் "ரிஸ்க்" ஆன செயல். சேவாக்கே இல்லாவிட்டாலும் வேறு யாராவது ஒரு ஸ்பின்னரை வீசச் சொல்லியிருந்தால் அவர்கள் வென்றிருப்பார்கள்.

என்றாலும் சேவாக்கின் ஆட்டம் வெற்றிக்கு முத்திரை பதித்திருந்தது. 81 ரன்களைக் குவித்ததுடன் 9 ஓவர்களில் 37 ரன்களைக் கொடுத்து, 130 ரன்களைக் குவித்து மிரட்டிய ஜயசூர்ய உள்பட 3 விக்கெட்டுகளை வீழ்த்தியது மிகவும் பாராட்டுக்குரியது. இர்·பான் பதானும் அற்புதமாகவே பந்துவீசினார். வெற்றிக்குச் சாதகமில்லாத சூழலிலும் மிகச் சிறப்பாகப் பந்து வீசி எதிராளிகளைக் கட்டுக்குள் வைத்திருந்தார் அவர்.

இது ஒருபக்கம் இருந்தாலும், முரளீதரனும், சாமிந்த வாஸம் இல்லாதது எங்களது வெற்றிக்கு உறுதுணையாக இருந்தது. அதே போல லக்'மண் எங்கள் பக்கம் இல்லை. அவர் இறுதி ஆட்டத்துக்குத் தகுதி பெற்றுவிடுவார் என நம்புகிறோம் எனத் தெரிவித்துள்ளார் கங்குலி.

## பாக்கிஸ்தானிடம் இந்தியா தோல்வி

ஆசிய கிண்ண கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி முக்கியமான ஆட்டத்தில் பாகிஸ்தானிடம் 59 ஓட்ட வித்தியாசத்தில் தோற்றது. இந்த தோல்வியால் இந்திய வீரர்கள் கடுமையாக



விமர்சிக்கப்பட்டு வருகிறார்கள். தோல்வி குறித்து இந்திய அணித் தலைவர் கங்குலி கூறும்போது: இந்த தோல்வியால் இந்திய அணிக்கு கடுமையான நெருக்கடி ஏற்பட்டு உள்ளது என்பதை ஒப்புக்கொள்கிறேன்.

இந்த தோல்விக்கு ஆடுகளம் (பிட்ச்) காரணம் என்று குற்றம் சாட்ட விரும்பவில்லை. ஓட்டங்களை குவிக்க கூடிய அளவுக்கு ஆடுகளம் இருந்தது. 300 ஓட்ட இலக்கு என்பது சற்று கடினம்தான். ஆனால் எடுக்கக்கூடிய இலக்குதான். விக்கெட்டுகள் விழுந்ததால் இலக்கை நோக்கி முன்னேற முடியவில்லை. 151 ஓட்டங்களுக்கு 5 விக்கெட் விழுந்ததால் போனஸ் புள்ளி பெறும் வகையில் ஆட முடிவு செய்தோம். அதுவும் கூட கஷ்டப்பட்டுத் தான் கிடைத்தது. மோசமான பந்து வீச்சு மற்றும் களத் தடுப்பே தோல்வ ிக்கு காரணம். இந்தப் போட்டித் தொடரில் எங்களது ஆட்டம் மோசமாகவே உள்ளது. இந்த தோல்வியால் மனம் தளர்ந்து விடவில்லை. இறுதிப் போட்டிக்கு தகுதி பெற இன்னும் வாய்ப்பு இருக்கிறது.இலங்கைக்கு எதிராக சிறப்பாக ஆடுவோம். பாகிஸ்தான் வீரர் சொஹிப்மலிக் ஆட்டம் அபாரமாக இருந்தது.

இவ்வாறு கங்குலி கூறினார். வெற்றி குறித்து பாகிஸ்தான் அணித் தலைவர் இன்சமாம் கூறும்போது, இந்த வெற்றி மகிழ்ச்சி அளிக்கிறது. அதே நேரத்தில் போனஸ் புள்ளி பெற முடியாமல் போனது ஏமாற்றம் அளிக்கிறது.

இலங்கைக்கு எதிராக மோசமாக ஆடினோம். தற்போது வீரர்கள் சிறப்பாக ஆடுவது திருப்தியை தருகிறது என்றார். ஒரு நாள் போட்டியை பொறுத்தவரை இந்திய அணி 7 துடுப்பாட்ட வீரர்கள் 4 பந்து வீச்சாளர்களை கொண்டுதான் கடந்த காலங்களில் ஆடி வந்தது. ஆனால் நேற்றைய ஆட்டத்தில் 6 துடுப்பாட்ட வீரர்கள் 5 முதன்மை பந்து வீச்சாளர்கள் இடம்பெற்றது ஆச்சரியமான முடிவாகும். பதான், பாலாஜி, நெஹ்ரா, ஹர்பஜன்சிங், கும்ளே ஆகிய 5 முதன்மை பந்து வீச்சாளர்கள் இருந்தும் ஓட்ட வேகத்தை கட்டுப்படுத்த முடியவில்லை.

## டேவிட் பெக்கம் பயன்படுத்திய கால்பந்து 28,000 யூரோ



இங்கிலாந்து கால்பந்தாட்ட அணித் தலைவர் டேவிட் பெக்கம் யூரோ 2004 கால்பந்தாட்டப் போட்டியில் பயன்படுத்திய கால்பந்து 28,000 யூரோவுக்கு ஏலம் விடப்பட்டுள்ளது. பரபரப்பும் அதிர்ச்சிகளும் நிறைந்த யூரோ சாம்பியன் கிண்ணப் போட்டிகள் கடந்த சில வாரங்களுக்கு முன் போர்த்துக்கல்லில் நடைபெற்றன.இச் சுற்றுப் போட்டிக்கான காலிறுதியில் இங்கிலாந்துபோர்த்துக்கல் அணிகள் மோதின. பெனால்டி மூலம் கிரீஸிடம் அதிர்ச்சி தோல்வியை தழுவி போட்டித் தொடரிலிருந்து வெளியேறியது இங்கிலாந்து அணி.இந்த தோல்விக்கு இங்கிலாந்து அணித் தலைவர் டேவிட் பெக்கம் தனக்கு வழங்கப்பட்ட பெனால்டி வாய்ப்பை தவறவிட்டமையே காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அந்தப் போட்டியில் பெக்கம் பயன்படுத்திய பந்து நேற்று முன்தினம் ஏலம் விடப்பட்டது. இன்டர்நெட் மூலம் நடைபெற்ற இவ் ஏல விற்பனையில் கனடாவைச் சேர்ந்த ஒருவர் இப்பந்தை 28,000 யூரோக்களுக்கு ஏலம் எடுத்தார். இவரை விட அதிக விலைக்கு இருவர் ஏலம் எடுத்தனர்.ஆனால் இவர்களிருவரும் மோசடி செய்தமை பின்னர் கண்டு பிடிக்கப்பட்டமையால் கனடா நாட்டை சேர்ந்தவருக்கு பந்து வழங்கப்பட்டது. இதுவரை விலைபோன கால்பந்துகளில் அதிக விலைக்குப் போன கால்பந்து இது என்பது குறிப்பிடத்தக்கது.

## முன்னாள் கணவர் மீதுமரியன் ஜோன்ஸ் தாக்கு



அமெரிக்காவின் முன்னணி தடகள வீராங்கனை மரியன் ஜோன் ஸ், தனது முன்னாள் கணவரை கடுமையாக தாக்கி பேசியுள்ளார்.

அமெரிக்காவின் முன்னணி தடகள வீராங்கனை மரியன் ஜோன்ஸ் சிட்னியில் கடந்த 4 ஆண்டுகளுக்கு முன்பு நடந்த ஒலிம்பிக் போட்டியில் 100மீற்றர் மற்றும் 200மீற்றர் ஓட்டத்தில் தங்கம் வென்றார். ஆனால் அதே மாதம் ஏதென்ஸ் நகரில் [illegible] போட்டிக்கான 100மீற்றர் ஓட்டத்துக்கு மரியன் தகுதி பெறவில்லை. 200மீற்றர் மற்றும் நீளம் தாண்டும் போட்டியில் கலந்துகொள்ள மரியன் ஜோன் ஸுக்கு வாய்ப்பு கிடைத்துள்ளது. இந் நிலையில் ஊக்கமருந்து பயன்படுத்தியதால் தான் கடந்த ஒலிம்பிக்கில் மரியன் ஜோன்ஸ் தங்கப் பதக்கம் வென்றார் என்று அவரின் முன்னாள் கணவர் ஹண்டர் பேட்டி அளித்தார். தடகள வட்டாரத்தில் இது மிகப் பெரிய சர்ச்சையை கிளப்பி உள்ளது. வட்டு எறியும் வீரரான ஹன்டர் கடந்த ஒலிம்பிக் போட்டியின் போதுமரியனுக்கு சிறப்பு பயிற்சியாள ராகவும் இருந்தார்.

இதன் பின்னர் இருவரும் பிரிந்து விட்டனர். இதற்கு மரியனின் வழக்கறிஞர் பதில் அளித்துள்ளார். அவர் கூறுகையில், மரியன் ஜோன்ஸ் மீது வேண்டும் என்றே ஹன்டர்இந்த பழியை சுமத்தி உள்ளார். இதில் எந்த உண்மையும் கிடையாது. எதிரிகளின் தூண்டுதலால் அவர் அப்படி கூறி இருக்கிறார் என்றார் தடகள வீரர மொன்ட்கோமாரியுடன் வாழ்ந்துவரும் மரியன் கடந்த ஆண்டு ஒரு குழந்தையும் பெற்றுக்கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீ[redacted]
# உ[redacted]ல்?

### ஏன் இவை உங்களுக்குப் பொருந்தாது?

கனடாவிலுள்ள நால்வரில் ஒருவர் 65 வயதை அடையும்போது ஏதாவதொரு சிக்கலான வியாதியினால் பீடிக்கப்படுகிறார். ஒரு சிக்கலான வியாதியானது யாரையும் எப்போதும் தாக்கலாம். இவ்வாறானதொரு வியாதியிலிருந்து மீள்வதென்பது மிகவும் கடினமானதொரு செயற்பாடு. இதற்கான மருத்துவ சிகிச்சைகள் மற்றும் ஆரோக்கியத்தை மேம்படுத்தும் பயிற்சி முறைகள் பல மாதங்களுக்குத் தொடரலாம். இதன் அர்த்தம் நீங்கள் வேலைக்குச் செல்ல முடியாமல் ஏற்படலாம். உங்களது வருமானத்தில் ஒரு பகுதியோ அல்லது முழுவதையோ இழக்க நேரிடலாம். அத்தோடு உங்கள் செலவுகள் கூட வரம்புமீறிப் போகும் சாத்தியமும் உண்டு.

### அதற்கொரு தீர்வு உண்டு

சிக்கலான வியாதிகளுக்கான காப்புறுதி (Critical illness Insurance) இவ்வாறான செலவுகளை ஈடுசெய்யுமுகமாகவும் உங்கள் விருப்பத்திற்கேற்ப வைத்தியத் தேவைகளை முன்னெடுத்துச் செலவதற்காவும சிறப்பாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

### இது உங்களுக்கும் நடக்குமா?

75 வயதிற்கு முன்பு மரணத்தை எதிர்கொள்பவராகவும் ஏதாவதொரு சிக்கலான வியாதியைப் பெற்ற அதிலிருந்து மீட்சி பெறுபவர்களாகவும் மாறும் சாத்தியக்கூறுகள் உடையவர்களே நீங்கள் என்பது உங்களுக்குத் தெரியுமா? [1]

- 40 வீதமான ஆண்களும் 35 வீதமான பெண்களும் ஏதாவதொரு விதமான புற்றுநோயின் தாக்கத்திற்கு உள்ளாகிறார்கள். [2]
- இருதய சம்பந்தமான நோய் வந்தவர்களில் 80 வீதத்தினர் வைத்தியசாலைச் சிகிச்சைகள் மூலம் தேறினாலும் அவர்களில் 45 வீதத்தினரே மீண்டும் வேலைக்குச் செல்லும் நிலையை உடையவர்களாக இருக்கின்றனர்.
- 50 000 கனேடியர்கள் வருடாந்தம் பக்கவாத நோயின் தாக்கத்திற்கு உள்ளாகின்றனர். இவர்களில் 33 வீதத்தினர் 65 வயதிற்குக் குறைந்தவர்களாகும்.

இவ்வாறான சிக்கலான வியாதிக்குரிய காப்புறுதிப் பலனைப் பெறுபவர்களின் சராசரி வயதெல்லை 47 ஆகும். [3]

### இயலாமைக் காப்புறுதியுடன் (Disability Insurance) ஒப்பீடு

பின்வருவதை ஞாபகத்தில் கொள்ளுங்கள். சிக்கலான வியாதிகளுக்கான காப்புறுதியானது எவ்விதத்திலும் இயலாமைக் காப்புறுதியை ஒத்ததல்ல. இயலாமைக் காப்புறுதியானது நீங்கள் ஒரு சுகவீனத்தின் மூலமோ அல்லது விபத்தின் காரணமாகவோ சராசரியாக இயங்க முடியாதவராயின் தொடர்ச்சியான மாதாந்தக் கொடுப்பனவுகளையே மேற்கொள்ளும். ஆனால் சிக்கலான வியாதிக் காப்புறுதியானது முழுத்தொகையையும் ஒன்றாக வழங்கும். இது உங்கள் வீட்டை மறுசீரமைக்கவோ அல்லது இழந்த வருமானத்தைப் பிரதியீடு செய்யவோ அல்லது தற்காலிகமாகவுள்ள தனிப்பட்ட வியாபாரக் கடன்களை அடைப்பதற்கோ ஒரு விடுமுறையில் செல்வதற்கோ உதவும்.

**கிளாரிக்கா** வால் உங்களுக்கு உதவ முடியும். மேற்குறிப்பிட்ட இயலாமைக் காப்புறுதியானது எந்த வகையில் உங்கள் எதிர்காலத்திற்கு நிதிப் பாதுகாப்பிற்குரிய நம்பிக்கையாக இருக்கப் போகிறது என்பதை எங்களால் விளங்கப்படுத்த முடியும். எங்களை கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்தில் அழையுங்கள். விபரமாகப் பேசுவோம்.

**அழையுங்கள்: அஜித் சபாரட்ணம்**

[1] Heart and Stroke Foundation, 2001
[2] Canadian Cancer Society, 2000
[3] Munich Reinsurance Company, 2000

Copyright © 2001 Clarica Life Insurance Company. All rights reserved.



*Ajith Sabaratnam*
*Member, Million Dollar Round Table*
*Bus (416) 439 2800*
*Res. (905) 848-0080*
*Cell (416) 735-SABA (7222)*
*4 Robert Speck Parkway, suite 1200*
*Mississauga, ON L4Z 1S1*
*ajith.sabaratnam@clarica.com*

**CLARICA**
*Investment and insurance solutions - since 1870*

*life, health & disability insurance, savings and retirement plans, employee benefits, mortgage & business insurance, & mutual funds**

Associated with Clarica Financial Services Inc. and ˙Clarica Investco Inc., a Mutual Fund Dealer.
Clarica products are manufactured by Sun Life Assurance Company of Canada and distributed by Clarica Financial Services Inc.
Mutual Funds are distributed by Clarica Investco Inc. Clarica GICs are issued by Clarica Trust Company. © Copyright Sun Life Assurance Company of Canada, 2003

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இல்லம் ஒன்று உங்களுக்காக அமைந்திட...



ROYAL LEPAGE
Connect Realty
INDEPENTLY OWNED AND OPERATED, BROKER

**Ganesh Thangarajah**
*Sales Representative*
**416•994•9046**
*Bus: 416-284-4751*



ROYAL LEPAGE
Residential Real Estate Service
INDEPENTLY OWNED AND OPERATED, BROKER

**Murali Sivakumar**
*Sales Representative*
**416•624•7253**
*Bus: 905-275-9400*



ROYAL LEPAGE
Connect Realty
INDEPENTLY OWNED AND OPERATED, BROKER

**Raj Ariyam**
*Sales Representative*
**416•930•HOME**
*Bus: 416-284-5555*



**Sandlewood & Creditvie**
3 Bedroom, 3 Bathroom
Beautiful Brand New Home, Never Lived In, Double Garage
**$284,000**
**Call Murali**



**Midland & Steeles**
3 Bedroom, 3 Washroom
Close to TTC, Mall, School & Shopping
**$245,000**
**Call Raj**



**Hwy 50 & Hwy 7**
Semi-Detached
3 Bedroom, 2 Washroom
Excellent Location
**$289,000**
**Call Ganesh**



**Sandlewood & Creditvie**
3 Bedroom, 3 Bathroom
Beautiful Brand New Home, Never Lived In, Nice Layout
**$289,900**
**Call Murali**



**Scar. Golf Culb & Kingston**
3 Bedroom, 2 Washroom
Close to TTC, School and Shopping
**$159,000**
**Call Raj**



**Jane & Finch**
3 Bedroom, 1 Washroom
Close to TTC, School & Shopping.
**$165,900**
**Call Ganesh**



**Markham & Steeles**
4 Bedroom, 4 Bathroom
Hardwood in Main Floor, Walkout Basemnt With Separate Entrance
**$524,900**
**Call Murali**



**Finch & Staines**
4 Bedroom, 3 Bathroom
Brand New Never Lived in Home
Lots of Upgrades
**$380,000**
**Call Raj**




**Beatiful Home In Woodbridge**
4 Bedroom, 3 Bathroom
Finish Basement with Sep.Entrance
Walk to Shopping
**$385,900**
**Call Ganesh**



**Martingrove & Steeles**
3 Bedroom, Brand New 2 Bedroom Basement with Separate Entrance
Life long metal roof, New windows, Close to TTC, School and shopping.
**$319,900**
**Call Mathi**



**Finch & McCowvan**
Condo Townhouse
3 Bedroom, 3 Washroom
Close to TTC, Mall, School & Shopping
**$249,900**
**Call Kirew**



**Mccowan & 16th Ave**
Brand New House
3 Bedroom, 3 Washroom
Close to TTC, School & Shopping.
**$289,900**
**Call Ravi**




**Midland & Eglinton**
3 Bedroom, Finished 1 bedroom Bbasement with Separate Entrance
Close to TTC, School and Shopping
**$282,000**
**Call Mathi**



**Queen & Bramalea**
3 Bedroom, 2 Washroom
Close to TTC, School and Shopping
**$154,000**
**Call Kirew**



**Markham & Denison**
3 Bedroom, 3 Washroom
Close to TTC, School & Shopping.
**$289,900**
**Call Ravi**




**Airport & Sandlewood**
Brand New House, Never Lived In
4 Bedroom, 3.5 Bathroom
Hardwood floor
**$398,000**
**Call Mathi**



**Detached House in Brampton**
4 Bedroom, 3 Bathroom
**$299,000**
**Call Kirew**



**Mccowan & 14th Ave.**
5 Bedroom, 4 Bathroom
Upgraded Kitchen Cabinets
Parquet & Ceramic Floor
**$434,900**
**Call Ravi**



HOMELIFE HIGHER STANDARDS
**Gold Pacific Realty Inc.**

**Kirew Kanagasabai** BE.Sc
*Sales Representative*
**416•844•SELL**
*Bus: 416-490-1068*



HOMELIFE HIGHER STANDARDS
**Miracle Realty Ltd.**

**Mathi Mahalingam** B.A Sc.
*Sales Representative*
**416•624•1503**
*Bus: 416-747-9777*



HOMELIFE HIGHER STANDARDS
**HomeLife GTA Realty Inc.**

**Ravi R. Raveendran** BSc.(Eng)
*Sales Representative*
**416•817•8479**
*Bus: 416-321-6969*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org